Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
மார்.20-26,1994
ரூபா 8/50
දිනමුරසු වාරමලර්

# வாரமலர்
# தினமுரசு


THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 43



## 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு'

### உள்ளூராட்சித் தேர்தல்கள் வெளிப்படுத்திய முடிவு!

அரசியல் அலசல்



## தூதுக்குழு விஜயங்களும்-தோன்றிவரும் எதிர்பார்ப்புக்களும்!

—எக்ஸ்ரே ரிப்போர்ட்

## தண்ணீரில் பாய்ந்த மனித மலை

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

# பாவத்தின் சம்பளம் மரணம்

"இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி; நான் போகிறேன், நீங்கள் என்னைத் தேடி உங்கள் பாவங்களிலே சாவீர்கள், நான் போகிற இடத்துக்கு வர உங்களால் கூடாது என்றார்." யோவான் 8:21.

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார். உலகத்தாரோ பாவத்தையும் இப்பிரபஞ்சத்தையும் அவரிலும் அதிகமாக நேசித்து இவற்றையே தங்கள் பாக்கியமாகத் தெரிந்துகொண்டார்கள். ஆகையால்தான் ஆண்டவர் நான் போகிறேன். நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரமுடியாது என்றார். அவர் போகிற இடம் பரிசுத்தம். பாவிஅதில் பிரவேசிக்க முடியாது. மனிதர் பாவத்தை தெரிந்துகொண்டதால் பாவத்திலேதான் மரிக்க வேண்டும்.


இப்படி மரிப்பதற்கு தேவன் காரணரல்ல. கர்த்தர் எவனையும் நரகத்தில் போடுகிறதில்லை. பாவி தானே தனக்கு இத் தண்டனையை நியமித்துக் கொள்கிறான். யூதாஸ்காரியோத்தின் விஷயத்தை பார்ப்பின், அவன் ஆண்டவரை காட்டிக்கொடுத்தபோது அவனைப் பிலாத்து தூக்கில் போடவில்லை; பிரதான ஆசாரியனும் அத்தண்டனையை விதிக்கவில்லை. அருமை இரட்சகரோ, அப்போஸ்தலரோ அவனை கொலை செய்யவில்லை. அவன்தானே தற்கொலை புரிந்தான். தன் பாவத்தில் மரித்தான். இதுவே பாவத்தில் ஜீவிப்பவனது முடிவு.

பாவம் முதலில் இன்பமாய் தோன்றி, மெல்ல மெல்ல நமது முழு ஆத்துமாவையும் கெடுத்து நாசமாக்கும். நாம் பாவத்தில் மரிப்போம்.

ஆகையால் நாம் பாவத்துக்கு மரித்து, நம்மை பாவ சுபாவத்தினின்று மீட்கவந்த இயேசு பெருமானண்டை மனஸ்தாபத்தோடு வருவோம். அவரோடு இவ்வுலகத்தில் பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்து, அவர் நமக்கும் ஆயத்தஞ் செய்திருக்கும் உன்னத வீட்டில் நித்தியமாய் அவரோடானந்திக்க கிருபை செய்வாராக.

வே.ஜெசி கிருபை மலர்
நீர்கொழும்பு.

# ஆன்மீகம்



## நபிகள் நாயகத்தின் மணிமொழிகள்

- கோபம் வரும்போது தன்னைத் தானே அடக்கிக் கொள்பவனே உண்மையான வீரனுள்ளவன்.
- உன் எண்ணம் எப்படி உள்ளதோ அப்படியே உன் பலனும் உனக்குக் கிட்டும்.
- என்னுடைய ஒரு பேச்சு உங்களுக்குத் தெரிந்திருந்தாலும் அந்தப் பேச்சை மற்றவர்களுக்கு எத்தி வையுங்கள்.
- உண்மையே கூறுங்கள். அது மனிதர்களுக்கு கசப்பாக இருப்பினும் சரியே.
- எவர் கல்வியைத் தேடிச் செல்கின்றாரோ அவருக்கு உணவளிக்கும் பொறுப்பை அல்லாஹ்வுத்தஆலா ஏற்றுக் கொள்கின்றான்.
- உங்களுக்குக் கற்றுக் கொடுத்த ஆசிரியருக்கு கண்ணியம் செலுத்துங்கள்.
- தூய்மையாக இருந்துகொள்ளுங்கள். இஸ்லாம் பரிசுத்தமான மார்க்கமாகும்.
- உங்கள் வாய்களை எப்போதும் சுத்தமாகவே வைத்திருங்கள்.
- மனிதனுடைய பெருந்தன்மை அவனுடைய நற் குணங்கள்.
- எல்லாவற்றிலும் நல்ல குணங்கள் உள்ளவரே மனிதர்களில் சிறந்தவராவார்.
- நல்ல குணங்கள் இருப்பது நல்ல விதிக்குக் காரணமாகும்.
- கெட்ட குணங்கள் இருப்பது கெட்ட முடிவையே தரும்.
- எவரொருவர் உங்களை நாடி உங்களுடன் சேருவதற்கு வந்தாலும் நீங்கள் அவருக்கு கண்ணியம் அளியுங்கள்.

மசூத் அஹமத்-காத்தான்குடி-05.

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
ஆக்கங்கள் அனுப்பி வைக்கும்
அன்புள்ளங்கள் சிலர்
பிரசுரமாக தகுதியில்லையேல்
திருப்பி அனுப்புமாறு தெரிவிக்கிறார்கள்.

வேலைச் சுமைகள் காரணமாக
தற்போதைய நிலையில் உடனடியாக
திருப்பி அனுப்ப முடியாத நிலை.
எனவே அதனால் இயலவில்லை.

புதிய எழுத்தாளர்கள் சிலர்
அனுப்புகின்ற ஆக்கங்கள்
கதைக்கான முயற்சிகளாக
உள்ளனவே தவிர
கதைகளாக இல்லை.
எனவே செழுமை செய்து
வெளியிட வேண்டிய நிலை வருகிறது.
எனினும்-முடியுமானவரை
புதியவர்களுக்கு களம் கொடுக்க
முரசு ஆவன செய்துகொண்டேயிருக்கிறது.

எழுதியனுப்புவதெல்லாம் பிரசுரமாகவேண்டும்.
என்று எதிர்ப்பார்ப்பது
எவ்வகையிலும் நியாயம் அல்ல.

புதிய எழுத்தாளர்களும் சரி
வளர்ந்து வரும் எழுத்தாளர்களும் சரி
முரசின் களத்தில் சமமானவர்கள்.

சமீபகாலமாக ஹரீரா அனஸ்
எழுதிவரும் கதைகளில்-அவர்
சொல்ல வரும் விஷயங்கள்
சமூக அக்கறையை பிரதிபலிக்கின்றன.
சமகால நடப்புக்களில் இருந்து
கதைக்கான கரு எடுக்கப்படும்போது
முரசு அதனை உற்சாகமாய் வரவேற்கும்.

வாசகர் பலம் மாபெரும் பலம்.
அதுவே முரசு நிற்கும் தளமும் ஆகும்.
எனவே-
எவரையும் சாராமல் முரசு
தனது தனித்துவமான பாணியோடு
தொடர்ந்து முன்செல்லும்.
திறமையுள்ளவர்களை தட்டிக்கொடுக்கும்.
வித்தியாசமான முயற்சிகளை வரவேற்கும்.

அன்புள்ளங்களின்-
ஆலோசனைகளை முரசு செவி மடுக்கும்.
ஆதரவுக்கரங்களை முரசு முத்தமிடும்.
ஆனால் பண்டிதத்தனமான
வியாக்கியானங்களுக்கு
முரசு செவியும் கொடுக்காது-
கருத்திலும் கொள்ளாது.

சிலர் இருக்கிறார்கள்-
தமது கருத்துக்களை-
பிறர் கருத்துக்களாகச் சொல்லி
கருத்துக் கணிப்பாளர்களாக
காட்டிக்கொள்வார்கள்.
அவ்வாறானவர்கள் சிலரும் முரசுக்கு
ஆலோசனை சொல்ல முயன்றதுண்டு.

மிகக் குறுகிய காலத்தில்
மாபெரும் வாசகர் பலத்தை
முரசு பெற்றுள்ளது.
அந்த வாசகர்களின் மடல் வழியான
உணர்வுகளோடும்-உற்சாகத்தோடும்
முரசுக்கு இடையறாத தொடர்பும் உண்டு.

எனவே-முரசின் கருத்துக்கணிப்பாளர்கள்
முரசின் வளர்ச்சியிலும் வெற்றியிலும்
பங்காளர்கள் வாசகர்களே.
வேறு-கணிப்பாளர்கள் முரசுக்கு
எப்போதும் தேவைப்படமாட்டார்கள்.

■

திருமலையில் ஒரு குழுவினர்
முரசு தம்மைப்பற்றி விமர்சித்துவிட்டது
என்ற கோபத்தில் துள்ளினார்களாம்.
ஒலி பெருக்கியிலும்
"புரட்சிகரமாய்" உளறியிருக்கிறார்கள்.
முரசுக்கு
அவர்களை விளம்பரம் செய்யுமாறு
நாம் வேண்டுகோள் விடுக்கவில்லை.
எனினும் செய்துவிட்டார்கள். நன்றி!
துள்ளுவதோ அழகு?
உண்மைகள் சமயங்களில் சுடும்.
துடிப்பதாலும்-துள்ளுவதாலும்
சுட்டிருக்கிறது என்பது புரியும்.

■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## தினமுரசு போன்: 820265

### கவிதைப்போட்டி இல-40

வெற்றி முகம் கண்டதுவும்—வியக்கப்பட்டவையும்.

**பரிசுக்குரிய கவிதை**

**மனித நேயம்**

உரத்து நாங்கள் குரைத்தாலும்
நன்றி இன்னும் வாழ்கின்றது.
உயர நீங்கள் பறந்தென்ன
மனித நேயம் தாழ்கின்றதே!

செ. வாமதேவன்
பெரியகல்லாறு.

**வியக்கப்பட்டவை**

**அன்றும், இன்றும்**
மனிதன் தெய்வமானது
அன்று,
மனிதன் மிருகமாக-மிருகம்
மனிதரானது
இன்று,
அதுவோ இதன்
சான்று!
ஜி.எஸ்.றங்கன்
ஏறாவூர் த.ம.வி.

**அன்பின் சின்னம்**
யார் இட்டால்
என்ன....?
முத்தம்-அன்பின்
சின்னம்...!
செ.கீதயாலன்
ஹாலி-எல.

ம்....
கொஞ்சம் திற
உன்
வெள்ளை மனதை
ஒருமுறை
பார்க்க வேண்டும்
ஏ.ஆர்.எம்.நிஸ்வான்
புத்தளம்.

**தேசத்திற்கு வெளியே..!**
எங்களை
விட்டு விடுங்கள்..!
உங்கள்
ஆயுதக் கலாசாரங்களுக்குள்
நாங்கள் மட்டும்
அந்நியர்கள்..!
ந.ரமணேஸ்வரன்-தம்பிலுவில்-02.

**நண்பர்கள்**
நித்தம் நடைபெறும்
யுத்தம் தந்த
நண்பர்கள்.
பொ.உதயணன்
மட்டக்களப்பு.

யுத்த நாட்டில்
எஞ்சும் பிஞ்சுக்கு
அன்பு வைக்கும்
ஜீவனோ?
ஏ.நளினி
மட்டக்களப்பு.

**புரியவில்லை**
வேறுபட்ட
எமக்குள்ள ஒற்றுமை
ஒன்றுபட்ட
மனிதருக்கு ஏனில்லை?
எப்.லெனாட்குமார்
ஹப்புத்தளை.



**ஐயறிவில் சங்கமமோ?**
கடிவாளம் பிடிப்பவரோ,
மனநிலையில் மதிற்பூனை!
காலனவன் கவர் தொழிலோ,
எல்லையற்ற இறுமாப்பில்!
சந்ததியின் தலைவிதியோ
தடுமாறும் கும்மிருட்டில்!
தாய்ப் பாசம் மட்டுமிங்கே
ஐயறிவில் சங்கமமோ....?
பத்மினி சிவசுப்பிரமணியம்
மட்டக்களப்பு.

**புகலிடம்**
துப்பாக்கி முனையில்
துரத்தப்பட்ட மனிதம்
ஐயறிவில் புகலிடம்.
எஸ்.எஸ்.ஹமீட்-அக்குறணை.

**மிருகாபிமானம்> மனிதாபிமானம்!**
மனிதாபிமானம் மண்டியிட,
மிருகாபிமானம் மேவியதோ!
செல்வி.சுதர்ஷினி டேவிட்-மட்டக்களப்பு.

**படிப்பினை**
இனவாதம் பேசும்
இதயமில்லா மனிதருக்கு
இதுவும் ஒரு
படிப்பினையோ?
ச.மகாலிங்கம்-வெளிமடை.

**உயர்திணையே!**
மாதா, பிதா சுற்ற(ம்+அ)தை
வாழா திடை நடுவில் வதைத்தெடுத்த
மனித ரெல்லாம், அஃறிணையே!
வாழ வழி இன்றி அழும் குழந்தை
எந்தனுக்கு வாயில் உணவூட்டும்,
தாயில் சிறந்த இது எப்போதும்.
உயர்திணையே!
தர்ஷிக்கா கனகசிங்கம்-மட்டக்களப்பு.

**ஆயுதக் கொடூரத்தால்**
அழும்போது அணைக்கின்ற
அன்புக் கரங்களெலாம்
ஆயுதக் கொடூரத்தால்
அழிந்து-தான் போயிற்றா.
இறால்குழி சிவகுருநாதன்.

### கவிதைப் போட்டி இல-43




சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 26.3.1994.

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 43
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ், கொழும்பு-5

**நம்பிக்கைத் தேடல்**
மானிட நேயத்தேடலில்
எனக்கு நம்பிக்கையில்லை.
குழந்தைப் பூவின் இதழ்களில்
பாலமுதமணமா
கரிமருந்து நஞ்சின் நெடியா?
செல்வி சிவசுந்தரி சிவானந்தன்
மட்டுநகர்.

**நன்றி முத்தம்**
பாசமுத்தம் தந்தவளை
பாவ யுத்தம் கவர்ந்ததனால்
நேச முத்தம்
தருவதற்கும்
நீ
ஒரு ஜீவன்
இருக்கின்றாயே!
வை.சித்திக்கிருஷ்ணா-பாண்டிருப்பு-01.

**அன்பு**
போர் மேகம் சூழ்ந்தாலும்
கார் மேகம் வீழ்ந்தாலும்
பார் மீது தேவை-அன்பு
லின்னாஸ் சௌக்கத்
மக்கொன.

# வாசகர் சாலை

நாரதரின் எக்ஸ்ரே ரிப்போர்ட் பலத்த அதிரடி.. அங்குலிமாலா பற்றி ராஜதந்திரியின் அலசல் பிரமாதம். வாராவாரம் கொலை விழும் நேரத்தை எதிர்பார்க்கும் அன்பின் தினமுரசு வாசகன்.

ஆர்.சுரேஷ்-கலஹா.

•

தினமுரசில் இடம்பெறும் அரசியல் கட்டுரைகள் அனைத்தையும் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. பக்க சார்பில்லாமல் உண்மைகளை எடுத்துரைப்பதில் முரசுக்கு நிகர் முரசுதான்.

எம்.ஏ.எம்.முஸ்தபா-மருதமுனை-03.

•

நெஞ்சமதில் மஞ்சம் கொண்ட மலரே! என்றென்றும் வாடாமல் மலர்வாயாக.

சென்ற வாரம் உள்ளூராட்சி தேர்தல் பற்றிய அலசல் வெகு ஜோர். யதார்த்த நிலையை தொட்டுக் காட்டியது.

புதுமை மிகு தகவல்கள் உனக்கு எங்கிருந்து எட்டுகின்றன என்பதே புரியாத புதிர்.

எம். நிஸா முஸம்மில்-தொடம்வத்தை.

•

அன்பின் தினமுரசே! இது வரைக்கும் எந்த பத்திரிகையும் வழங்காத பல செய்திகளை திரட்டித் தீஞ்சுவையுடன் தருகிறாய். அதிலும் அதிரடி அய்யாத்துரை, அலசுவது ராஜதந்திரி, எக்ஸ்ரே ரிப்போர்ட், மகா பாரதம் இவையாகவும் என்னை கவர்ந்து விட்டன. வாராவாராம் தவறாமல் வாசிப்பதில் நானும் ஒருவ்னாகி விட்டேன்.

கே.மனோகரன்-நமுனுகுல.

•

என் இனிய தினமுரசே...

நீ சுமந்து வரும் மகாபாரதம் என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தி விடுகிறது. அத்தோடு ரசிகன் எழுதும் கொலை விழும் நேரம் என்னை மிகவும் கவர்ந்தது. அருள் ஜுவலர்ஸ் அள்ளி தரவிருக்கும் தங்க நகைப் பரிசுத் திட்டம் இன்னும் எங்களை அளவில்லா ஆனந்தக் கடலில் ஆழ்த்திவிட்டது. தினமுரசே, நீ வாழ்க. உன்னால் என் ஆசையும் நிறைவேறும். இனிய முரசு.

ஆர்.ஜீவராணி-வெள்ளம்பிட்டிய.

•

தினமுரசே!

என் இதயம் கவர்ந்த அன்பான தினமுரசே, நீ வாரத்தில் ஒரு முறை மலர்ந்தாலும் என் இதயத்தில் உன்னை தினமும் நினைக்க வைக்கிறாய். வாரத்தில் ஒரு தடவை உன்னை தவறவிட்டால் எனது இதயம் இருண்டு விடும். நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் தேனினும் இனியவை. வாழ்க உன் சேவை.

அ.ஜெயந்தி-கொட்டாஞ்சேனை.

எத்திக்கும் பரவலாய், தித்திக்கும் முரசே! முத்தான இலக்கிய நயம், சத்தான கருத் தோவியங்கள், அறிவுக்கு வித்தான அம்சங்கள், அனைத்தையும் உள்ளடக்கி, எம் சித்தமதை நீ பிடித்தாக்கி விட்டதை எழுத்திலுரைத்திட சத்தியமாய் வார்த்தைகளுக்கு பஞ்சம் தான். மொத்தத்தில் கடந்த வாரமும், வழமைபோல் நீ சூபர் தான்.

மும்தாஜ் அன்வர் ,:,பஸ்மி, அன்வர், ,:,பஸ்லி அன்வர்-கொழும்பு-14.




•

தினமுரசு வாரமலரில் இடம் பெறும் அம்சங்கள் சுப்பர். என்னைக் கவர்ந்தது தேன்கிண்ணம். நீ வாரா வாரம் தேனாய் பல அம்சங்களை சுமந்து வர உன்னை அன்புடன் வாழ்த்துகிறேன்.

எஸ்.எப்.எம்.ரிஷாபி-நுவரெலியா.

•

- சிந்தனைக்குரிய முரசாம்
சுவை மிகுந்த முரசாம்
செய்திகளில் புதுமை முரசாம்!
ஜோரான கவிதை தரும் முரசாம்
என்றும் வளர்க நம் முரசாம்
என்று வாழ்த்துகிறேன்.

செல்வி.மா.ஜோதிலக்சுமி
போயத்தலாவ.

•

அன்பின் முரசே!

அனைவர் உள்ளத்திலும் அரசாட்சி செய்யுமளவிற்கு அதிகாரம் படைத்துவிட்டாய். அன்புடன் உன்னை அனுதினமும் வரவேற்கிறோம்.

செல்வன்.க.முரசொலி மாறன்
அக்கரைப்பற்று-09.

•

அன்பின் தினமுரசே!

வாரம் ஒரு முறை மலர்ந்தாலும் எம் மனதை மலர வைக்கும் வள்ளுவர் குரளுடன் அமைந்த இலக்கிய நயம் என் மனதை மிகவும் நெகிழ்ட்டுகிறது. உனக்கு என் பல்கோடி வந்தனங்கள்.

செல்வி அம்பிகா-கொழும்பு-13.

•

தினமுரசே, நாங்கள் உன்னை எந்நாளும் நேசிக்கின்றோம்.

முகைதீன், சாலி, சுபைர்-அம்பலாந்துறை.

•

அன்பின் முரசே!

உன்னில் வெளிவரும் அத்தனையும் பொன் முத்துக்கள். உலக ரவுண்டப், தகவல்பெட்டி, எக்ஸ்ரே ரிப்போர்ட், மருத்துவ விந்தைகள் இன்னும் எத்தனை எத்தனை? அத்தனைகுக்கும் முத்தாரம் சூடுவது ரசிகனின் "கொலை விழும் நேரம்" தொடர்.

எஸ்.தாஜுன் நிஸா-பிலியந்தலை.

•

அன்பு முரசே,

உனக்கு என் அன்பு முத்தங்கள். வெள்ளி தினத்திலே ஒளிச்சுடர்கள் போல் முத்தான பொன்னெழுத்துக்களால் முத்தான அம்சங்களை வாரி வழங்கும் நீ என்றென்றும் வாழ்க! வளர்க!

பர்மிளா பிவ்ஜீ-உடத்தலவின்ன.

•

# பிரித்தானிய லுவிசாம் நகரமேயரின் இரகசிய விஜயம்!

# யாழ் சென்று புலிகள் அமைப்பினரோடும் பேச்சு!!

## சமாதான நடவடிக்கைக்கு உகந்த நேரம் என்று பேட்டி

இலண்டனில் உள்ள லுவிசாம் நகர மேயர் திரு.சின்னமணி சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

இலண்டனில் உள்ள இலங்கைத் தமிழர்களது வேண்டுகோளுக்கிணங்க அவர் இலங்கைக்கான தனது விஜயத்தை மேற்கொண்டபோதும் அது இரகசிய மானதாகவே வைக்கப்பட்டிருந்தது.

இந்திய வம்சாவளி மக்களின் பிரித்தானிய அமைப்பின் தலைவராகவும் திரு.சின்னமணி இருந்து வருகிறார்.

திரு.சின்னமணியின் இலங்கை விஜயம் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தமையால் இதுவரை இங்குள்ள பத்திரிகைகள் எதிலும் வெளிவரவில்லை.

இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு இலண்டன் திரும்பிய திரு.சின்னமணி பிரித்தானிய பாராளுமன்றத்தில் பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றை நடத்தினார். பிரித்தானிய பார்ாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் அம் மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

தனது இலங்கை விஜயம் பற்றி அங்கு எடுத்துக்கூறிய திரு.சின்னமணி, தனது இலங்கை விஜயத்தின்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க உட்பட, பாதுகாப்புப் படையின் முக்கிய அதிகாரிகளையும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், பிரித்தானிய தூதரகம் ஆகியவற்றுக்கும் சென்று தனது விஜயத்தின் நோக்கம் பற்றி விளக்கியதாகக் கூறியுள்ளார். அமைச்சர்கள் சிலரையும் சந்தித்ததாக தெரிவித்த மேயர் சின்னமணி அவர்களது பெயர்களை குறிப்பிடவில்லை.

யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்து புலிகள் அமைப்பின் முக்கிய தலைவர்களையும் அவர் சந்தித்து பேச்சு நடத்தினார்.

ஆனால், இதுவரை லுவிசாம் நகர மேயர் திரு.சின்னமணியின் யாழ் விஜயம் பற்றி புலிகள் அமைப்பினர் எவ்வித செய்திக் குறிப்பையும் வெளியிடவில்லை.

மேயர் சின்னமணி வடக்கில் தான் நேரில் கண்ட நிலமைகள் பற்றிக் கூறும்போது, "அங்கு அகதிகளின் நிலை மிக மோசமாக உள்ளது. அரிசி, மா ஆகியவற்றை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் போதும், சிறுவர்கள் போசாக்கின்மையால் வாடுகின்றனர்.

"அகதிகளுக்கான தங்குமிடங்கள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. மழைக் காலத்தில் அங்கு வாழ்வது கஷ்டமானதாக இருக்கிறது.

"யாழ் பொது மருத்துவமனை சுத்தமான தன்மையோடு நன்கு பராமரிக்கப்படுகிறது. எனினும் வைத்தியர்களின் பற்றாக்குறை நிலவுகிறது. முழுப் பிரதேசத்திலும் ஒரே ஒரு சத்திரசிகிச்சை நிபுணர் மட்டுமே இருக்கிறார். அவருக்கு வேலைப் பளு அதிகம். என்னோடு பேசுவதற்கு ஒரு நிமிடத்தைக்கூட அவரால் ஒதுக்க முடியாத அளவுக்கு வேலைகள் அதிகமாக உள்ளன.

"இடையிடையே படையினரின் குண்டு வீச்சு, ஷெல் அடிகள் நடைபெறுகின்றன. எனினும் பொது மக்களின் அன்றாட நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன", என்று மேயர் திரு.சின்னமணி கூறினார்.

பொஸ்னியா, சோமாலியா மற்றும் வன் செயல்கள் நடைபெறும் நாடுகளில் உலகின் கவனம் செலுத்தப்படுகிறது. ஆனால் இலங்கையில் உள்ள அகதிகளின் தேவைகள் குறித்து அந்தளவுக்கு கவனம் செலுத்தப்பட வில்லை என்று மேயர் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகம் இலங்கை அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும் அவர் பத்திரிகை யாளர் மாநாட்டில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரச்சனையில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரையும் தனது இலங்கை விஜயத்தின் போது சந்தித்ததாகவும், சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ள இது உகந்த சமயம் என்று தான் கருதுவதாகவும் லுவிசாம் நகர மேயர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கிழக்கில் வதந்திகள் பரப்பி வாக்குவேட்டை!

## புலிகள் அமைப்பு குற்றச்சாட்டு!!

சமீபத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் புலிகளின் பெயரிலும் கிழக்கில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. பொதுமக்களை வாக்களிக்கும்படி புலிகள் கூறுவதுபோல் அந்தச் சுவரொட்டிகளில் வாசகங்கள் காணப்பட்டன.

ஒரு சில சுயேச்சைக் குழுக்கள் தமக்கு வாக்களித்தால் புலிகள் அமைப்பினரின் மறைமுகமான ஆதரவு தமக்கு இருக்கிறது என்பதுபோல் பிரச்சாரமும் செய்தனர்.

யாழ்ப்பாணத்தில் கடந்தவாரம் புலிகள் அமைப்பினரால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில், "கிழக்கில் நாட்டுப் பகையாளிகள் வதந்திகளை பரப்பி வாக்கு வேட்டை" நடத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தேர்தலில் மோசடிகள் நடைபெற்ற தாகவும், மக்கள் மிரட்டப்பட்டதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஏனைய தமிழ் அமைப்புக்களை தேசத்துரோகிகள் என்று இதுவரை கூறிவந்த புலிகள் அமைப்பினர் இப்போது "நாட்டுப் பகையாளிகள்" என்று கூறத்தொடங்கி யுள்ளனர். புலிகள் அமைப்பினரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தூய தமிழ் பிரயோகத்தின் அடிப்படையில் அவ்வாறு புதிய பதப் பிரயோகம் உபயோகிக்கப்படு வதாகத் தெரிகிறது. ■

## போராட்டத்தின் பளு மக்கள் மீது!

## புலிகளின் தலைவர் பிரபா பேச்சு!!

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 17 நாடக, இசைக் கலைஞர்களுக்கு கடந்த 10ம் திகதி யாழ்ப்பாணத்தில் வைத்து பிரபாகரன் பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

அவர்கள் 17 பேரும் கடந்த ஒரு மாதகாலமாக யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பினரின் கொள்கைகளை விளக்கி நாடகம், தெருக்கூத்து போன்றவற்றை நடத்தி வந்தனர். அவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சியில் உரையாற்றிய புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன், "அரச அடக்கு முறையின் அழுத்தங்கள் அனைத்தையும் எமது மக்கள் தாங்கி நிற்கிறார்கள். போராட்டத்தின் பெரும் பளுவையும் அவர்களே சுமந்து நிற்கிறார்கள். எத்தனையோ அவலங்கள் துயரங்கள் மத்தியிலும் துணிந்து நிற்கிறார்கள். எமது மக்களின் போர்க்கால அனுபவங்களை கலை இலக்கிய வடிவங்களாக சித்தரிக்க வேண்டும். கலை இலக்கியங்கள் மூலமாக போராட்ட உறுதியை கட்டியெழுப்ப வேண்டும்." என்று கூறினார்.

மரபுவழி வந்த கலை வடிவங்கள் கால ஓட்டத்திற்கு ஏற்ப புதுப்பிக்ககப்படவேண்டும். பழமையில் புதுமை கலந்து கலை வடிவங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும்" என்றும் பிரபாகரன் தனது உரையின் போது குறிப்பிட்டார்.

## ஜூலையில் நடக்குமா தேர்தல்?

தென் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றால் எதிர்வரும் ஜூலை மாதத்தில் பாராளுமன்ற பொதுத் தேர்தல் நடத்த அரசாங்கம் தீர்மானிக்கக்கூடும் என்று ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

திரு.அநுரா பண்டாரநாயக்கா, திரு.காமினி திசாநாயக்கா ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டபின் வெற்றி வாய்ப்புக்கள் தமக்கு அதிகம் இருப்பதாக ஐ.தே.கட்சி வட்டாரங்கள் கருதுகின்றன. அதனை பரிசீலித்துப் பார்க்கும் களமாக எதிர்வரும் தென் மாகாண சபைத் தேர்தல்கள் அமையப் போகின்றன.

தென் மாகாண சபையை ஐ.தே.கட்சி பெரும்பான்மை பலத்தோடு கைப்பற்று மானால் சூட்டோடு சூடாக பொதுத் தேர்தலையும் நடத்திவிட அரசாங்கம் தீர்மானிக்கக்கூடும். ●

## உள்ளூராட்சித் தேர்தல்களில் இப்படியும் ஒரு சாதனை!

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளில் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியும் அடக்கம். கருங்கொடித்தீவு பகுதியில் அக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட அப்துல் கபுஹான் என்பவர் பெற்றுள்ள மொத்த விருப்பு வாக்குகள் மூன்று. வாக்காளர் ஒருவர் மூன்று விருப்பு வாக்குகளை செலுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

சுயேச்சைக் குழுவாக போட்டியிட்டவர்களில் நிந்தவூர் பற்று வேட்பாளராக நின்ற செல்லத்துரை விஜயரெத்தினம் என்பவர் ஒரு சாதனை படைத்துள்ளார். அவர் பெற்ற மொத்த விருப்பு வாக்கு ஒன்று (01). திரு. செ. விஜயரெத்தினம் தனக்குரிய விருப்பு வாக்கில் மீதி இரண்டையும் வேறு வேட்பாளருக்கு செலுத்தியிருக்கலாமோ என்று ஒரு சந்தேகம்.

## ஊனமுற்றோருக்கு உதவும் சங்கம்!

கிளிநொச்சியில் உள்ள ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் தனது 4 ஆண்டுகள் பூர்த்தியை சமீபத்தில் கொண்டாடியது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 690 பேர் ஊனமுற்றவர்கள் இருக்கிறார்கள். அதிலே 330பேர் அச்சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர்.

அவர்களில் 16 பேருக்கு கொழும்பில் செயற்கை கால் பொருத்துவதற்கு சங்கம் உதவி செய்துள்ளது. ஊனமுற்ற 15 இளம் பெண்களுக்கு தொழில் பயிற்சி வழங்கப்படுகின்றது.

## ஆரியரட்ண மீண்டும் யாழ் விஜயம்!

சர்வோதய இயக்கத் தலைவர் திரு.ஆரியரட்ண மீண்டும் யாழ்ப்பாணம் செல்லவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம்முறை யாழ் செல்லும்போது பௌத்த மதகுருமார் ஐந்துபேரையும் அவர் தன்னுடன் அழைத்துச் செல்வார் என்றும், அதற்கு புலிகள் அனுமதி கொடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

## மலேரியா தடுப்பு வாரம்

யாழ் மாவட்டத்தில் மலேரியா நோய் வேகமாகப் பரவி வருகிறது.

அதனையடுத்து இம்மாதம் 18ம் திகதி முதல் 25ம் திகதிவரை யாழ் மாவட்டத்தில் மலேரியா தடுப்பு வாரம் அனுசரிக்கப்படுகிறது.

நுளம்புகளை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளும் சுகாதாரப் பகுதியினரால் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேவேளை எலிகளால் பரவும் நோய்களும் யாழ் குடாநாட்டிலும் அதிகரித்துள்ளதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ■

## மாத்தையாவின் தண்டனை ஒத்திவைப்பு!

## பிரபாவின் தீர்ப்புக்கு புலிகளுக்குள் எதிர்ப்பு!!

### 'இந்தியா டுடே' சஞ்சிகை வெளியிட்டுள்ள கணிப்பு!

**புலிகள் அமைப்பின் உள் பிரச்சனைகள் தொடர்பாக சமீபத்தில் வெளிவந்துள்ள 'இந்திய டுடே' சஞ்சிகை வெளியிட்டுள்ள புதிய தகவல்களும், கணிப்புகளும், கீழே தரப்படுகின்றன.**

இதுநாள் வரை இரும்புக் கரத்துடன் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த அமைப்பில் இப்போது ஆழ்ந்த அதிருப்தி அலை எழும்பியிருப்பதை பிரபாகரன் உணர்கிறார். வழக்கம்போல் ஈவிரக்கமின்றி அவற்றை அடியோடு கிள்ளி எறிய இப்போது அவரால் முடியவில்லை என்பது இந்திய புலனாய்வுத் துறையின் மதிப்பீடு.

கிட்டுவின் மரணத்திற்கு மாத்தையாவும் யோகி ரத்னமும்தான் காரணம் என்று குற்றம் சாட்டிய பிரபாகரன், இருவரையும் கைது செய்து விசாரித்து மாத்தையாவிற்கு மரண தண்டனை வழங்கினார். ஆனால் மாத்தையாவிற்கு புலிகளிடையே இருக்கும் செல்வாக்கினால் பிரபாகரன் பின்வாங்க வேண்டியதாயிற்று.,

இந்திய அமைதிகாப்புப் படைக்கு எதிராக ஒரு பிராந்தியத்தின் தளபதியாக இருந்து போரிட்டவர் மாத்தையா. அமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவராகவும் இருந்தவர். இவருடன் முறைத்துக் கொண்டதால்தான் கிட்டு ஐரோப்பாவிற்கு அனுப்பப்பட்டார். பிரபாகரனை எதிர்த்து கருத்துச் சொல்லும் துணிச்சலும் அந்தஸ்தும் மாத்தையாவிற்கு மட்டுமே இருந்தது.

இலங்கை அரசுடன் 1989-90ல் நடந்த பேச்சுவார்த்தையில் மாத்தையா கலந்து கொண்டார். ஈழப் பிரச்சனைக்கு இராணுவம்



தான் தீர்வு என்கிற பிரபாகரன் கருத்துக்கு எதிராக, அரசியல் தீர்வை மாத்தையா அப்போது ஆதரித்தார். ஆனையிறவில் நடந்த கடும் சண்டையில் இருவருக்கும் இடையேயான கருத்து வேறுபாடுகள் ஆழமாயின. மாத்தையாவுக்கு கொடுக்கப்பட்டிருந்த பதவிகள் அனைத்தையும் 1992 மே மாதத்தில் பிரபாகரன் பறித்துக்கொண்டார். அதிலிருந்து, விடுதலைப்புலிகளுக்கு பிடித்தது கெட்டகாலம்.

பிரபாகரனின் இரகசிய மறைவிடம் 1992 நவம்பரில் குண்டு வீசித் தாக்கப்பட்டது. தற்போது இவருக்கு நெருங்கியவராக உள்ள உளவுப் படைத் தளபதி பொட்டு அம்மனும் தாக்கப்பட்டார். அவரது மெய் காவலர் 1993 ஜனவரி 7ல் கொல்லப்பட்டார். ஜனவரி 16ம் திகதி கிட்டு பலியானார். இவையனைத்தின் பின்னணியிலும் மாத்தையா இருந்ததாக பிரபாகரன் கருதினார்.

மாத்தையாவின் பழைய நண்பர் மாணிக்கவாசகரின் 'ஒப்புதல் வாக்கு மூலத்தின்' அடிப்படையில் 120 ஆதரவாளர்களுடன் மாத்தையா, 1993 ஆகஸ்ட் இரண்டாம் திகதி கைது செய்யப்பட்டார். தனது புகழ்பெற்ற தளபதியையே விடுதலைப் புலிகளின் நீதிமன்றம் விசாரித்தது. சென்ற ஆண்டு டிசம்பர் 19ம் திகதி எதிர்பார்த்த தீர்ப்பும் வழங்கப்பட்டது. கிட்டுவின் சாவிற்கு மட்டும் காரணம் என்றில்லாமல் பிரபாகரனைக் கொல்லவும் மாத்தையா திட்டமிட்டிருந்ததாக குற்றம் சாட்டப்பட்டது. கிட்டுவின் நினைவு நாளன்று-ஜனவரி 16- மாத்தையாவுக்கு மரண தண்டனை என்று அறிவிக்கப்பட்டது.

முதல் முறையாக ஏக சக்ராதிபதியின் ஆணைக்கு விடுதலைப் புலிகளிடையே எதிர்ப்பு ஏற்பட்டது. நவம்பர் மாதம் பூநகரியில் இலங்கை இராணுவத்துடனான சண்டையில் கிடைத்த வெற்றிக்குப் பின், புலிகள் திரும்பிக் கொண்டிருக்கையில், அவர்களிடையே உட்பூசல் ஏற்பட்டு அதில் 200 பேர் இறந்து போனார்கள். சாவகச்சேரியில் ஜனவரி 6ம் திகதி தங்கள் சொந்த முகாமையே மாத்தையாவின் ஆதரவாளர்கள் தாக்கினார்கள். ஜனவரி 16ம் திகதி யாழ்ப்பாணத்தில் மாத்தையாவின் மரண தண்டனையை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

எதிர்ப்பு அலை கிளம்பியதால், மரண தண்டனையை பிரபாகரன் நிறுத்திவைக்க வேண்டியதாயிற்று. உட்பூசலும், மாத்தையா ஆதரவாளர்கள் வெளியேற்றமும் பிரபாகரனை ஒருபுறம் அச்சுறுத்துகின்றன என்றால், மறுபுறம் தண்டனையை நிறைவேற்றாவிட்டால் ஏற்படக்கூடிய அவமானத்தை ஜீரணிக்கவும் முடியாது.

ஆனால், இலங்கையைப் பொறுத்த வரை, இந்திய உளவுகள் சரியாக இருப்பதில்லை. குற்றம் சாட்டப்பட்டபடி, மாத்தையா 'ரா'வின் ஏஜெண்ட் என்றால், மாத்தையா மர்மம் மேலும் ஆழமாகலாம். ■

## மலையாள மாந்திரீகம்



உலகளாவிய ரீதியில் 27 வருடங்களாகத் தொடர்ந்து உண்மைச் சேவையாற்றி வரும் உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K.சாமி, எஸ்ஸோஸியேட் பிரைவேட் லிமிட்டெட்டாரின் சேவையில் கைரேகைகள், ஜாதகங்கள், மாந்திரீக ரீதியில் உங்கள் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தொழில் பிணக்குகளா? காதல் கிலேசங்களா? வசியங்களா? கணவர், மனைவி, குடும்பப் பிரச்சனைகளா? ஆஸ்த்துமா போன்ற தீராத நோய்களா? இரகசிய ஆண், பெண் நோய்களா? வெளியூர் வாய்ப்புப்பெற வேண்டுமா? என்ன குறை?

**P.K. SAAMY**
**ASSOCIATE PVT. LTD.,**
**33, Daily fair Complex,**
**NUWARA ELIYA.**

**Dial: 052-2508 & 3093**
**AND**
**072-26088, 078-61933**

FAX: 0094-523093

ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம். விஷேடமாக வெளிநாட்டு ஆடர்கள் உடன் கவனிக்கப்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்; துர்க்கையின் அக்கினிக் குண்டல பூஜையில் கலந்து உண்மை அறியலாமே.

*Phone: 052-2508, 052-3093, 072-26088, 078-61933, 078-71243.*

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்



## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்த தினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதி களையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சை யும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
*187, செட்டியார் தெரு, கொழும்பு 11,*
*போன்: 421398*


# ‘கூட்டணி வேண்டாம் ஜெயாவோடு’ தமிழக காங்கிரஸ் பிடிவாதம்!!

தருவது **தமிழகச் செய்திகள்** ஏழுமலை

**த**மிழ் நாட்டில் மதுரை மாவட்டத்தில் உள்ளது பழனியாண்டவர் கோவில்.

அங்குள்ள மூலவர் சிலையை மாற்றும் திட்டம் எதுவும் இல்லை. ஆனால் சிலைக்கு தங்கக் கவசம் சாற்றுவது என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா முடிவு எடுத்துள்ளார். அது மட்டுமன்றி பழனியை புனித நகராக்கும் திட்டத்தையும் தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.

தமிழகத்தில் சில ஆலயங்களில் தரப்படும் குங்குமம் தரக்குறைவாக இருப்பதால் நெற்றியில் புண் ஏற்படுவதாக புகார் வந்துள்ளது. அதனைப் போக்கும் விதத்தில் அந்தந்த தேவஸ்தானங்களே குங்குமம் தயாரித்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மதுரை மீனாட்சி அம்மன் ஆலய கும்பாபிஷேக குழுவொன்றும் விரைவில் அமைக்கப்படவுள்ளது. ■

**எ**திர்வரும் மே மாதம் 26ம் திகதி தமிழ்நாடு, சென்னையில் உள்ள மயிலாப்பூர், மற்றும் பெருந்துறை சட்டப் பேரவை தொகுதிகள் இரண்டுக்குமான இடைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

மயிலாப்பூர், பெருந்துறை தொகுதிகள் இரண்டிலும் அ.இ.அ.தி.மு.க கடந்த தேர்தலில் வெற்றியீட்டியிருந்தது. இரண்டு சட்டப் பேரவை தொகுதிகளினதும் உறுப்பினர்களும் இறந்துவிட்டதால் இப்போது இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

மயிலாப்பூரில் அ.இ.அ.தி.மு.கவும் காங்கிரஸ் கட்சியும் போட்டியிடவுள்ளன. வை.கோ. தி.மு.க, போட்டியிடுமா என்று இதுவரை தெரியவில்லை.

பெருந்துறைத் தொகுதியில் தி.மு.க. ஆதரவோடு கம்யுனிஸ்ட் கட்சி போட்டியிடுகிறது. அங்கும் வை.கோ அணி போட்டியிடுமா என்பது தெளிவாகவில்லை.

காங்கிரஸ், அ.இ.அ.தி.மு.க. கூட்டு ஏற்படும் சாத்தியம் பற்றிப் பேசப்பட்டு வருகிறது.

தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. வாழைப்பாடி ராமமூர்த்தி அ.தி.மு.கவுடன் கூட்டு வேண்டவே வேண்டாம் என்று கூறிவருகிறார்.

ஆனால் தமிழக காங்கிரசில் ஒரு பகுதியினர் கூட்டு அவசியம் என்று பிரதமர் நரசிம்மராவிடம் தெரிவித்துள்ளனர்.

பிரதமரும் கூட்டை விரும்புவதாகவே தெரிகிறது.

தமிழக காங்கிரசைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் தங்கபாலு ஜெயலலிதாவின் ஆதரவாளர். அவருக்கு மத்திய அரசில் மந்திரிப் பதவி கிடைத்துள்ளது.

தமிழக காங்கிரஸ் தலைவர் திரு.வாழைப்பாடி ராமமூர்த்திக்கு மந்திரிப்பதவி கிடைக்கப் போவதாக பேசப்பட்டது. ஆனால் ஜெயலலிதாவின் கோபத்தை சம்பாதிக்க விரும்பாத மத்திய அரசு ராமமூர்த்திக்கு மந்திரிப்பதவி கொடுக்கவில்லை.

திரு.ராமமூர்த்தி காவிரி நீர் பிரச்சனையில் தமிழக முதல்வரின் நிலைக்கு ஆதரவாக தனது மத்திய மந்திரிப் பதவியை முன்னர் இராஜினாமா செய்தவர். இப்போது மீண்டும் அவர் மந்திரியாக முதல்வரே தடையாக உள்ளார். ■

## கருணாநிதி சொத்து பற்றி விசாரணை தேவை — வைகோ





## முகவர்கள் தேவை

கஹவத்தை, தியத்தலாவ, தெமோதர, நொச்சியாகம, மினுவாங்கொட, எல்பிட்டிய, மீரிகம, மருதங்கடவெல, பெரியகுளம், ரதிகம, றம்படகல்ல, றங்கல, ஹமம்பொல, கரந்தெனிய.

மேற்காணும் ஊர்களில் தினமுரசு விற்பனை செய்வதற்கு முகவர்கள் கோரப்படுகின்றார்கள். முற்பணம் செலுத்தக்கூடிய முகவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

CIRCULATION MANAGER
THINAMURASU
88/14, Somadevi Place,
Kirilapone, Colombo-6.
Phone- 820265



## நரைமயிர் கறுப்பாகிறது புதுமை ஆனால் உண்மை

வட இந்தியாவில் தேர்ச்சி பெற்ற டாக்டர் ஒருவரால் 10 வருடகாலமாக பரிசோதனை செய்து தயாரிக்கப்பட்டது.

மெடிக்கல் ஒயில் விலை ரூபா 280/=

நீங்கள் விரும்பிய எண்ணெயுடன் கலந்து பாவிக்கலாம்.

***கிடைக்குமிடங்கள்:***

UVA MEDICALS , UDAPUSSELLAWA.
CITY DRUGS, NO. 93, OLCOTT MAWATHA, (OPPOSITE RAILWAY STATION) PETTAH
PRAME MEDICAL, 46- PERADENIYA ROAD, KANDY.
LANKA MEDICALS, MAIN STREET, RATNAPURA.
GOMES PHARMACY, BALANGODA
ARAVINDA TRADING CO., 47, STATION ROAD, GAMPOLA
NUWARAELIYA MEDICALS
ROYAL TRADE CENTRE, NUWARAELIYA.
UVA PHARMACY, BANDARAWELA.
RENUZA, WELIMADA
HAPUTALE PHARMACY, HAPUTALE.
SERENDIB PHARMACY, 400, MAIN STREET, PANADURA.
METROY PHARMACY, 66, MAIN STREET, PELMADULLA.
WIJEMANNA GROCERIES, NO.43, PANADURA ROAD, HORANA.
SHIHAB ENTERPRISES, 69, TALAWAKELLE.
CENTRAL MEDICAL STORES, 74, MAIN STREET, HATTON.
LOYED PHARMACY, MEDAGODA, MATARA.
SILVA DRUGS, HAVELOCK ROAD, GALLE.
THE NEW PHARMACY, PERAKUMBA ST, KURUNAGALA.
SUHADA PHARMACY, COLOMBO RD, CHILAW.
KANDY LINES KEGALLE - BADULLA APPOTHICAREES
LANKA CHEMET-EDIRIWEERA STORES-BADULLA PHARMACY BADULLA.
KALYANI MAHAL OLCOTT MAWATHA PETTAH.

காலவர்ண ஒயில் அன்ட் கேஷாலேப்ப (UP ஃபோமியுலா)



## சமையற்கலை வகுப்புக்கள் ஆரம்பம்

* கறி சோறு வகைகள்
* கேக் வகைகள்
* சிற்றுண்டிகள்

தமிழ் மொழி மூலம் மட்டும் நடாத்தப்படும்.

மார்ச் 28ம் திகதிக்கு முன் நேரில் வந்து சந்திக்கவும்.

*Niranjanie Selvarajah*
*55, Vivekananda Hill .*
*Colombo-13.*


## கந்தன் மாரியப்பன் மறைவு நன்றி நவிலல்

கொழும்பு-8, வனாத்தமுல்ல, பெலங்கஸ்துடுவ, 81/27ம் இலக்க இல்லத்தில் நடைபெற்ற **கந்தன் மாரியப்பன்** அவர்களின் ஈமக்கிரியைகளில் பங்கேற்று சகலவிதமான உதவிகளையும் செய்த உற்றார் உறவினர் ஆகியோருக்கும் சிறப்பாக ரெபின்சன், ரெமிக்கோ, அம்டியாஸ், ரயீமா, ரிஸ்வான்'ஸ் மற்றும் மேக்கண்டைல் புரோக்கோர்ஸ், டிலக்ஸ் உரிமையாளர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கும் குடும்பத்தினர் தமது நன்றியை இத்தால் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

தகவல்: எம்.எஸ். நாதன்
சன் கிளினேர்ஸ்
ஸ்ரீ சித்தார்த்த வீதி,
கிருலப்பன
கொழும்பு—5

# “நுளம்புகளின் நகரம்!” உதவுகின்றது கால்வாய்! கால்வாயை திருத்த கவனமெடுப்பது யார்?

*(புத்தளம் நிருபர்)*

புத்தள நகர மத்தியிலுள்ள ‘மலேரியா கால்வாய்’ தூர்ந்து போய் இருப்பதன் காரணமாக இப்பகுதி வாழ் மக்கள்– குறிப்பாக 4ஆம், 5ம் வட்டார மக்கள் சொல்லொண்ணா கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

மழை நீரும், சாக்கடை நீரும் இக்கால்வாய் மூலமே கடலை சென்றடைய வேண்டும்.

தற்சமயம் இக் கால்வாய் தூர்ந்து போய் இருப்பதால் கழிவு நீரும், மழை நீரும், வெளியேற இடமின்றி பக்கத்திலுள்ள பாதைகளிலும், வீடுகளிலும் புகுந்து அப்பகுதிகளை மூழ்கடித்து விடுகின்றது.

இதன் காரணமாக இப்பகுதிகளில் சாதாரண பைசிக்கள் வண்டிகளில் கூட பயணம் செய்ய முடியாமல் மக்கள் திணறுகின்றார்கள்.

வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்து ஓட வழியின்றி காணப்படுகிறது.

நாட் கணக்கில் தண்ணீர் கட்டுப்பட்டு கிடப்பதால் நுளம்புகள் பல்கிப்பெருகி மலேரியா நோயை பரப்புகின்றன. இப்பகுதி மக்கள் அடிக்கடி மலேரியாவினால் பீடிக்கப்படுவதால் “புத்தளம் நுளம்புகளின் நகரம்” என்ற பெயரையும் பெற்று பாராளுமன்றத்திலும் இப்பெயர் ஒலித்தது.

முன்பு இக்கால்வாய் ஆழமாகவும், அகலமாகவும் இருந்ததினால் சாக்கடை நீரும், மழைநீரும், அருகிலுள்ள நெடுங்குளத்திலிருந்து வெளியாகும் மேலதிக நீரும் துரித கதியில் கடலை நோக்கி சென்றது.

இதன் காரணமாக இப்பகுதி நீரினால் மூழ்கடிக்கப் படுவது தவிர்க்கப்பட்டு வந்தது.

முன்பு 20 அடி அகலமும், 10 அடி ஆழமுமிருந்த இக்கால்வாய் தற்போது 5 அடி அகலத்திற்கும் 3 அடி ஆழத்திற்கும் குறுகிவிட்டது.

சமீபத்தில் பெய்த பெரு மழையினாலும், குளத்திலிருந்து வெளியாகிய மேலதிக நீரினாலும் தண்ணீர் வழிந்தோட இடமின்றி பக்கத்திலுள்ள பாதைகளையும், வீடுகளையும் நீர் ஆக்கிரமித்து மூழ்கடித்துக் கொண்டது.

“இனிமேலாவது இப்பகுதி அரசியல்வாதிகள் முக்கியத்துவம் வாய்ந்த இந்த “மலேரியா கால்வாயை” புனருத்தாரணம் செய்து “புத்தளம் நுளம்புகளின் நகரம்” என்ற பெயரை போக்கடிக்க வேண்டும்.” என இப்பகுதி மக்கள் “தினமுரசு” மூலம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.


BAJAJ SUPER THREE WHEEL சகல உதிரிப்பாகங்களும் விஷேட கழிவுடன் பெற்றுக்கொள்ள எமது காட்சி அறைக்கு விஜயம் செய்யுங்கள்.

BOSCO
21, FIRST DIVISION, TECHNICAL JUNCTION
MARADANA.
Tel. 445823



## விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்குங்கள்.

ADVERTISING MANAGER
THINA MURASU
*No. 88/14, Somadevi Place,*
*Kirilapone, Colombo-5*
Tel: 820265
விளம்பர மேலாளர்
இல.88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருளப்பனை, கொழும்பு—05
தொலைபேசி: 820265


# இசைத்துறைப் பட்டதாரிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள்! அமைச்சும்-ஆளுநரும் கவனிக்க வேண்டும்!!

புகார் பெட்டி

கிழக்கிலங்கையில் பல இசை அறிஞர்களை உருவாக்குவதில் வெற்றி கண்டுள்ள ஒரே ஒரு கல்லூரி மட்டக்களப்பு விபுலானந்த இசை நடனக் கல்லூரியாகும். அதன் பல ஆண்டுகால வளர்ச்சியில் கடந்த சில ஆண்டுகளில் அதன் வளர்ச்சி பாராட்ட வேண்டியதாகும். இலங்கையில் உள்ள தமிழ் இசைக் கல்லூரிகளில் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

இங்கு பட்டம் பெற்று வெளியேறும் ஒவ்வொரு பட்டதாரியும் நான்கு ஆண்டு கால பட்டப் படிப்பை மேற்கொண்டு பட்டம் பெற்றவர்களாவர். ஆனால் அரசினால் பட்டதாரி ஆசிரியர் நியமிக்கப்படும்போது, இவ்விசைப் பட்டதாரிகள் புறக்கணிக்கப் படுகின்றனர். இவர்கள் இசைத்துறையில் பட்டம் பெற்ற பின்னரும் தொண்டர் ஆசிரியர்களாகவே பணி புரிய வேண்டியுள்ளது. கல்லூரியை கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்துடன் இணைப்பதில் நடைமுறை சிக்கல்கள் உள்ளன. ஆனால் இதனை நிர்வகிக்கும் இந்து கலாசார அமைச்சு இக் கல்லூரியின் பட்டங்களுக்கு மதிப்பை ஏற்படுத்தி அரசினால் அங்கிகரிக்கப்பட்ட பட்டங்களாக மாற்றுவதற்கு முன்வர வேண்டும்.

தற்போதைய ஆளுநர் லயனல் பெர்னாண்டோ அவர்கள் வட-கிழக்கு பாடசாலைகளில் நிலவும் பட்டதாரி ஆசிரியர், டிப்ளோமா ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்திருப்பதாக தெரிவித்தார். பதின் மூன்றாவது அரசியலமைப்பு திருத்த சட்டப்படி மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு இணங்க நியமனங்கள் வழங்கப்படும் போது இசை நடன பட்டதாரிகளும் சேர்த்துக்கொள்ளப்படுவார்களா? அவர்களும் விண்ணப்பிக்க முடியுமா? இது விடயத்தில் ஆளுநர் அவர்களும், இசைத் துறையில் ஆர்வமுள்ள அனைவரும் துரிதமாக செயற்பட்டு எதிர்காலத்தில் மீன்பாடும் தேன்நாடாம் மட்டு மாநகரை இசை பாடும் தேன்நாடாக மாற செயற்படுமாறு வேண்டுகிறேன்.

பி.பி. இசையழகன்.

# தூதுக்குழு விஜயங்களும் தோற்றுவிக்கும் எதிர்பார்ப்புக்களும்!

## எக்ஸ்ரே ரிப்போர்ட் — நாரதர்

தூதுக்குழுக்கள் வடக்கே செல்வதும் திரும்பி வந்து, தெற்கில் இருந்து சமாதானம் உருவாக தொடர்ந்து முயல்வோம் என்று அறிக்கை விடுவதும் வழக்கமான விசயங்கள் ஆகிவிட்டன.

அரசும்-புலிகளும் புன்னகைகளை பரிமாறி, சிற்றுண்டி சாப்பிட்டு, ஒரே மேசையில் அமர்ந்து "இலங்கை ஒரே நாடு, இந்தியா வேறு நாடு. ஒரு தாய் மக்கள் நாமென்போம். இந்தியப் படையை போவென்போம்" என்று பேசிக்கொண்டிருந்தது ஒரு காலம்.

அப்போதெல்லாம் எதிர்க்கட்சிகள் சிலவற்றுக்கு கடுமையான வயிற்றெரிச்சல்.

"பிரேமதாசாவும், புலிகளும் பேசுவதைப் பார்த்தால் பிரச்சனைகள் யாவும் தீர்ந்து விடும்போல் இருக்கிறதே.

"ஜே.வி.பியையும் அடித்து முறித்து போட்டுவிட்டார் பிரேமதாசா.

"அடுத்து புலிகளோடும் பிரச்சனையைத் தீர்த்துவிட்டாரேயானால் பிரேமதாசாவை, மனுசன் உயிரோடு உள்ளவரை அசைக்க முடியாமல் போகுமே. ஆகவே விடக்கூடாது, என்ற ரீதியில் அந்த எதிர்க்கட்சிகள் எரிச்சல்களையெல்லாம் எடுத்து வார்த்தைகளாக கொட்டித்தீர்த்தன.

"பிரேமதாசா பிரபாகரனுக்கு நாட்டை பங்கு போட்டுக் கொடுத்துவிட்டார்.

"பிரேமா-பிரபா இணைந்து நாட்டை கெடுக்கிறார்கள். கெடுத்துக் குட்டிச் சுவராக்குகிறார்கள்" என்ற ரீதியில் எல்லாம் பேசினார்கள்.

இறுதியில் பேச்சு முறிந்தது. பேச்சு வார்த்தை மேசைகள் காலியாக போர் முனையில் அரசும்-புலிகளும் விரோதிகளாகி மீண்டும் யுத்தம் மூண்டது.

உடனே சில எதிர்க்கட்சிகளுக்கு பரம சந்தோசம்.

"எமக்கு முன்னரே தெரியும். புலிகள் ஏமாற்றிவிட்டார்கள். ஆயுதங்களை வாங்கிக் கொண்டு அரசுக்கு டாட்டா காட்டிவிட்டார்கள்." என்றெல்லாம் பேசி தமது திருப்தியை வெளிப்படுத்திக்கொண்டன.

ஆனால், இப்போது அதே எதிர்க்கட்சிகள் "இந்த அரசு யுத்தத்தை நிறுத்த இயலாமல் இருக்கிறது. யுத்தத்தை நிறுத்த வேண்டும்." என்று பேசுகின்றன.

பேசினால் பேசாதே என்று சொல்லுவது. பேசிக்கொண்டிருக்கும் போதே குறை சொல்லி சந்தேகங்களைக் கிளப்புவது. பின்னர் பேச்சுக்கள் எல்லாம் முடிந்துபோனால் "பேசலாமே ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்?" என்று கேட்பது இப்படித்தான் எதிர்க்கட்சிகள் சில நடந்து கொள்ளுகின்றன.

ஏட்டிக்குப் போட்டியான அரசியல் விளையாட்டுக்கள் இனப்பிரச்சனை விடயத்திலும் பயன்படுத்தப்படுகின்ற காரணத்தால் எவராலுமே துணிச்சலான தீர்வுகளுக்கு வழி சொல்ல முடியாமல் இருக்கிறது.

அரசியல் கட்சிகள் ஒருவர்மீது ஒருவர் பாரத்தையும் பழியையும் போட்டுவிட்டு கைகட்டிக்கொண்டிருப்பதால் தனிநபர்களும், குழுக்களும், மத நிறுவனங்களும் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கின்றன.

தூதுக்குழுக்கள் என்று வடக்கே சென்று புலிகளை சந்தித்துப் பேசிவிட்டு தெற்கே திரும்பி வருகின்றன.

அரசும்-புலிகளும் பேச்சை நிறுத்தி போரை ஆரம்பித்த பின்னர் எத்தனையோ தூதுக்குழுக்கள் வடக்கே சென்று புலிகளைக் கண்டு வந்துவிட்டன.

தனி நபர்கள் சிலரும் பகிரங்கமாகவும் இரகசியமாகவும் வடக்கே போய் தெற்கே வந்து, "சென்றோம் கண்டோம், முயல்வோம்" என்றதோடு சரி. தொடர்ந்து சமாதானத்திற்காக என்ன முயற்சி செய்கிறார்களோ தெரியவில்லை.

தூதுக்குழுக்கள் என்ற பெயர்கூட அத்தனை பொருத்தமில்லை என்றே படுகிறது.

போரில் ஈடுபடும் தரப்புக்களில் ஒன்று மற்றைய தரப்பிடம் அனுப்பி வைப்பதுதான் தூது.

இங்கே அப்படியல்ல. அரசு தரப்பினர் விரும்பாதபோதும் வடக்கே சென்றுவந்த குழுக்களும் உண்டு. எனவே வேண்டுமானால் சமாதானக் குழுக்கள் என்று கூறிக்கொள்ளலாம் என்று தோன்றுகிறது.

அரச தரப்பினரும் புலிகளும் ஒரே ஒரு விடயத்தை மட்டும் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

"சமாதானக் கதவுகள் திறந்திருக்கின்றன. திறந்தே வைத்திருக்கிறோம்."

இரு தரப்பினருமே கதவுகளை திறந்து வைத்துள்ளதாக கூறும்போதும் சமாதானம் வெளியே வருவதற்கான அறிகுறியே தெரியவில்லை. இரு தரப்பினரும் கதவைத் திறந்துகொள்ள இரு தரப்பிடமும் இருந்து சமாதானம் தப்பித்துக்கொண்டு ஓடி விட்டதோ என்று சந்தேகம் வருகிறது.

**ஒரு புறம் சிங்கம். மறுபுறம் புலி. இரண்டுக்கும் நடுவே சமாதானப்புறா.** பாவம் அது என்ன செய்யும்? பறந்து போய் எங்காவது ஒளித்திருக்கலாம்.

அதனைத் தேடிக் கண்டுபிடிக்கவே சமாதானக்குழுக்கள் புறப்பட்டிருக்கின்றன.

அது சுலபமான வேலையல்ல. சமாதானக் குழுக்களிடையே கூட போட்டி இருப்பது போலவே தெரிகிறது.

அதுவும் மத ரீதியான சமாதானக் குழுக்கள் சமாதான முயற்சிகளில் ஈடுபடும் போது மத விரோத உணர்வுகளை கிளப்பி விடவும் ஒரு முயற்சி நடக்கிறது.

பௌத்த மத அமைப்புக்கள் சில கிறிஸ்தவ குழுக்களின் வட விஜயத்தை கண்டித்துக் கருத்துக் கூறியுள்ளன.

அதனால் இனிமேல் வடக்கே செல்லும் போது பௌத்த மதகுருமாரையும் தம்மோடு அழைத்துச் செல்ல அங்கிலிக்கன் ஆயர் வண.கென்னத் பெர்னாண்டோ முடிவு செய்திருக்கிறார்.

நல்லெண்ணக் குழுக்கள் மூலம் வடக்கே உள்ள தமிழ் மக்கள் அனுபவிக்கும் துயரங்கள் தெற்கில் உள்ள மக்களுக்கு எடுத்துக் கூறப்படுவது விரோத உணர்வுகளை தணிக்க உதவுகிறது.

> ஒரு புறம் சமாதான விஜயங்கள் பற்றிய பேச்சுக்கள்.
> மறுபுறம் சண்டையிடுவதற்கான பாரிய வியூகங்கள்.
> இரண்டுக்கும் இடையிலே—
> கிளாலிப் பாதை போக்குவரத்துப் போல
> தள்ளாடும் படகாக மக்களின் வாழ்க்கை.
> சமாதானக் கரைசேரும் வரை உயிர் கையிலே!

புலிகளைப் பொறுத்தவரையில் வடக்கே செல்லும் குழுக்கள் பெரிதாக எதையும் சாதிக்கப் போவதில்லை என்றே கருதுகிறார்கள். அக்குழுக்கள் மூலமாக தாம் போராடுவது நியாயம் என்ற கருத்தை வெளிப்படுத்தலாம் என்ற எண்ணத்தில் அந்தக் குழுக்களை வரவேற்றுப் பேசுகிறார்கள்.

வடக்கே சென்று தாங்கியிருக்கும்போது சமாதானக் குழுக்களிடம் புலிகள் சுட்டிக்காட்டக் கூடிய இடங்கள் இருக்கின்றன.

தேவாலயங்கள் மீது விழுந்த குண்டுகள். குறி தவறிய தாக்குதல்கள் என்று புலிகளுக்கு வசதியாக அரசே ஏற்படுத்திக் கொடுத்துள்ள பிரச்சார வாய்ப்புக்கள் நிறைய இருக்கின்றன.

எல்லாவற்றையும் சுட்டிக்காட்டி "இப்போது சொல்லுங்கள். நாங்கள் ஆயுதங்களை கீழே போடலாமா?" என்று புலிகள் கேட்க, சமாதானக் குழுக்கள் வாயடைத்துப் போய் நிற்கத்தான் வேண்டும்.

அரசு சார்பான பிரதிநிதி ஒருவர் வடக்கே சென்றால்கூட அவராலும் நியாயப்படுத்த முடியாத நிலைமைகளை வான் தாக்குதல்கள் உருவாக்கி வைத்திருக்கின்றன.

மறுபுறம் இனப்பிரச்சனையே இல்லை என்ற பேச்சுக்கள்.

இந்த இலட்சணத்தில் வடக்கே சென்றுவரும் குழுக்கள் புலிகளிடம் நியாயம் இல்லாமல் இல்லை என்று பேசுவதைக் கேட்டு கோபப்படுவதில் அர்த்தமில்லை.



ஆனால்-சமாதானக் குழுக்களின் வரையறைகளை மீறிய எதிர்பார்ப்புகள் உருவாகுவதுதான் பிரச்சனை.

அரசும், புலிகளும் சமாதானக் குழுக்களிடம் தமது நிலைப்பாடுகளை கூறுகிறார்கள். "உங்கள் முயற்சி அருமையான முயற்சி" என்று பாராட்டுகிறார்கள். அதே நேரத்தில் இன்னொன்றையும் சொல்கிறார்கள். "நாங்கள் தயார்தான். மறு தரப்பை இறங்கிவரச் சொல்லுங்கள்."

எந்தத் தரப்பையும் எந்தவொரு சமாதானக் குழுவாலும் இறங்கிவரச் சொல்ல முடியாது. இறக்கவும் முடியாது.

அரசு தரப்பில் தவறு இருக்கிறது என்று சொன்னால் அது புலிகளுக்கு ஆதரவான பேச்சாகிவிடும்.

புலிகள் தரப்பில் விட்டுக்கொடுப்பு வேண்டும் என்று சொன்னால் அது அரச சார்பு பேச்சாகிவிடும்.

ஏதாவது ஒரு தரப்பின் அதிருப்தியை சம்பாதித்துக்கொண்டு சமாதான முயற்சியில் ஈடுபடவும் முடியாது.

ஆயர் கென்னத் பெர்னாண்டோ வடக்கில் நின்றுகொண்டு புலிகளே தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதிகள் என்று கூறினார். புலிகளது போராட்டத்தில் நியாயம் இருப்பதாக கூறினார்.

ஆனால் தெற்கே வந்த பின் வடபகுதி மக்கள் யுத்தத்தை வெறுக்கிறார்கள் என்று கூறினாரே தவிர புலிகள் தமிழர்களது ஒரே பிரதிநிதிகள் என்று கூறவில்லை. அப்படிக் கூறியிருந்தால் அவர்மீது புலி முத்திரை குத்தப்பட்டிருக்கும்.

அமைச்சர் தொண்டமானுக்கு அப்படித்தான் நடந்தது. புலிகள் இப்போதும் தமது வெளியீடுகளில் அமைச்சர் தொண்டாமீது விமர்சனம் செய்கிறார்கள்.

சிங்களப் பேரினவாதத்திற்குள் அவர் சிக்கிவிட்டார் என்று யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் புலிகளது 'ஈழநாதம்' பத்திரிகையில் சமீபத்தில் ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது.

எனினும் அமைச்சர் தொண்டா புலிகளை விமர்சிக்க விரும்பியது கிடையாது. அது தம்மை பயன்படுத்தும் முயற்சி என்கிறார்கள் புலிகள். பேச்சுவார்த்தைக்கான சூழலை பலப்படுத்தும் முயற்சியாக புலிகளை விமர்சனம் செய்யாமல் இருக்க நினைக்கிறார் தொண்டா.

ஆனால், எது எப்படியோ அமைச்சர் தொண்டாவின் சமாதான முயற்சிகள் புலிகள் சார்பான முயற்சிகளாகவே தெற்கில் கருதப்படும் சூழல் உருவாக்கப்பட்டுவிட்டது.

இப்போது சபாநாயகர் சமாதான முயற்சியில் ஈடுபட முன்வந்திருக்கிறார்.

"வாருங்கள் என்று தேதி குறித்து புலிகள் அழைப்பும் விடுத்துள்ளார்கள்." அதுபற்றி யாழ்ப்பாணத்தில் அறிவித்தும் இருக்கிறார்கள்.

வடக்கே உள்ள தமிழ் மக்கள் சமாதான விருப்பம் கொண்டுள்ளார்கள். யுத்தம் அவர்களை சலிப்படைய வைத்துள்ளது.

இந்த நேரத்தில் யுத்தத்தை தொடரும் அவசியத்தை எதிர் தரப்பின் மூலமாகவே வலியுறுத்தும் உத்தியை புலிகள் பிரயோகிக்கிறார்கள்.

தாமும் சமாதானத்தில் அக்கறை இல்லாமல் இருக்கவில்லை. சமாதான முயற்சிகளில் ஈடுபடுவோரை வரவேற்கிறோம். பேசுகிறோம். என்பதை மக்களுக்கு தெரியப் படுத்துகிறார்கள்.

தாம் முன்னர் கடுமையாக விமர்சித்த ஆரியரத்னாவோடுகூட புலிகளின் ஒரு பிரதிநிதி பேசினார். தமிழ் அகதிகளுக்கு சேரவேண்டிய நிவாரணங்களை சிங்களப் பகுதிகளுக்கு கொடுத்துவிட்டார் என்று சர்வோதயத் தலைவர் ஆரியரத்னா மீது குற்றம் சாட்டிய புலிகள் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு அவர் குடும்ப சகிதம் சென்ற போது அனுமதித்தார்கள்- அவரோடு பேசினார்கள் என்றால் தாம் சமாதானத்திற்கு எதிரானவர்கள் அல்ல என்பதை சகல வழிகளிலும் வெளிக்காட்டும் அவசியத்தில் இருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம்.

இப்போது சபாநாயகரையும் அழைத்துள்ளார்கள். சபாநாயகரும் அரசு சார்பாக செல்லப் போவதில்லை. தனிப்பட்ட ரீதியிலே முயற்சி செய்யப் போகிறார்.

ஆயினும், சபாநாயகரே செல்லும்போது அந்த விஜயத்திற்கு பிரச்சார முக்கியத்துவம் அதிகமாகவே இருக்கும். 'என்ன பேசினார்கள். சபாநாயகரிடம் புலிகள்? எத்தகைய நிலைப்பாட்டை முன்வைத்தார்கள்?' என்று அறியும் எதிர்பார்ப்புக்களும் பெரிதாகவே இருக்கும்.

சபாநாயகர் வடக்கே சென்று வந்தால் பத்திரிகையாளர்கள் கேள்விகளால் துளைத்தெடுப்பார்கள். பேசிய விபரங்கள் அனைத்தையும் அவர் சொல்ல விரும்பாவிட்டால் ஊகங்கள் வேலை செய்யும்.

"புலிகள் முக்கிய செய்தியை சொல்லியனுப்பியுள்ளார்கள். அதனை ஜனாதிபதியிடம் மட்டுமே சபாநாயகர் மிக இரகசியமாக தெரிவிப்பார்" என்ற ரீதியில் சில பத்திரிகைகள் செய்தி வெளியிட எதிர்பார்ப்புக்கள் மேலும் வளரும்.

இப்படித்தான் ஆரியரத்னா புலிகளிடம் இருந்து முக்கிய திட்டத்தோடு பறந்து வந்து ஜனாதிபதியிடம் விரைந்து கொண்டிருப்பதாக சில பத்திரிகைகளில் செய்தி வந்தன.

**சமாதானம் என்பது போரிடும் தரப்புக்கள் மத்தியில் இருந்து எழுகின்ற மனம் திறந்த போக்கின் மூலமே உருவாக முடியும்.**

தனிநபர்களும், போருக்கு அப்பாற்பட்ட அமைப்புக்களும் எவ்வளவுதான் விசுவாசமாக முயன்றாலும் கூட ஒரு வரையறைக்கு மேல் அவற்றால் செல்ல முடியாது.

எனவே சமாதானக் குழுக்கள் செய்யக் கூடியதெல்லாம்,

வடக்கிலும், தெற்கிலும் உள்ள மக்களிடம் பரஸ்பர புரிந்துணர்வுகளை ஏற்படுத்துவது.

சமாதானத்திற்கு ஆதரவான மக்களின் மனப்போக்கை வெளிப்படுத்துவது.

மிஞ்சிப் போனால், போரிடும் இரு தரப்புக்களும் என்ன சொல்லுகிறார்கள் என்ற விடயத்தை எடுத்துச் சொல்வது.

இதற்கு மேல் அவர்களால் செல்ல முடியாது. செல்ல வேண்டுமானால் அரசும், புலிகளும் மனம் திறந்து துணிச்சலோடு சில முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும்.


முன்பு புலிகளும், அரசும் பேசியபோது எந்தவொரு குழுவும் இடையில் நின்று இணைப்புப் பாலம் போடவில்லை.

அவசியம் இருந்தது. இரு தரப்பும் உணர்ந்து பேச்சு மேசைக்கு முன் கூடினார்கள். இனியும் அப்படித்தான். அதற்கு தேவை இரு தரப்பும் நிலமையை உணர்ந்துகொண்டு நெருங்கி வருவது மட்டுமே.

ஆனால், இனப்பிரச்சனையே இல்லை என்று ஜனாதிபதி சொல்லிக்கொண்டிருந்தால் புலிகள் எப்படி முன்வருவது என்ற கேள்வியிலும் நியாயம் இருக்கிறது.

எனவே-உடனடியாக ஒரு பேச்சு வார்த்தை காட்சி அரங்கில் தோன்றும் என்று எதிர்பார்க்க இடமில்லை.

## அதிரடி அய்யாத்துரை



வீ.பி.பொன்னம்பலத்தார் கனடாவில் இறந்த செய்தி வருத்தமானது. தந்தை செல்வநாயகத்தாரை எதிர்த்து நின்று துரோகி பட்டம் வாங்கினவர். பிறகு தளபதி அமுதரோடை சேர்ந்து நிண்டவர். இடையிலை செந்தமிழர் இயக்கம் தொடங்கி அதுவும் சரிவரேல்லை. கடைசியா மனம் வெறுத்து கனடா போய், கம்யூனிசமும் போய்....ம்..... நினைச்சா கவலைதான். நல்ல அரசியல் வாதிகளை நாங்கள் இழந்து கொண்டிருக்கிறோம். அதாலை யார் யாரோ எல்லாம் பிரதிநிதிகள் ஆகிக்கொண்டிருக்கினம்.

ரெண்டு எழுத்துக்காரர் சீதனத்தடை கொண்டுவரப் போற விசயம் சிலருக்கு வயித்திலை புளி கரைச்சிருக்குதாம். நல்ல விலைக்கு வெளிநாட்டிலை இருக்கிற பிள்ளையளை விக்கலாம் எண்டு நினைச்சவை வெறுப்பினம் தானே! சும்மா சொல்லக்கூடாது! புரட்சி பேசினவை கனபேர் உதுகள் பற்றிக் கவலையே படாமல் இருக்கினம். ஆனால் ரெண்டு எழுத்தார் கவனிக்கினம். நல்லது யார் செய்தாலும் பாராட்ட வேணும்தானே!

திருமலையிலை ஒரு பெரும் குடிமகன் உரத்து சத்தம் போட்டுக்கொண்டிருந்தவராம். விசயம் என்னவென்று விசாரிச்சா, தேர்தல் தினத்திலை வெற்றி குவிக்க ஒரு குழுவினர் முழுக் கள்ளையும் வாங்கி ஆதரவாளர்களுக்கு கொடுத்தவையாம். "கள்ளுப் போடாமல் ஒரு நாள்கூட தூங்கினது கிடையாது. இண்டைக்கு பட்டை போட வைச்சுப் போட்டினம்." எண்டதுதான் அவற்றை கவலைக்கு முக்கிய காரணம். எண்டாலும் முழுக்கள்ளும் ஒரேயடியாய் விலைப்பட்டதிலை கள் வியாபாரிகள் களி கொண்டிருப்பினம். அடிக்கடி தேர்தல் வந்தால் "குடிமக்களுக்கும்" இலாபம்.

திருக்கோவில் பகுதியிலை பச்சை உடைக்காரர் வாக்களித்தே தீரவேணும் எண்டு ஜனநாயக உரிமையை வற்புறுத்திக் கொண்டிருந்தவையாம். அவையே ஒரு குழுவையும் சாடை மாடையாய் சப்போட் பண்ணியதாயும் தகவல். கசிப்பு சகிதமாய் களத்தில் குதித்த அந்தக் குழுவுக்கை இப்ப குத்து வெட்டு. விருப்பு வாக்கு அதிகம் வாங்கினவரை ஓரம் கட்டவும் முயற்சி நடக்குதாம். நல்ல பிரதிநிதிகள்! வாழ்க ஜனநாயகம்!

கொழும்பில் இருக்கிற நகைக்கடை உரிமையாளர் சிலர் சோகமாய் இருந்தினம். என்ன விசயம் எண்டு கேட்டா, அங்கை வேலை செய்யிற கிழக்கு மாகாண தொழிலாளர் எல்லாம் வாக்குப் போட போயிருந்தவை. விருப்பத்திலைதான் எல்லாரும் போனவை எண்டு சொல்ல முடியாது. போகாமல் நிண்டா ரெண்டு எழுத்தாருக்கு ஆதரவானவை எண்டு மாட்ட வேண்டிவருமோ எண்ட பயத்திலையும் சிலர் போனவையாம்.

இரகசிய வாக்களிப்பிலை ஒரு நன்மை. எந்த வேட்பாளரைக் கண்டாலும் "நான் உங்களுக்குத்தான் போட்டனான்." எண்டு சொல்லிப் போடலாம். அப்படித்தான் ஒருத்தர் ஒரு வேட்பாளரிட்டை சொந்தக் காரியமாய் போயிருக்கிறார். நான் உங்களுக்கு குடும்பத்தோடை போட்டனான். எண்டாலும் தோற்றுப் போனியளே" எண்டு சூ கொட்டியிருக்கிறார். வேட்பாளர் புத்திசாலி. நீர் உம்முடைய பகுதி வாக்களிப்பு நிலையப் பக்கமே வரேல்லையே" எண்டு கேட்க, சொன்னவர் அசடு வழிந்திருக்கிறார். வேட்பாளர் சொன்ன ஒரே வார்த்தை "போடா வெளியிலை."

காதல் பாட்டெழுத இப்ப சொல் பற்றாக்குறை ஏற்பட்டுப் போச்சு. பாரதிதாசன் அப்ப எழுதினது இது.

**"கமலம் அடுக்கிய செவ்விதழால்-மலர்க்**
**காட்டினில் வண்டின் இசை வளத்தால்**
**கமழ்தரு தென்றல் சிலிர் சிலிர்ப்பால்-கருங்**
**கண் மலரால் முல்லை வெண்ணகைப்பால்**
**அமையும் அன்னங்களின் மென் நடையால்-மயில்**
**ஆட்டத்தினால் தளிர் ஊட்டத்தினால்**
**சமையும் ஒருத்தி-அப் பூஞ்சோலை எனைத்**
**தன் வசம் ஆக்கிவிட்டாள் ஒருநாள்."**

# சிம்மாசனம் ஏறப்போகும் சிறைப்பறவை!



நெல்சன் மண்டேலா

# மண்டேலா சந்திக்கவிருக்கும் சவால்கள்!!

# உலக வலம்

## கறுப்பின மக்களுக்குள்ளும் பிரிவுகள். தனிநாடு கேட்கிறது 'இன்கதா'

தென்னாபிரிக்காவில் சிறுபான்மை வெள்ளையர் ஆட்சி வீழ்ந்து போக கறுப்பின மக்கள் வெற்றி விழா நடத்தும் நாள் நெருங்கி வருகிறது.

வருகின்ற மாதம் 28ம் திகதி தென்னாபிரிக்காவிலே தேர்தல் நடக்கப் போகிறது.

தென்னாபிரிக்க அதிபராக நெல்சன் மண்டேலா தேர்தலில் வெற்றி பெறுவது உள்ளங்கை நெல்லிக்கனி என்று இப்போதே சொல்லிவிடலாம்.

வெற்றி பெறுவது உறுதி என்றாலும் கூட அதன் பின்னர் மண்டேலா எதிர் நோக்கக் காத்திருக்கும் சவால்கள் சாதாரணமானவையல்ல.

இன ஒதுக்கல், இனவெறி-நிறவெறி என்பதற்கு உதாரணம் சொல்லப்படும் நாடாக இருந்தது தென்னாபிரிக்கா.

முன்னர் தென்னாபிரிக்காவின் நிற வெறிக் கொள்கைக்கு உரமூட்டும் அதிபராக இருந்தவர் போத்தா.

கறுப்பர்கள் ஒடுக்கப்பட்டனர். அடிமைகளாய் நடத்தப்பட்டனர். சிறு பான்மை வெள்ளையரின் ஆட்சியில் தினமும் செத்துப் பிழைத்தனர்.

கறுப்பர்களுக்காக தென்னாபிரிக்க காங்கிரஸ் உரிமைக் குரல் கொடுத்தது. நெல்சன் மண்டேலா 1960க்களில் கறுப்பின மக்களை திரட்டத் தொடங்க வெள்ளையர் ஆட்சி சினந்தது. சீறியது.

அடக்குமுறையை ஏவியது. அதற்கும் பணியாமல் மண்டேலா தலைமையில் போராட்டம் தொடர்ந்தது. கறுப்பின மக்களின் பிரச்சனை சர்வதேச அரங்கில் ஒலித்தது.

பொறுக்க முடியாத அதிபர் போத்தா மண்டேலாவைப் பிடித்து சிறையில், பூட்டினார். அது நடந்தது 1964இல்!

பலநாடுகள் கண்டித்தன. விடுதலை செய் மண்டேலாவை என்று கேட்டன. அதிபர் போத்தா கண்டுகொள்ளவில்லை. செவி சாய்க்கவும் இல்லை.

சீற்றம் கொண்ட நாடுகள் தென்னா பிரிக்காவை புறக்கணித்தன.

மண்டேலா சிறையில் இருந்த போதும் வெளியே போராட்டம் தொடர்ந்தது.

அமெரிக்கா, இந்தியா போன்ற பல நாடுகள் தென்னாபிரிக்காவை நிர்ப்பந்திக்கத் தொடங்கின. உறவுகளைத் துண்டித்தன. ஏற்றுமதிகளையும், இறக்குமதிகளையும் நிறுத்தின.

இறுதியாக 1989ல் போத்தா அதிபர் பதவியில் இருந்து விலகிக்கொண்டார்.

புதிய அதிபராக டி.கிளார்க் பதவி ஏற்றார்.

பதவி ஏற்றவுடன் இனவெறிக் கொள்கையை கைவிடப்போவதாக அறிவித்தார்.

தென் ஆபிரிக்க காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா விடுதலை செய்யப் பட்டார்.

27 ஆண்டுகள் சிறையில் இருந்தும் உறுதி தளராமல் இருந்த சிறைப்பறவை வெளியே வந்ததும் திருப்பம் ஏற்பட்டது.

தீவிரவாதத்தை கைவிட முடிவு செய்த மண்டேலா டி.கிளார்க்குடன் பேச்சு நடத்தினார்.

அரசியல் சட்டத்தை மாற்றி கறுப்பின மக்களுக்கு சம உரிமை கொடுக்க டி.கிளார்க் முன்வந்தார்.

கறுப்பின மக்களின் இரத்தம் சிந்திய போராட்டத்திற்கு கிடைத்த முதல் வெற்றி அது.

புதிய அரசியல் சட்டம் நிறைவேற்றப் பட்டதோடு தேர்தல் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

எனினும் வெள்ளையரின் வலது சாரிக்கட்சியினரும், கறுப்பின மக்கள் மத்தியில் உள்ள 'இன்கதா' கட்சியினரும் தேர்தலை புறக்கணிப்பதாக அறிவித்தனர்.

எனினும் மண்டேலா பின்வாங்க வில்லை. கடந்த ஜனவரியில் இருந்து பிரசாரக் களத்தில் குதித்துவிட்டார்.

தேர்தலில் தென்னாபிரிக்க காங்கிரஸ் வெற்றி பெறுவது உறுதியாகிவிட்டது.

சிறுபான்மை வெள்ளையருக்கு இப்போ திருந்தே அச்சமும், சந்தேகங்களும் ஏற்படத் தொடங்கிவிட்டன.

மண்டேலா ஆதரவாளர்கள் கறுப்பின மக்கள் உள்ள பகுதிகளில் பிரச்சாரம் செய்ய வரும் வெள்ளையரைத் தாக்கி விரட்டுகிறார்கள்.

வெள்ளையர் விரோத உணர்வுகளை மண்டேலாவால்கூட தடுக்க முடிய வில்லை.

மண்டேலா எதிர்நோக்கும் மற்றொரு பிரச்சனை 'இன்கதா' கட்சியினராகும்.

கறுப்பின மக்கள் மத்தியில் உள்ள ஒரு பிரிவினரான சுலு இனத்தவர் சார்பில் 'இன்கதா' கட்சி போராடுகிறது.

சுலு இனத்தவர் வாழும் பகுதியை தனிநாடாக்க வேண்டும் என்று 'இன்கதா' கட்சியினர் கூறுகின்றனர்.

இன்கதா கட்சியினரும் மண்டேலா ஆதரவாளரும் பல பகுதிகளில் மோதி வருகின்றனர்.

வெள்ளையரை சமாளிக்க வேண்டும். மறுபுறம் தனது இனத்தவர் மத்தியில் உள்ள பிளவுகளையும் சரிக்கட்ட வேண்டும்.

புதிய அதிபராக மண்டேலா வந்த பின்னர் வர்த்தக, பொருளாதார முன் னேற்றத்திற்கு வெளிநாட்டு உதவிகள் தேவைப்படும்.

தென்னாபிரிக்காவில் அமைதி இல்லையென்றால் வெளிநாடுகள் அங்கு தொழில் தொடங்க முடியாது.

எனவே, வெள்ளை இனத் தலைவர் களையும் தன்னோடு ஒத்துழைக்கவைக்க வேண்டிய தேவை மண்டேலாவுக்கு ஏற்படும்.

தளராத போராட்ட வீரர். பேச் சாற்றலும், ராஜதந்திரமும் மிக்கவர் என்று போற்றப்படும் நெல்சன் மண்டேலா ஆட்சி நடத்தக்கூடிய சிறந்த நிர்வாகியாக மாறு வாரா என்ற கேள்விக்கு விரைவில் விடை தெரியப்போகிறது.

அந்த விடையில் தென்னாபிரிக்காவின் எதிர்காலமும் தங்கியிருக்கிறது.

நீண்கால போராட்டத்தின் பலனை தென்னாபிரிக்க காங்கிரஸ் விவேகத் தோடு பயன்படுத்த வேண்டும்.

தென்னாபிரிக்கா தேர்தல் முடிவு களைவிட தேர்தலின் பின்னுள்ள நிலைமை களைப் பற்றியே உலகம் அவதானிக்கும். ■



பிரசாரத்தில் வின்னி

## மண்டேலா தடுத்தால் என்ன? வின்னியால் வெல்ல முடியும்!

நெல்சன் மண்டேலா தன் மனைவி வின்னியை விவாகரத்து செய்திருந்தார். மண்டேலா உள்ளே இருந்தபோது வின்னிதான் தென் ஆபிரிக்க காங்கிரஸ் அணியை வழிநடத்தியவர். போராட்டத்தை தீவிரப்படுத்தியவர்.

ஒரு வாலிபரைக் கடத்தி கொலை செய்தது; கட்சிப் பணத்தை கையாடியது என்று இரு புகார்கள் வின்னிமீது.

புகார்களை ஏற்ற மண்டேலா வின்னியை விவாகரத்து செய்தார்.

வின்னியும் தனது கட்சிப் பொறுப்பை கைவிட்டு, "கறுப்பின மக்களுக்கான போராட்டத்தைக் கைவிடேன்" என்று தொடர்ந்து பிரச்சாரம் செய்தார்.

கட்சிக்குள் அவருக்கு செல்வாக்கு இருந்தது. கடந்த டிசம்பரில் மகளிர் அணித் தலைவியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு அவர் போட்டியிட கட்சிக்குள் பலத்த ஆதரவு.

பாராளுமன்ற உறுப்பினருக்கான பட்டி யலுக்கு இரகசிய வாக்கெடுப்பு மூலம் 400 வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதிக வாக்குகள் பெற்று 5வது வேட்பாளராக வின்னி வந்தார். எனினும் அவரது பெயரை 31வது இடத்தில்தான் மண்டேலா சேர்த்துள்ளார்.

மண்டேலா-வின்னி மத்தியில் தற்போது சுமுக நிலை உருவாகி வருகிறது. எனினும் அவருக்கு மண்டேலா அமைச்சர் பதவி கொடுப்பாரா என்பது சந்தேகம்தான்.

வின்னி எதிலும் தெளிவான பெண். திடமான முடிவுகளை எடுக்கக் கூடியவர். மண்டேலா விரும்பினாலும் விரும்பா விட்டாலும் வின்னி சாதனை படைப்பார். ■

# தேடிப் போனது மூன்று பிணம்! போனசாகக் கிடைத்தது ஆறு பிணம்!!

பிரிட்டனில் உள்ள பத்திரிகைகளுக்கு பரபரப்புச் செய்தி. தலைப்புச் செய்தியும் அதுதான்.

இலண்டனில் ஒரு பயங்கர வீடு. ஹொலிவூட் சினிமாப் படத்தில் வருவது போன்ற நிகழ்ச்சி.

இலண்டனில் உள்ள கிளான்டர் நகரில் இருக்கிறது கிராம்வெல் வீதி. அங்குள்ள வீடுதான் பயங்கரமான வீடாக பத்திரிகைச் செய்திகளில் இடம்பிடித்திருக்கிறது.

அப்படி என்ன அதிசயம் அந்த வீட்டில் நடந்தது? தோண்டத் தோண்ட பிணம் வருகிறது. ஒரு பிணம் இரு பிணம் அல்ல ஒன்பது பிணம்.

வீட்டின் சொந்தக்காரர் பெயர் பிரரெடிக் (52). அவர் ஒரு காரியம் செய்துவிட்டார்.

தனது மகளையும் அவரோடு இரண்டு பெண்களையும் கொன்றுவிட்டு தன் வீட்டுக்குள் புதைந்துவிட்டார். விசயம் எப்படியோ வெளியே கசிந்து பிரரெடிப் கைது செய்யப்பட்டார்.

விசாரணை செய்ய வீட்டை தோண்டிய பொலிசாருக்கு அதிர்ச்சிமேல் அதிர்ச்சி.

மூன்று பேரின் பிணம் கிடக்கும் என்று பார்த்தால் மேலும் ஆறு பிணங்கள் போனஸாக கிடைத்துவிட்டன. போனஸாக பிணம் கிடைத்தால் அதிர்ச்சிதானே வரும்.

இதுவரை ஒன்பது பிணங்கள் மீட்கப் பட்டுள்ளன.

அத்தனை பிணங்களும் பெண்கள்!

மேலும் நவீன கருவிகள் உதவியோடு பொலிசார் வீட்டின் உள்ளேயும் வெளி யேயும் சோதனை நடத்தி வருகின்றனர். கிளான்டர் பகுதியில் உள்ள மற்றொரு வீட்டின் தோட்டப் பகுதியில் நவீன கருவி உதவியால் சோதனை நடந்துள்ளது. ■

# முடியவில்லை பணி! திரும்புகிறது படை!!



அமைதிப்படை மீதே துப்பாக்கி வேட்டுக்கள். சோமாலியாவில் இருந்து இம்மாத இறுதிக்குள் திரும்பப்போகிறது அமெரிக்க படையின் ஒரு பிரிவு. அதன் பின்னர் நிலமை மேலும் மோசமாகும். சோமாலியாவின் சோகம் ஒரு தொடர்கதையாய்.. அமைதி பற்றிய கனவுகள் செருக்களத்தில் சிதைந்து போனபடி! இங்கும் அதுதானே கதை!!

மார்ச் 31க்குள் திரும்பவிருக்கும் அமெரிக்க படைப்பிரிவு

# தமிழக அரசு மருத்துவமனையில் அதிசயமான இரட்டைக் குழந்தை

தமிழ் நாட்டில் உள்ள சேலம் மாவட்டத்தில் கடம்பூர் என்னும் கிராமத்தை சேர்ந்தவர் லட்சுமி.

கடந்த 2ம் திகதி (மார்ச் 2) வீட்டிலேயே இவருக்கு பிரசவம் பார்க்கப்பட்டது. இரட்டைக் குழந்தை பிறந்தது.

பார்த்தவர்களுக்கு உடனே வியப்பு. ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளில் ஒரு குழந்தை முழுமையாக வளர்ச்சி அடைந்திருந்தது. அந்தக் குழந்தையின் இடுப்போடு ஒட்டியபடி இருக்கும் மற்றக் குழந்தை முழுமையாக வளர்ச்சி அடைய வில்லை. இரண்டுகால்கள், ஆண் உறுப்பு, முழு வளர்ச்சியடையாத உடல் அமைப்புக் கொண்ட அக் குழந்தையின் வயிறும், வளர்ச்சியடைந்த குழந்தையின் வயிறும் ஒட்டியிருந்தன.

அபூர்வமான இந்த இரட்டைக் குழந்தையை சேலத்தில் உள்ள அரசாங்க பொது மருத்துவமனைக்கு கொண்டு வந்தனர்.

மருத்துவர்கள் பரிசோதித்தனர். முழு வளர்ச்சியடையாத குழந்தையை அகற்றிவிட்டு வளர்ச்சியடைந்த குழந்தையைக் காப்பாற்றலாமா என்று ஆராய்ந்து வருகின்றனர்.

இது பற்றி மருத்துவர்கள் கூறும்போது,

"இது போன்று பிறக்கும் குழந்தையை 'சயாமின்' என்று அழைப்பார்கள். 1910ம் ஆண்டு சயாம் நாட்டில் இது போன்ற இரட்டைக் குழந்தை பிறந்தது. அவர்கள் 60 வயதுவரை உயிரோடு இருந்தனர். அவர்களுக்கு தனித்தனியே திருமணம் செய்து வைக்கப்பட்டு குழந்தைகளும் பிறந்தன.



உலகில் இது போன்ற 30 ஜோடிக் குழந்தைகள் உள்ளனர். இந்தியாவில் தற்போது 2 ஜோடிக் குழந்தைகள் உள்ளனர். சேலம் வைத்தியசாலையில் உள்ளதும் அதுபோன்ற குழந்தைதான்.

இரட்டைக் கருவில் ஒரு கரு சரியாக வளர்ச்சியடையாத போது இப்படி நடக்கிறது. இந்தக் குழந்தையின் தேவையற்ற உறுப்புக்கள் அகற்றப்பட்டு ஒரு குழந்தையாக உருவாக்கப்படும். அனைத்து பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு அதன் பின்னர் சத்திரசிகிச்சை செய்யப்படும் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். ■

## அலசுவது – இராஜதந்திரி

"நான்கு மொழிகள் பேசப்படும் சுவிற்சர்லாந்து தேசத்தில் மக்களிடையே நல்ல ஒற்றுமை காணப்படுகின்றது. ஆனால் இரு மொழிகளைப் பேசுகின்ற இலங்கையில் இனக்குரோதம் வலுவடைந்திருக்கின்றது." என்று அண்மையில் மறைந்த வட இலங்கையின் கல்விமான்களில் ஒருவரான ஒறேற்றர் (Orator) சுப்பிரமணியம் தம்மிடம் கூறியதை நினைவு கூர்ந்த தறுவாயிலேயே வட இலங்கையின் பிரபல கம்யூனிஸ்ட் அரசியலாளரான திரு.வி.பொன்னம்பலம் கடந்த வாரம் மூர்ச்சித்து உயிர் நீத்துள்ளார்.

வட இலங்கையின் கல்விமான்களில் ஒருவரும் முன்னாள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபருமான திரு.'ஒறேற்றர்' சுப்பிரமணியம் இலண்டனில் சில வாரங்களுக்கு முன்னர் காலமாகியிருந்தார்.

அமரர் சுப்பிரமணியத்தின் பெயரின் முன்னால் வரும் ஒறேற்றர் (Orator) என்ற ஆங்கிலச் சொல் அவர் ஒரு சிறந்த பேச்சாளர் என்பதைக் குறிப்பதாகும்.

ஆங்கிலத்தில் இலகு நடையில் அழகாகவும், சகலரும் எளிதில் புரியக்கூடிய வகையில் இனிமையாகவும் பேசுவதில் அமரர் சுப்பிரமணியம் சிறப்பிடம் பெற்றிருந்தார். அத்துடன் கல்வி, சமூக, இலக்கிய, அரசியல் துறைசார்ந்த விடயங்களில் அமரர் சுப்பிரமணியம் ஒரு சிறந்த சிந்தனை யாளராகவும் விளங்கியிருந்தார்.

வெளியிட்டிருந்தார்.

யாழ்ப்பாணம் சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயக் கல்லூரியில் 'ஒறேற்றர்' சுப்பிரமணியத்திடம் கல்வி பயின்ற மாணவர்கள் கனடாவில் 'ஒறேற்றர்' நினைவாக அஞ்சலிக் கூட்டமொன்றை நடத்தியிருந்தனர்.

இக் கூட்டத்தில் திரு.வி.பொன்னம்பலமும் உரையாற்றி சுவிஸ்ஸிலும், இலங்கையிலும் இனங்களிடையே நிலவும் ஒற்றுமை, வேற்றுமைகளைப் பற்றி அமரர் ஒறேற்றர் சுப்பிரமணியம் தம்மிடம் கூறியவற்றை நினைவு கூர்ந்தபோதிலேயே மாரடைப்பினால் அவர் மூர்ச்சித்துள்ளார். தொடர்ந்து அந்த அஞ்சலிக்கூட்ட மேடையிலேயே திரு.வி. பொன்னம்பலமும் அமரத்துவமடைந்தார்.

வட இலங்கையில் ஜனநாயக பாரம்பரியங்கள் நன்கு வேரூன்றி விசாலமடைந்திருந்த காலப் பகுதியைச் சேர்ந்தவர்களாகவே அமரர்கள் ஒறேற்றர் சுப்பிரமணியம், வி.பொன்னம்பலம் ஆகியோர் விளங்கியிருந்தனர்.


'ஒறேற்றர்' என்றும் 'வி.பி' என்றும் யாழ்ப்பாணத்தில் பிரபலமடைந்திருந்தவர்களே இந்த இரு பிரமுகர்களுமாவர்.

'ஒறேற்றர்' கல்வித்துறையிலும், வி.பி அரசியலிலும் ஈடுபட்டிருந்தனர். இந்த இருவரினதும் காலப்பகுதியில் வடபகுதியின் சமூக, அரசியல், பொருளாதார, கல்விச் சூழ்நிலைகள் என்பன மிகவும் உயர்ந்த

நிலைப்பாட்டையே கொண்டவர்களாக இருக்கின்றனர். அத்துடன் இலங்கையில் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளை ஜீரணிக்க முடியாதவர்களாகவுமிருக்கின்றனர்.

வடக்கே வவுனியாவிலும், கிழக்கிலும் அரசு உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை அண்மையில் நடத்தியிருந்தது.

இத்தேர்தல்களில் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்துள்ள தோல்விகள் அரசின் நிலைப்பாடு தொடர்பாக



வி. பொன்னம்பலம்

கேள்விக்குரியனவாகவே இருக்கின்றன.

இருந்த போதிலும் வெளியாகியுள்ள தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் வவுனியாவிலும், கிழக்கிலும் ஆட்சியாளர்களின் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் தொகுதிகளில் கூட பலத்த தோல்வி அரசுக்கு கிடைத்துள்ளது.

தேர்தல் பிரசாரங்கள் வவுனியாவிலும், கிழக்கிலும் சூடுபிடித்திருந்த வேளை பிரதமர் ரணில் விக்கிரம்சிங்க இப்பகுதிகளுக்குச் சென்று ஆளுங்கட்சியினர் சார்பாக பிரசாரங்களை மேற்கொண்டிருந்தார்.

ஆனால் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க வவுனியாவுக்கும், கிழக்கிற்கும் செல்வதை தவிர்த்திருந்தார். அத்துடன் சிறுபான்மையினர் குறித்தும் அக்கறைப்படாதவராக தமது கருத்துக் கண்ணோட்டங்களை தென்னிலங்கையின் பொது மேடைகளில் காரசாரமாக கூறி வந்தார்.

"இலங்கையில் பெரும்பான்மையின சிங்கள மக்கள் ஒரு விருட்சமாக நிலை கொண்டுள்ளார்கள். அவர்களை சுற்றிப்படரும் கொடிகளே சிறுபான்மையின மக்கள்" என்று

'தேர்தல் ஆண்டெ'ன்றே வர்ணித்திருந்தனர். அதற்கமைய கிழக்கிலும், வவுனியாவிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை ஆட்சியாளர்கள் நடத்தியிருந்தனர்.

கலைக்கப்பட்ட தென் மாகாண சபைக்கான தேர்தலையும் இம்மாத இறுதியில் நடத்தவிருக்கின்றனர்.

இத்தென் மாகாண சபைத் தேர்தலை யடுத்து ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகியனவும் இந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் இடம்பெறவுள்ளன.

எனவே நடந்து முடிந்த வவுனியா மற்றும் கிழக்கின் உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளின் மூலம் ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகியனவற்றில் சிறுபான்மையின மக்களிடமிருந்து அரச தரப்பினர் எத்தகைய கோணத்தில் ஆதரவைப் பெறமுடியும் என்பதை நன்கு உணர்ந்து கொண்டிருக்க முடியும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் பிரசாரங்களை மேற்கொள்வதற்கு வவுனியாவுக்கும், கிழக்கிற்கும் சென்றிராத ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க எந்த முகத்துடன்

# இறுதி மூச்சிலும் இலங்கையின் ஒற்றுமையை நினைத்த இன்னுயிர்கள்!

வட இலங்கையில் பல தசாப்தங்களுக்கு முன்னர் இளைஞர் வட்டத்தினரிடையே அரசியல், சமூக, கல்வித்துறை சார்ந்த சீர்திருத்த சிந்தனைகள் தோற்றம் பெற்றிருந்தன.

இச் சிந்தனைகள், அனைத்து இலங்கையரது ஒற்றுமையைக் கருத்திற் கொண்டதாகவும், இலங்கையில் காலனித்துவ ஆட்சியின் தாக்கத்துக்குட்பட்டிருந்த சிந்தனைகளிலிருந்தும் வேறுபட்ட முறையில், சுதேசியக் கண்ணோட்டத்தைக் கொண்டதாகவும் விளங்கியிருந்தன.

இச் சிந்தனையின் முன்னோடிகளுடன் இளைஞர் காங்கிரஸ் என்ற இயக்கத்தில் அணிசேர்ந்தவர்களில் ஒருவரே அமரர் ஒறேற்றர் சுப்பிரமணியம். இவருடன் கல்வித்துறை சார்ந்த பிரமுகர்களான அமரர் ஹன்டி பேரின்பநாயகம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபரும், யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையின் முன்னாள் ஆசிரியருமான அமரர் என்.சபாரத்தினம் ஆகியோரும் இந்த சிந்தனையாளர் வட்டத்தினுள் மிக முக்கிய இடங்களைப் பெற்றிருந்தனர்.

இலங்கையின் ஒற்றுமை, இலங்கையரிடையே இனவேறுபாடுகளற்ற முறையில் சமத்துவத்தைப் பேணுதல் என்பன

தரத்திலேயே இருக்கக் காணப்பட்டன.

அரசியல் ரீதியாக வட இலங்கையின் அரசியல்வாதிகள் தென்னிலங்கையின் அரசியல் வாதிகளுடன் கொள்கை ரீதியாக கருத்து மோதல்களைக் கொண்டிருந்தனர். ஆனால் அக்காலத்தில் வடக்கிலும், தெறகிலும் வாழ்ந்த இடதுசாரிகள் நெருக்கமான பிணைப்புக்களைக் கொண்டிருந்தனர்.

வடக்கே அனைத்துக் கட்சியினரும் தேர்தல்களில் போட்டியிட்டிருந்த காலத்தில் அமரர் வி.பொன்னம்பலம் ஒரு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராக தமிழரசுக் கட்சித் தலைவர் அமரர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தை எதிர்த்து காங்கேசன்துறையில் போட்டியிட்டு வந்தார்.

ஜனநாயக ரீதியாக இடம் பெற்ற அத்தேர்தல்களில், போட்டியாளர்கள் தம்மிடையேயான கருத்து மோதல்களை கூடியவரை நாகரிகமான முறையிலேயே வைத்துக் கொண்டிருந்தனர்.

அமரர் வி.பொன்னம்பலம், அமரர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் ஆகியோர் தேர்தல் கூட்டங்களில் இருவேறு துருவங்களாகப் போட்டியிட்டிருந்தனர்.

ஆனால் இருவரும் பரஸ்பரம் ஒருவர்மீது ஒருவர் நன்மதிப்பைக் கொண்டிருந்தனர்.

இவ்வாறு நேர்த்தியான தேர்தல்களுக்கும்,



ஒறேற்றர் சுப்பிரமணியம்

ஜனாதிபதித் தேர்தலுக்காக வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்குச் செல்வார்? என்பது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

எனவே வவுனியாவிலும், கிழக்கிலும் இடம்பெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள், ஆளுங்கட்சியினர் ஜனாதிபதித் தேர்தல், மற்றும் பொதுத் தேர்தல்களில் சிறுபான்மையினரின் ஆதரவைப் பெற வேண்டுமானால் சிறுபான்மையினர் குறித்த நிலைப்பாடுகளை அவர்கள் மாற்றிக் கொள்ள வேண்டுமென்பதையே புலப்படுத்து |வனவாக இருக்கின்றன.

இலங்கையின் இன்றைய ஆட்சியாளர்கள் பல்லின, பல மொழி பேசும் மக்களிடையே ஒரு பரிபூரண ஒற்றுமையை நிலை நாட்டுவதில் நாட்டமற்றவர்களாக இருக்கின்றனர்.

ஆனால் இலங்கையில் பாதிப்புக் குள்ளாகியுள்ள சிறுபான்மையினத்தவர்கள், உலகில் பல்லின, பல மொழி பேசப்படும் நாடுகளில் காணப்படும் ஒற்றுமையைக் கண்டு, இது போன்ற ஒற்றுமை நமது நாட்டிலும் ஏற்படாதா? என்று ஏங்கித் தவிக்கின்றனர்.

இந்த ஏக்கத்தின் வெளிப்பாடாகவே வட இலங்கையின் கல்விமான்களில் ஒருவரான ஒறேற்றர் சுப்பிரமணியத்தின் அஞ்சலிக்கூட்டத்தில் இன ஒற்றுமை பற்றி ஒறேற்றர் கூறியிருந்ததை நினவுகூர்ந்து

# உள்ளூராட்சித் தேர்தல்கள் வெளிப்படுத்திய முடிவு: 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு'

இந்த 'பழம்பெரும் இளைஞர் குழாத்தின்' சிந்தனைகளாக வெளிப்பட்டிருந்தன.

இப் பழம்பெரும் இளைஞர் குழாத்தின் செயல்பாடுகள் அஹிம்சை வழி தழுவிய காந்தீய போக்கையே கொண்டிருந்தன.

இத்தகைய அமைதி வழி நின்ற ஓர் இளைஞர் இயக்கத்தின் உறுப்பினராக இருந்த அமரர் ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்கள் சுவிற்சர்லாந்து தேசத்தில் பேணப்படும் ஒற்றுமையைக் கண்டு வியந்த நிலையில், இலங்கையின் இன ஒற்றுமையை சுவிஸ்ஸின் ஒற்றுமையுடன் ஒப்பிட்டு கவலை கொண்டிருந்தார். இக்கவலையை அவர் யாழ் குடாநாட்டின் பிரபல இடதுசாரி அரசியல் வாதியான திரு.வி.பொன்னம்பலத்திடம்

உயரிய ஜனநாயகப் பண்புகளுக்கும் களம் அமைத்திருந்த யாழ்குடா நாடு இன்று ஒரு ரணகளமாக இருக்கக் காணப்படுகின்றது.

இந்நிலையிலேயே யாழ்குடாநாட்டில் வாழ முடியாதவர்களாகவும், இலங்கையின் இனப்பகைமையை சகித்துக்கொள்ள முடியாத நிலையிலும் 'ஒறேற்றர்' சுப்பிரமணியம், வி.பொன்னம்பலம் ஆகியோர் அந்நிய நாடுகளில் தமது இன்னுயிர்களை நீத்துள்ளனர்.

இந்த இருவரும் மட்டுமல்ல; இவர்களைப் போன்று பெரும்பாலான ஜனநாயக நலன் விரும்பிகள் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் இலங்கையின் இனப் பிரச்னைக்கு ஓர் அரசியல் தீர்வுகாணப்படவேண்டுமென்ற

சிறுபான்மையின தமிழ் பேசும் மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை வெளிப்படுத்து வனவாக இருக்கின்றன.

வடக்கே வவுனியாவிலும், கிழக்கிலும் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தி முடித்திருப்பதன் மூலம் ஜனநாயகத்தை மீண்டும் இப்பகுதிகளில் நிலைநாட்டியுள்ளதாக அரசு தரப்பினர் தெரிவித்து வருகின்றனர்.

இத் தேர்தல்கள் எவ்வளவு தூரம் நேர்த்தியான முறையில் நடத்தப்பட்டன என்பதும், பெரும்பாலான வேட்பாளர்கள் எவ்வளவு தூரம் மனமுவந்து போட்டியிட முன்வந்தார்கள் என்பதும் வவுனியாவிலும், கிழக்கிலும் உள்ள வாக்காளர்களில் எவ்வளவு பேர் வாக்களித்திருந்தனர் என்பதும்

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க கூறி வந்தார்.

ஆனால் வவுனியாவிலும் கிழக்கிலும் இடம் பெற்றுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்ற முதுமொழிக்கு ஏற்ப அமைந்துள்ளன.

ஜனாதிபதி சிறுபான்மையினரை மரக்கொடிகளாகவும், பெரும்பான்மை சிங்களவர்களை விருட்சமாகவும் வர்ணித் திருந்தார். ஆனால் வவுனியா, கிழக்கு மாகாணங்களின் தேர்தல் முடிவுகள், கொடிகள் என்று வர்ணிக்கப்பட்டிருந்த சிறுபான்மையினரின் பலத்தையே நிரூபிப்பதாக அமைந்திருந்தன.

இந்த ஆண்டை ஆட்சியாளர்கள் ஒரு

ஏக்கப்பெருமூச்சுடன் கம்யூனிஸ்ட் பிரமுகர் வி.பொன்னம்பலம் கனடாவில் தமது இறுதி மூச்சைவிட்டுள்ளார்.

இனம், மதம், பிரதேசம், என்ற எல்லைகளுக்கு அப்பாற்பட்டிருந்த இந்த இன்னுயிர்கள் தமது இறுதி மூச்சுவரை ஓர் ஒற்றுமையான இலங்கையையே மனதில் கொண்டிருந்தன.

ஆனால் இரத்தவெறி பிடித்த போரை நடத்தி தினமும் பல உயிர்கள் துடிதுடித்து மாளுவதைப் பாராமுகமாக இருக்கும் இராட்சதக் கும்பல்களுக்கு, அந்த இன்னுயிர்களின் இறுதி ஆசையை எவ்வாறு தான் அறிந்து கொள்ள முடியும்?




பிறந்த குழந்தைக்கு கெட்டியான ஆகாரங்களைக் கொடுத்தால் இரவில் நன்றாகத் தூங்கும். இது உண்மையா?

உண்மையல்ல. குழந்தைக்கு ஐந்து மாதம் ஆவதற்குமுன் பருப்பு போன்ற கெட்டியான உணவு கொடுத்தால், குழந்தைக்கு மலச்சிக்கல் ஏற்படும். குழந்தை இரவில் நன்கு தூங்குவதற்கும் இது எந்த விதத்திலும் உதவாது. பிறந்த மூன்று மாதத்திற்குப் பின் பெரும்பாலான குழந்தைகள் இரவில் நன்கு தூங்கும். இதற்குக் காரணம் நரம்பு மண்டலத்தின் வளர்ச்சியே ஒழிய, சத்துள்ள உணவல்ல.

அழுகின்ற பொழுதெல்லாம் குழந்தையை எடுத்து வைத்துக்கொள்ளுதல் அதன் உடல் நலத்தைப் பாதிக்கும். இது உண்மையா?

உண்மையல்ல. அழுகின்ற குழந்தையை எவ்வளவு கொழுப்பு உள்ளது- என்பதைச் சார்ந்துள்ளது. இரண்டு மாதத்திற்கு குறைந்த குழந்தைகளுக்கு, அவைகள் கேட்ட பொழுது, அதாவது இரண்டிலிருந்து மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை பாலூட்ட வேண்டும். அழுகின்ற குழந்தையை அமைதிப்படுத்த அடிக்கடி பாலூட்டுவதைத் தவிர்க்கலாம். இதனால் குழந்தையின் எடை அதிகரிக்கும்.

## தாய்மார்கள் கவனிக்க!

தானாக எழுந்து நடப்பதற்கு முன்பு குழந்தையை நிற்க வைத்தால் அதன் கால்கள் வளைந்துவிடும். இது சரியா?

தவறு. குழந்தையின் அக்குழில் உங்கள் கைகளைக் கோர்த்து, நிற்க வைத்தால் யாதொரு பிரச்சனைகளும் வராது. இதனால் கால்கள் வளைந்து, கோணலாகாது.

இரவில் குழந்தையை நன்கு தூங்க வைக்க மிக எளிதான வழி, அதன் வாயில் ஜூஸ் அல்லது பால் நிரப்பிய புட்டியை வைத்து விடுவார்கள். இது 'சரியா?

தவறு. உங்கள் குழந்தை தூங்கும் பொழுது குடிப்பதற்காக ஜூஸ் அல்லது பால் நிரப்பிய புட்டியை அதன் வாயில் சொருகக் கூடாது என்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஜூஸ் அல்லது பாலில் சர்க்கரை கலந்திருக்குமாகையால், இரவு முழுவதும் சர்க்கரை குழந்தையின் பல்லில் படிந்து கொண்டேயிருக்கும். இதனால் பல் சொர்தையாக வாய்ப்புண்டு. வாயில் புட்டியை வைத்தால்தான் தூங்குவது என்கிற பழக்கம் குழந்தைக்கு ஏற்பட்டுவிடும்.

தாய்ப்பால் குடிக்கும் குழந்தையின் உடல் பருக்காது? இது சரியா?

செயற்கையான உணவுகளை உண்ணும் குழந்தைகளைப் போல், தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளும், அதிகமாகச் சாப்பிட்டு உடலை பருமனாக்கிக்கொள்ள முடியும். குழந்தைகள் எவ்வளவு சாப்பிட்டு உடலை பருமனாக்கிக் கொள்ள முடியும் என்பது குழந்தைகள் எவ்வளவு சாப்பிடுகின்றன- தாய்ப்பாலில் எடுத்து வைத்துக்கொள்ளுதல் பெற்றோர்க்கு மட்டுமல்லாமல், குழந்தைக்கும் இதமாயிருக்கும். மூன்று மாதத்துக்குக் குறைவான குழந்தைகள்



பசி, உடல் சோர்வு, வலியால் அழலாம். அதைப் புரிந்துகொண்டு அதற்கு ஏற்ப செயல்பட வேண்டும்.

தாய்ப்பால் குழந்தைக்கு வேண்டிய எல்லாச் சத்துக்களும் கொண்ட உணவு. இது உண்மையா?

உண்மைதான். தாய்ப்பால் ஒரு சிறந்த சத்துள்ள உணவு என்றாலும், A,D,E விட்டமின்களையும் சொட்டு மருந்துகளையும் அதனுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

—ஷா—

## நீங்களும் தைக்கலாம்


### ஜம்பர் வெட்டு (Magyar Overall Blouse):

**3 அல்லது 4 வயது பெண் பிள்ளைகளுக்கு. தேவையான துணி: நீளம் 18 × அகலம் 27 அங்குலம்.**

நேரடியாக துணியில் வெட்டக் கஷ்டமாய் இருந்தால், முதலில் காகிதத்தில் அடையாள மிட்டு சரிப்படுத்திக் கொண்ட பிறகு துணியின் மீது அந்த அளவு வைத்து அடையாமிட்டு துணியை வெட்டலாம்.

### அடையாளமிடும் ஒழுங்கு

1. படத்தில் காண்பித்த பிரகாரம் ABயில் குறுக்கு வசமாகத் துணியை ஒரு மடிப்பு மடித்துக்கொண்டு, பிறகு இரண்டாம் முறை ACயில் நெடுக்கு வசமாக (சுருக்கம் இல்லாமல்) மடித்துக்கொள்க. துணியின் உட்புறம் வெளிப்புறம் கவனித்து மடிக்க வேண்டும். எப்பொழுதும் வெளிப்புறம் மேல் பக்கமாக இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும்.
2. படத்தில் காண்பித்த பிரகாரம் மார்க்கிங் சோக்கால் குறுக்கு வசமாக 3 அங்குலமும் நெடுக்கு வசமாக 4 1/2 அங்குலமும் அளவுப் பிரகாரம் கட்டம் வரைந்து கொள்க. பிறகு ABCDயால் குறிப்பிடுக. அதற்கப்புறம் EFGHIJ முதலியவை களைக் கீழ்க் கூறியவாறு குறிப்பிடுக.




3. Jஆனது 1/2 அங்குலம் Aக்கு கீழ் இருக்கிறது. Fஆனது ABமடிப்பு ஓரமாக 2 1/4 அங்குலம் Aயிலிருந்து இருக்கிறது. இந்த JF வட்ட அடையாளம் கழுத்தின் பின் ஆழத்தைக் குறிக்கிறது.
4. E ஆனது 2 1/4 அங்குலம் Aயிலிருந்து தாழ முன்புறக் கழுத்தின் பாகத்தில் இருக்கிறது. EFவட்டமானது முன்புறக் கழுத்தின் வட்டத்தைக் குறிக்கிறது.
5. Gஆனது 6 அங்குலம் Bக்குக் கீழ் இருக்கிறது. கை வளைவை Gக்கு மேல் 1/2அங்குலத்தில் ஆரம்பிக்கவும். கையின் அகலம் 5 1/2 அங்குலம் ஆகும்.
6. GH நேர்க்கோடானது Gயிலிருந்து 4 1/2 அங்குலம்.
7. (a) I ஆனது மாதிரி (Style) I Aயில் Dயிலிருந்து 1/2 அங்குலம் மேல் நோக்கியிருக்கும்.
   (b) I ஆனது மாதிரி (Style) IBயில் Dயிலிருந்து 1 1/2 அங்குலம் முன்பாகத் தள்ளியும், 1/2அங்குலம் மேல் நோக்கியும் இருக்கும்.
8. G முதல் Iவரையுள்ள வளைவு கையின் அடிப்பாக வளைவு CIநேர்க்கோடானது சட்டையின் கீழ்ப்பாகத்தைக் குறிக்கிறது. இந்தக் கோடு 1/2 அங்குலம் Cயிலிருந்து I பக்கம் உயர்ந்து இருக்கிறது.
9. மேலே கூறியவாறு கோடிட்ட பிறகு ஒரு கத்தரியைக் கொண்டு துணியைக் கோட்டின் ஓரமாக வெட்டவேண்டும்.

குறிப்பு: படத்தில் நீட்டுப்புள்ளியிட்ட அடையாளம் மடிப்பைக் குறிக்கிறது.

தையல் முறை: கழுத்துக்கும் கைக்கும் சிறு மடிப்புப் பட்டி வைத்துப் பார்வைக்கு அலங்காரத் தையல் போட்டுத் தைக்கவும்.

சட்டையின் அடி ஓர மடிப்பு 1 அங்குல அகலம் இருக்கப் பட்டை தைக்கவும்; அல்லது கையையும் கழுத்தையும் தைத்த முறை போலத் தைக்கவும்.

சட்டைக்கு நாடா, பை முதலியவைகள் தேவையானால், அவற்றை வைத்துத் தைக்கவும்.

சட்டையை அழகுபடுத்த மார்புப் புறம் ரிப்பன் அல்லது பட்டுக்குச்சு அல்லது திரித்த கனத்த பட்டு நிறக் கயிறு வைத்து அலங்கரிக்கவும்.

முன்புறம் முழுவதும் திறந்து இருந்தால், பொத்தான் வைத்துத் தைக்கவும்.

# பயிர் வளர நல்ல நிலம் வேண்டும் முடி வளர நல்ல தலை வேண்டும்

## கூந்தல் பராமரிப்புக்கு சில வழிகள்



பயிர் வளர்வதற்கு நிலத்தைப் பண்படுத்துவது போல நல்ல தலை முடி வளர்வதற்கும் தலையினைப் பண்படுத்துதல் அவசியமாகும். வளரும் பயிர் நோய் நொடியின்றி செழிப்பாக வளர்வதற்கு அதே பயிரில் ஒரு விவசாயி கருத்துச் செலுத்துவதைப் போன்று நமது தலைமுடியின் வளர்ச்சியிலும் நாம் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் சிகை அலங்காரம் பொதுவானதே. இருப்பினும் ஆண்களை விட பெண்கள் தங்கள் அழகுக்கு அழகூட்டுவது போல சிகையையும் சீராகவும் அழகாகவும் வைத்திருக்க வேண்டும்.

நகர்ப்புறங்களில் வாழும் பெண்கள் கிராம வாசிகளைப் பார்க்கிலும் சுற்றுச் சூழலால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். வீசும் காற்றுத் தூசி மயமானதனால் அடர்ந்த கூந்தலுள்ள பெண்கள் தங்கள் கூந்தலை சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டியவர்களாகவுள்ளனர். நகர்ப்புறங்களில் கிடைக்கும் நீரிலும் இரசாயனக் கலவைகள் இருப்பதனால் அந்த நீரில் தலை கழுவும்போது தலைமுடி வேண்டாத இரசாயனத் தாக்குதல்களை எதிர்நோக்க வேண்டி இருக்கிறது.

இத்தகைய பாதிப்புகளினால் தலை முடியின் நுனியில் பிளவு ஏற்படுகின்றது. இயற்கை எண்ணைத் தன்மை இழந்து விடுகிறது. அழுக்குப் படிவதுடன் சிக்கும் ஏற்படுகிறது. போதுமான கவனம் செலுத்தப்படாவிட்டால் மயிர்க்கால்கள் உறுதியற்றவனாகி முடி உதிர்ந்துவிடும் நிலையும் ஏற்பட்டுவிடும்.

பெண்கள் தங்கள் சிகையினை துப்பரவாகவும் செழிப்பாகவும் ஆரோக்கியமாகவும் வைத்துக்கொள்ள பல நவீன சாதனங்கள் சந்தைகளில் கிடைக்கின்றன. ஆனால் உண்மைச் சாதனங்களைப் போலவே போலிகளும் உலவுகின்றன. உண்மையான பொருட்கள் சற்று விலை அதிகமாகவே இருப்பினும், மலிவான விலையில் கிடைக்கும் போலிகளினால் தீமையினைத் தேடாமல், நல்லவற்றையே தேடி வாங்கிக் கொள்வதில் கண்டிப்பாக இருக்கவேண்டும்.

'ஷம்பூ' என்பது தலையில் படியும் அழுக்குகளை நீக்கி முடியைச் சுத்தமாக வைத்திருக்க உதவும் சாதனம். வாரத்துக்கு இரு தடவை 'ஷம்பூ' தேய்த்துக் குளிப்பது நல்லது. ஆனால் ஷம்பூ கேசத்துக்கு வேண்டிய புரதத்தையோ போஷாக்கையோ அளிப்பதில்லை. 'ஷம்பூ'வைத் தொடர்ந்து பண்படுத்துதல் என்ற 'கொண்டிஷனர்' பாவிக்க வேண்டும்.

'கொண்டிஷன'ரிலும் இருவகை உண்டு. ஒன்று ஷம்பூவைப் போன்றே முடியில் தேய்த்து சிறிது நேரத்தின் பின்னர் கழுவி விடுவது. மற்றொருவகை தலையிலேயே ஒரு நாளாவது தடவி வைத்திருப்பது. இந்த இரண்டாவது ரகமே முடிக்கு வேண்டிய 'உரத்தி'னை அளிக்கிறது. மயிர் செழிப்பாக வளர்வதற்கேற்ற உறுதியினை மயிர்க்கால்களுக்கு இதுவே தருகிறது.

கொண்டிஷனர் மயிர்க்கால்களிலிருந்து கசியும் இயற்கைத் திரவத்துக்கு வலுவினைச் சேர்க்கிறது. முடியில் ஏற்படும் சிக்குகளை நீக்குவதுடன் முடி நுனியில் தோன்றும் வெடிப்பு மற்றும் பிழவுகளையும் நீக்குகிறது. கேசத்தைப் பளபளப்பாக வைத்திருப்பதுடன் மென்மையாக ஆக்கவும் செய்கிறது. முடியின் வரட்சித்தன்மையிலிருந்தும் பாதுகாப்பளிக்கிறது.

கொண்டிஷனரில் ஒவ்வொரு வகையான தலை முடிக்கும் ஏற்றதாக பல ரகங்கள் உள்ளன. தங்கள் தங்கள் முடியின் தன்மைக்கேற்றவாறு கொண்டிஷனரை தெரிந்தெடுக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

குறிப்பு: நம் நாட்டவர்கள் தலைக்குப் பயன்படுத்தும் தேங்காய் எண்ணை மற்றும் நல்லெண்ணெய் போன்றவையும் முடியைப் பண்படுத்தும் (கொண்டிஷன்) பணியை பெருமளவு புரிகின்றன என்பதனையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

# எடை குறைந்தது எழில் உயர்ந்தது அந்த இரகசியத்தை நீங்களும் அறியலாம்



ஜாக்கி வார்ணர் தனது 20வது வயதில் இளமையும் அழகும் பூத்துக் குலுங்கும் அழகியாக விருந்தாள். அவளுடைய அழகும் உடல் வாகும் காளை ஃபிலிப் வார்ணரைக் கவர்ந்தது. மணம் முடித்தார்கள். றொபட் என்ற ஆணும் கெஸ்லி என்ற பெண்ணும், திருமணமாகி 3 வருடங்களுக்குள் பிறந்து விட்டனர்.

குழந்தைகள் பிறப்பதற்கு முன்னர் தன்னையே சுற்றிச் சுற்றி வலம் வந்த கணவர் ஃபிலிப், தன்மீதிருந்த ஆசையை மெல்ல மெல்ல தவிர்க்கத் தொடங்கியதை ஜர்க்கியால் தாங்க முடியவில்லை. தன்னால் இயன்றவரை பல சாகசங்களைச் செய்தும் தன் கணவனைத் தன்பால் ஈர்க்க முடியவில்லை. எக்காரணமுமின்றி தன் கணவர் எடுத்ததற்கெல்லாம் எரிந்து விழுவதை அவளால் பொறுத்துக்கொண்டிருக்க முடியாதிருந்தது. கணவனின் பாராமுகத்துக்கான காரணத்தைக் கண்டு பிடிக்க அவளுக்கு வழியிருக்கவில்லை.

பெண்களின் மாறா இளமையும் உடலுறுப்புகளின் கவர்ச்சித் தோற்றமுமே ஆண்களை அவர்கள் மீது நாட்டம் கொள்ளச் செய்யும் சக்தி வாய்ந்தவை என்ற கருத்தை ஒரு சஞ்சிகையில் படித்தறிந்தாள் ஜாக்கி.

குழந்தைகள் பிறந்ததும் தனது உடலில் சதைப் பிடிப்பு அதிகமாகி விட்டமையும் அங்கங்கள் உருக்குலைந்து தளர்ந்து போனமையும் அவலட்சண உருவைத் தனக்குத் தந்து விட்டதை அப்போதுதான் உணரத் தலைப்பட்டாள்.

திருமணமான புதிதில்தான் இருந்த கவர்ச்சித் தோற்றத்தைக் காட்டும் புகைப்படங்களையும் தான் தற்போதுள்ள தோற்றத்தைக் கண்ணாடியிலும் ஒப்பிட்டுப் பார்த்தாள். தன் மீது தனக்கே வெறுப்புத் தோன்றியது. வேண்டாத இடங்களிலெல்லாம் வெறுப்பூட்டும் சதை வளர்ந்து தொங்கிக் கொண்டிருப்பதை அவதானித்து வேதனையின் விளிம்புக்கே சென்றுவிட்டாள். 11 வயதும் 10 வயதுமான இரு பிள்ளைகளைப் பெற்றெடுத்து தான் இன்று 32 வயதில் கிழவி போலாகி விட்டதை உணர்ந்து கண்ணீர் வடித்தாள்.

சினேகிதிகளின் அறிவுரையின்படி ஒரு நல்ல மருத்துவரை நாடினாள். அப்போதுதான் முதலில் தனது எடையினைப் பார்த்தாள்.

254 இறாத்தலை அது காட்டியது. எப்படியும் 115 இறாத்தலையாவது எடையில் குறைக்காவிட்டால் ஆயுள் குறைவதுடன் வெகு விரைவில் உடல் இன்னும் அகோரமாகிவிடும் என்று டாக்டர் எச்சரிக்கை செய்து, கொழுப்பற்ற உணவுகளை எவ்வாறு தெரிவு செய்து உண்ணவேண்டும் மருத்துவர் பட்டியல்போட்டுக் கொடுத்தார்.

பத்து வருடங்களுக்கு முன்னர், இரண்டாவது பெண் குழந்தை கெஸ்லியைப் பெற்றதைத் தொடர்ந்து ஜாக்கிக்கு பகல் வேளையில் பசி எடுப்பதில்லை. ஆனால் இரவானதும் பகலில் உள்ள குறைபாட்டினையும் சேர்த்து உண்ண ஆரம்பித்துவிடுவாள்.

இரவு 8.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை வாய் எப்போதும் அசைபோட்ட வண்ணமே இருக்கும். தாராளமான இரவு உணவின் பின் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்க உட்காருவாள். கூடவே சொக்களேட்டுகள், உருளைக்கிழங்கு வறுவல் மற்றும் நொறுக்குத்தீனி வகைகள் அத்தனையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு கொறிக்க ஆரம்பித்து விடுவாள்.

உடலின் எடை அதிகரித்ததுடன் அங்கங்களின் அளவு 47-44-58ஆகி விட்டது. பூதாகாரமான தோற்றத்தைப் பெற்ற ஜாக்கியைக் கண்டு ஃபில் 'பயந்து' போயிருப்பார் என்பது வெளிப்படை.

ஜாக்கி கால தாமதமின்றி உணவுக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கத் தொடங்கினாள்.

காய்கறி வகைகளையே விரும்பி உண்ணலானாள்.

கொழுப்புச் சேர்ந்த உணவு வகைகளை முற்றாக ஒதுக்கி விட்டாள்.

வாரத்தில் ஒரு தடவை அல்லது இரு தடவை மட்டுமே கொழுப்பற்ற, இறைச்சி உணவு வகைகளை உண்ணுகிறாள். அத்துடன் வேண்டாத சதைகளை அகற்றுவதற்கான உடற்பயிற்சிகளையும் மேற்கொண்டார்.

இன்று 36-26-36 அளவுகளுடன் கவர்ச்சி மங்கையாகத் திகழ்கிறார்.

கணவர் ஃபிலிப் இப்பொழுது தன் மனைவி மீது மிகுந்த வாஞ்சையுடன் அக்கறை செலுத்த ஆரம்பித்ததில் ஆச்சரியமில்லை அல்லவா?

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது -சுகந்தினி

### தேன்ரொட்டி

**தேவையானவை:**

பாண் துண்டுகள்-6
சீனி- 1 கோப்பை
ஏலக்காய் பொடி- 1/2 தேக்கரண்டி
நெய் அல்லது எண்ணெய்-பொரிப்பதற்கு.

**செய்முறை:**

1. பாண்துண்டுகளை சிறு சிறு சதுரங்களாக வெட்டிக்கொள்ளவும்.
2. சூடான நெய் அல்லது எண்ணெயில் பொன்னிறமாக வறுத்து எடுத்துக் கொள்ளவும்.
3. சூடாக இருக்கும் போது மேலே பொரித்த சீனியையும் ஏலக்காய் பொடியையும் தூவி நன்றாகப் பிசறி விடவும்.
4. சூடாக பரிமாறலாம். சீனிக்குப் பதிலாக வெல்லச் சக்கரையையும் உபயோகிக்கலாம்.


பரிசுத் திட்ட கூப்பன் இல—5

## தினமுரசு-அருள் ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்கும் தங்க நகைப் பரிசுத் திட்டம்

தங்க நகைப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டும் அதிஷ்டசாலிகளில் முதல் அதிஷ்டசாலிக்கு தங்க நகை காத்திருக்கிறது.

ஏனைய பத்து அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

1. மகளிர் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
2. இல 1 முதல் 20 வரையான பரிசுத்திட்ட கூப்பன்களைச் சேகரித்து வையுங்கள்.
3. சேகரித்து வைத்துள்ள கூப்பன்களைப் பின்னர் நாம் குறிப்பிடும் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கலாம்.

# தகவல் பெட்டி

## சந்தித்தவர் மகிழ்ந்தனர் கண்டவர் வியந்தனர்



ஜேர்மனியிலுள்ள ஹம்பேர்க் நகரப் பூங்காவில் அன்று கூடியிருந்த மக்கள் அனைவரும் ஒரே திசையில் தங்களது பார்வையைத் திருப்பினர். அதிசயத்தில் வியந்தனர். காரணம் இதுதான்–

ஜேர்மனியின் அதி உயர்ந்த மனிதர் என்ற சாதனைக்குரியவர் கொன்ஸ்ரன்ரைன் கிளெயின்; அதே நாட்டில் ஆகக்குறைந்த 3 அடி 3 அங்குலம் உயரமானவர் மேரி வெலன்.

இருவரும் தற்செயலாக பூங்காவில் சந்தித்துக்கொண்டனர்.

அண்ணாந்து பார்த்து மலைத்துப்போய் நின்றார் மேரி வெலன். குனிந்து பார்த்து வியந்து போய் நின்றார் உயர்ந்த மனிதன் கிளெயின்.

பின் மலைப்பும் வியப்பும் நீங்கி நெருங்கி வந்தனர். கைகுலுக்கிக் கொண்டனர். காதலர்போல் கை கோர்த்தபடி பூங்காவினை வலம் வந்தனர்.

இந்த அபூர்வ சந்திப்பு பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்ததில் அர்த்தமுண்டல்லவா? அட. படத்தில் பார்க்கும் எமக்கே வியப்பாக இருக்கிறதே நேரில் பார்த்தவர்களுக்கு எப்படியிருந்திருக்கும்?!




## மூக்குமுட்ட பிடிக்கும் மூன்று வயது பெண் குழந்தை உலகசாதனை படைக்கும் எடை!

தனது மூன்றாவது வயதில் 167 இறாத்தல் எடையுடன் அபரிமிதமாக உணவு உட்கொண்டு, ஆறாவது வயதில் 407 இறாத்தல் எடையினை எட்டிப்பிடித்த ஜீன் லீயைப் பற்றி 32வது முரசில் தகவல் தந்தோம்.

இப்போது அந்த ஜீன் லீயையே வெற்றிகரமாகத் தோற்கடித்துவிட்ட குட்டி மாமிச மலை பற்றிய தகவலை 'பெருமித'த்துடன் முரசு தருகிறது.

படத்தில் காணப்படும் தெப்றாலோ றெய்பேண் 1991 ஜூலை 27ல் பிறந்தாள். பிறக்கும் போது இக்குழந்தையின் எடை 19 1/2 இறாத்தல். இத்தனை கூடுதலான எடையுடன் பிறந்தும் பிரசவம் சர்வ சாதாரணமாகவே இருந்தமையினால் தாய் வெண்டி றெய்பேண் தெப்றா மீது அதிக பாசம் வைத்துள்ளார். ஆனால் பிறந்தது முதல் பிள்ளை அடங்காத பசியுடன் எப்போதும் அழுதவண்ணமே இருக்குமாம். தாய்ப்பால் மட்டும் போதாமையால் புட்டிப்பாலும் அளவுக்கு அதிகமாகவே ஊட்ட வேண்டியிருந்துள்ளது.

மருத்துவர்கள் பலர் இக்குழந்தையைப் பரிசோதித்து, எப்பிழையையும் கண்டு பிடிக்காமையினால் தொடர்ந்து பாலூட்டும்படி வெண்டிக்கு அறிவுரை கூறினார். தனது குழந்தையை முழுநேரமும் கவனிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தமையினால் வெண்டி தனது வேலையிலிருந்தும் நீங்கி, 24 மணி நேரமும் குழந்தையுடனேயே காலங் கழிக்க வேண்டியதாயிற்று.

தெப்றாவின் தந்தை இர்வின் றெய்பான் ஒரு மரத்தளபாட நிறுவனத்தில் சாரதியாகக் கடமை பார்க்கிறார். அவருடைய வருமானத்தை மட்டும் நம்பி இந்தக் குழந்தையின் அகோரப் பசிக்கு இரை கொடுக்க முடியாதிருக்கிறது.

"என் குழந்தை தெப்ரா எப்போது எதையாவது உண்ண வேண்டும் என்ற ஆவலுடனேயே இருக்கிறாள். சராசரி 6 தடவைகள் ஒரு நாளில் சாதாரண உணவு உண்ணுவாள். இவைதவிர இடைக்கிடையே ஏதாவது நொறுக்குத் தீனியும் கொறிக்கக் கொடுக்க வேண்டியுள்ளது" என்கிறார் வெண்டி.

**தெப்ரா தினசரி உண்ணும் உணவின் பட்டியல் வருமாறு:**

*காலை உணவு:*

1. ஒன்பது முட்டைகளைக் கொண்ட ஒம்லேற்;
2. பன்றியின் தொடைப் பகுதி இறைச்சி - கால் இறாத்தல்.
3. சுவிஸ் பாற்கட்டி -2 பக்கெற்;
4. இறைச்சி அல்லது மீன் பொரியல் -1 இறாத்தல்.
5. றொட்டி (பாண்)- 1/2 இறாத்தல்
6. பால்- 1 குவாட்.

*இடை மதிய உணவு:*

1. அவித்த முழுக்கோழி -2
2. பருப்புவகை -வேகவைத்தது-1 இறாத்தல்
3. சாதம் -1 இறாத்தல்

*மதிய உணவு:*

1. இறைச்சிவகை இடை வைத்த சான்ட்விச்-4.
2. கோசுக்கீரைக் குழம்பு
3. ஊறுகாய் வெங்காயம்-வேறு காய்கள் 1/4 இறாத்தல்

*பிற்பகல் உணவு:*

1. சீஸ் பேர்கோர்ஸ்-8
2. உருளைக் கிழங்கு வேகவைத்துப் பொரித்தது- 1 இறாத்தல்
3. பாலுடன் ஐஸ்கிறீம் முதலியவை கலந்தபானம் 2 பெரிய கோப்பை.
4. வெங்காயம்,கீரை கலந்த சாலட் -4 கோப்பை

*மாலை உணவு*

1. சூப்-ஒருகோப்பை
2. நூடில்ஸ், இறைச்சி கலந்த பானம்.
3. பூண்டுச் சாறு கலந்த றொட்டி -1/2 இறாத்தல்.

*இரவு உணவு*

1. எலும்புடன் சமைத்த இறைச்சி-4துண்டு
2. அவரைவகை (வேகவைத்தது) -1இறாத்தல்.
3. வேகவைத்த உருளைக் கிழங்கு-4.
4. பழவகை.

இவைதவிர இடையில் கொறிக்கும் உணவு வகைகள் எப்போதும் அவர் கைக்கு எட்டக்கூடிய அளவில் இருக்க வேண்டும்.

இல்லாவிட்டால் ஒரு ரகளையே பண்ணிவிடுவாள் குழந்தை. அதனால் எப்போதும் ரெடி நொறுக்குத்தீனி.

## நீரில் பாய்ந்த மனிதமலை!

நீச்சல் குளம். அதன் மேலே சில மீற்றர் உயரத்தில் பொருத்தப்பட்டிருக்கும் பாயும் பலகை. அதில் ஏறி நின்று நீரில் குதித்து மிதக்க வேண்டும்.


அதுதான் போட்டி. போட்டி நடந்தது கனடாவில் உள்ள வான்கூவர் நகரில். நீரில் குதிக்கும் பலரை நாம் கண்டிருக்கிறோம். நீரிலே குதித்து மிதக்கும் போட்டியில் பங்குகொண்ட பலரையும் பார்த்திருக்கிறோம். ஆனால் கனடாவில் நடந்த போட்டி விசித்திரமானது- வித்தியாசமானது.

நீரில் குதித்தால் மட்டும் போதாது. நீரில் ஒருவர் குதிக்கும் போது அந்தத் தாக்கத்தால் சிதறி மேலே எழும் நீரின் உயரத்தையும் அலைகளின் அளவையும் கணக்கிடுவார்கள்.

போட்டி விதிக்கு ஓ.கே சொல்லிவிட்டு பலரும் பாய்ந்தார்கள்.

ஆனால் வெற்றி பெற்றவர் வான்கூவர் நகரைச் சேர்ந்த டேல் ஹொண்டர்சன்.





அவரது வெற்றிக்கு கைகொடுத்தது அவரது எடை.

எடை எவ்வளவு தெரியுமோ? 638 இறாத்தல்.

என்ன, வியப்பாக இருக்கிறதா? நீர் அதிர்ந்துவிட்டது. அப்படியொரு பாய்ச்சல். அப்படியொரு அதிர்வு.

ஆனால் கனடாவில் போட்டியில் குதிப்பதற்கு முன் அவர் ஜப்பானில் நடந்த போட்டியிலும் கலந்து கொண்டாராம். ஆனால் அங்கு சுமோ மல்யுத்த மாமலைகள் இருக்கிறார்கள் அல்லவா? அதனால் அங்கு வெற்றிக்கொடி நாட்ட முடியவில்லை. கனடாவில் கலக்கிவிட்டார்.

# பாப்பா முரசு

## பாப்பா முரசு சிறுகதை




# நல்லது நாட்டைக் காக்கும்

சாளுக்கிய மன்னர் வீரவர்மன் தமது பெயரைப் போலவே வீரமுள்ளவர். மிக மிக நல்லவர். நாட்டு மக்களுக்காக எந்தத் தியாகமும் செய்யத் தயாராக இருந்தவர். அப்படிப்பட்ட நல்லவரின் ஆட்சியில் பசியும், பட்டினியும் தலைவிரித்தாடியது. காரணம் மழை பெய்யாததுதான்.

நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களைப் போக்குவது ஒரு அரசனின் கடமை என்பதை அவர் உணர்ந்தார். அதனால் தன்னை அடிமைப்படுத்திக்கொண்டாவது அண்டை நாட்டு அரசர்களிடமிருந்து பொருளுதவி பெற்று தமது மக்களின் பசி பட்டினியைப் போக்க முடிவு செய்தார். அதன்படியே அண்டை நாடுகளான, துளுவ, வேதவ நாட்டு மன்னர்களைக் காணச் சென்றார்.

அங்கே அவர் சென்றபோதுதான் அந்தச் சோகச் சம்பவம் நிகழ்ந்தது. மேலே சொன்ன இரண்டு அரசர்களும் சுமார் முப்பது மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு முனிவரைக் காணச் சென்றதாகவும், அங்கே உள்ள மலை அடிவாரத்தில் உள்ள பாதாள குகைக்குள் புதைந்து கிடந்த புதையலை எடுக்கப் போனபோது புலி, பாம்பு இவைகளால் தாக்கப்பட்டு இறந்துபோன சம்பவம்தான் அங்கு அவர் கேள்விப்பட்ட செய்தி.

அந்த இரு நாடுகளையும் காப்பாற்றும்படி இரு நாட்டு ராணிகளும் வீரவர்மனைக் கேட்டுக் கொண்டனர். மன்னர் இரக்ககுணம் உள்ளவர் என்றபடியால், தன் நாட்டின் பஞ்சத்தோடு மற்ற இரு நாடுகளையும் காப்பாற்றும் வாக்குறுதியையும் கொடுத்துவிட்டு அந்த முனிவரைக் காண விரைந்தார்.

முனிவருக்கு அரசரைத் தெரியாத காரணத்தால் தன்னை ஒரு சாதாரண மனிதராகக் காட்டிக்கொண்டு முனிவரிடம் தன்னை மூன்று நாட்கள் மட்டும் சிஷ்யனாக ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். முனிவரும் மனமிரங்கி அவரை மூன்று நாட்களுக்குச் சிஷ்யனாக ஏற்றுக் கொண்டார்.

துளுவ, வேதவ மன்னர்களின் சாவுக்கான காரணத்தை அங்கே தங்கி, தெரிந்து கொள்வதே அரசரின் நோக்கமாக இருந்தது. அதன்படி முனிவரின் இதர சீடர்களிடம் பேசி முதலில் புதையலின் மர்மத்தைப் புரிந்துகொண்டார்.

கோடிக்கணக்கான பெற் காசுகள் அந்த மலை அடிவாரத்தில் இருப்பதையும், அதை நல்ல நோக்கத்துடன் செலவு செய்ய யார் முன்வந்தாலும் அதைக் காவல் காக்கும் பாம்பும், புலியும் ஒன்றும் செய்யாது என்பதையும் தெரிந்து கொண்டார்.

மன்னர் நல்ல எண்ணம் உடையவராக இருந்தாலும் மேலும் சில நல்ல எண்ணங்களை மனதில் நிறுத்திக்கொண்டார்.

அவற்றுள் ஒன்று துளுவ நாட்டு யுவராணிக்குத் திருமணம் செய்து வைப்பது. வேதவ நாட்டு இளவரசருக்குப் பட்டாபிஷேகம் செய்விப்பது. இரண்டு நாடுகளின் பஞ்சத்தையும் விரட்டியடிப்பதை மூன்றாவது குறிக்கோளாகக் கொண்டார். தமது நாடு, தமது குடும்பம், தமது மக்கள், பசி பட்டினி என்பவற்றையும் விட மேலே சொன்ன மூன்று நன்மைகளைச் செய்ய அந்தப் புதையலை அடைவது என மனதிற்குள் திட சங்கற்பம் செய்து கொண்டார். அதற்கு அடையாளமாக தனக்குத்தானே ஒரு ஒப்பந்தம் எழுதி அதில் தானே கையொப்பமிட்டுக்கொண்டார்.

பிறகு மலை அடிவாரத்திற்குச் சென்றார். குகைக்கு வெளியே மிகப்பெரிய பாறாங்கல் ஒன்றை நகர்த்த வேண்டியிருந்தது. இதைத் தள்ளி நகர்த்த ஒருவனால் இயலாதே என எண்ணியபடி அதன் மீது கை வைத்தார். என்ன ஆச்சரியம்! அத்தனை பெரிய பாறாங்கல் தானாக நகர்ந்து வழிவிட்டது. சில படிகள் தெரிந்தன. கால் வைத்தால் உடைந்துவிடுமோ என்கிற பயத்துடன் காலை அதன் மீது வைத்தார். படி தானாக நகர்ந்து உள்ளறைக்கு அழைத்துச் சென்றது. ஆங்காங்கே வௌவால்கள் பறந்து கொண்டிருந்தன. ஒட்டடைகளை கையால் உதறித் தள்ளியபடி முன்னேறியவரை, பாம்பு படமெடுத்து ஆடி வரவேற்றது. வீரவர்மனுக்கு வியப்புத் தாளவில்லை. நடு மையத்தில் மிகப் பெரிய ஒரு அண்டா மூடியை நகர்த்தியதும் ஆகா.. கோடிக்கணக்கான பொற்காசுகள்.

இவற்றை எப்படி எடுத்துச் செல்வது? நினைத்த மாத்திரத்தில் அந்த முனிவர் அங்கே தோன்றினார்.

"வீரவர்ம மன்னரே! யாம் உன்னை அறிவோம். நீர் வந்த நோக்கத்தையும் அறிவோம். தீய நோக்கத்துடன் வந்த இரு மன்னவர்களும் இறந்தார்கள்!" என்றார்.

"தீய நோக்கமா? என்ன நோக்கம் சுவாமி அது?" வீரவர்மன் கேட்டார்.

"பஞ்சத்தால் வாடி நிற்கும் உன் நாட்டின் மீது படையெடுக்கும் செலவுக்காக பணம் நாடி இங்கு வந்தனர். அதனால் உயிர் துறந்தனர். துரோகம் செய்ய நினைத்தவர்களுக்கு நீ நல்லது செய்ய நினைத்தாய். அதனால் அத்தனை பொன்னும் உனக்குத்தான். நீ நினைத்தபடியே அது தானாக உன் இருப்பிடம் வந்து சேரும். மகிழ்ச்சியுடன் போய் வா." என்றார்.

மன்னர் வீரவர்மன் மகிழ்ச்சியுடன் நாடு திரும்பியதும் அங்கே அந்தப் பொற்காசுகள் குவிந்திருப்பதைக் கண்டார்.

சில நாட்களில் வேதவ நாட்டு இளவரசருக்குப் பட்டம் சூட்டி அவரைக் துளுவ நாட்டு யுவராணிக்குத் திருமணம் செய்துவைத்தார். அவருடைய நாட்டில் மழை பொழிந்து பஞ்சம் நீங்கியது.

'நல்லது நினைப்பவர்களுக்கு நல்லதே நடக்கும்.'

## நாங்கள் மழலைகள்



மழலைகள் நாங்கள் மழலைகள்
எதிலும் பேதம் காணாப் பறவைகள்

நட்சத்திரப் பூவெடுத்து
வானவில்லில் நாரெடுத்து
மாலை தொடுப்போம்
அதை சூடி மகிழ்வோம்.

வெண்ணிலவால் மெத்தையிட்ட
ஊஞ்சல் அமைப்போம்
அதிலேறி குதூகலமாய்
ஆடி மகிழ்வோம்.


மலையேறி விண்ணைத் தொட்டு
பாடி மகிழ்வோம்.
சூரியப் பூவை கண்டு இரசித்து
துள்ளி மகிழ்வோம்.

எஸ். வெங்கடேஷ்.

## அறிவோம் மனதில் பதிவோம்




மான் இனங்களிலேயே வீட்டு வேலைகளுக்காக வளர்க்கப்படும் மான் 'ரீன்' எனப்படும் வடதுருவ மான்தான். வடதுருவத்தில் வாழும் மக்கள் இறைச்சி, பால்,தோல் ஆகியவற்றிற்கும், பொதி சுமக்கவும் இந்த மான்களையே நம்பியுள்ளனர். இந்த மான்களின் பாதங்களில் அடர்த்தியான முடிக் கற்றைகள் இருப்பதால் பனியில் சறுக்கிவிடாமல் எளிதில் நடக்க முடிகிறது. இந்த மான் இறந்தாலும் பயன்படுகிறது. இதன் தோல் ஆடை செய்யவும், இதன் முடிகளில் கயிறும், இதன் எலும்புகளில் ஊசி, சீப்புகள் போன்றவையும் செய்யப் படுகின்றன.



இரண்டாம் உலகப் போரின் போது இரகசிய செய்திகளை அனுப்ப ஏராளமான புறாக்கள் பயன்படுத்தப்பட்டன. ஜெர்மனி நாட்டுப் புறாக்கள் அதிகமாகப் பயன் படுத்தப்பட்டன. ஜெர்மனி நாட்டுச் செய்திப் புறாக்கள் வழி தவறி இங்கிலாந்திற்கு வரும் போதெல்லாம் அவை பிடிக்கப்பட்டு ஹாம்ஷயரில் அதற்காகவே கட்டப்பட்ட கிடங்குகளில் அடைக்கப்பட்டன. போர் வந்துவிட்டால் சமாதானச் சின்னங்கள் கூட எதிரிகளாகி விடுகின்றன.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 26.03.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 33
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு -05.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 30

**பரிசுக்குரியவர்**
எஸ்.எம்.றிப்கான்
அல்-முபாறக் ம.கல்லூரி
மல்வானை.

**பாராட்டுக்குரியவர்கள்**

மேரி பிரதீபா
புனித அன்னம்மாள் ம.வித்தியாலயம்
கொழும்பு-13.

செல்வன்.சந்திரசேகரம் முகுந்தன்
மட்/மண்டூர் ஸ்ரீஇராம கிருஷ்ண வித்தியாலயம்
மண்டூர்.

செல்வி.ராதிகா சிவகுமார்
சண்முக வித்தியாலயம்
காரைதீவு-3.


ஆர்.கலைச்செல்வி
கொழும்பு-12.

கே.சுஜா
கல்முனை.

பாத்திமா தஸ்தீன் மஹ்ரூப்
சென்மேரிஸ் மகா வித்தியாலயம்
நாவலப்பிட்டி.

எஸ்.முஹம்மட்
மூதூர் மத்திய மகா வித்தியாலயம்
மூதூர்.

## யார்—எப்போது—எப்படி?



- குறுக்கெழுத்து புதிர்களை கண்டுபிடித்தவர் யார்?
  அமெரிக்காவைச் சேர்ந்த ஆர்த்தர் வைன். நியூயோர்க் வேர்ல்ட் என்ற பத்திரிகையின் ஆசிரியர் ஆன அவர் 1913ம் ஆண்டு கிறிஸ்துமஸ் சிறப்பிதழில் புதுமையாக ஏதேனும் வெளியிட நினைத்தார். அன்ப்டி சிந்தித்து குறுக்கெழுத்து புதிரை கண்டுபிடித்தார்.
- செய்தித்தாளில் முதன் முதலில் எப்போது குறுக்கெழுத்து வெளிவந்தது?
  டிசம்பர் மாதம் 13ம் திகதி 1913ம் ஆண்டு முதன் முதலில் வெளி வந்தது. அப்போதிருந்து ஞாயிற்றுக் கிழமைகளில் குறுக்கெழுத்து இல்லாத செய்தித் தாள்களையே பார்க்க முடியாது.
- பிரபலமாக இருந்ததா?
  ஆமாம். 1924ம் ஆண்டு சைமன், சுஸ்டர் ஆகியோர் குறுக்கெழுத்து புதிர்கள் நிறைந்த புத்தகத்தை அச்சிட்டு வெளியிட்ட போது குறுக்கெழுத்து புதிர்கள் மிகப் பிரபலம் அடைந்து விட்டன.
- அந்த புத்தகம் நன்றாக விற்பனை ஆனதா?
  முதலில் விற்பனை குறைவாகத்தான் இருந்தது. 1924ம் ஆண்டு இறுதியில் படு வேகமாக விற்பனை ஆனது. அதுபோலவே மேலும், இரண்டு புத்தகங்கள் வெளியிடப்பட்டன.
- குறுக்கெழுத்துப் புதிர்கள் மற்ற நாடுகளில் பிரபலமானது எப்போது?
  சைமன், சுஸ்டர் ஆகியோர் வெளியிட்ட குறுக்கெழுத்து புதிர் பத்தகத்தால் அமெரிக்கா முழுவதுமே குறுக்கெழுத்து புதிர் புயல் வேகத்தில் பிடித்துக் கொண்டது. சில ஆண்டுகளில் அது இங்கிலாந்திற்குச் சென்று அங்கிருந்து மற்ற நாடுகளில் பரவியது.

## குறித்துக் கொள்ளுங்கள்


1. நம் மூளையின் எடை என்ன?
2. ஜுபிடருக்கு எத்தனை துணைக் கோள்கள் உள்ளன?
3. மைக்கா அதிகம் கிடைக்கும் நாடு எது?
4. உலகின் மிகச் சிறிய பூ எது?
5. இந்தியாவின் முதல் அணுக்குண்டு வெடித்த இடம் எது?
6. உலகின் பெரிய ரேடியோ டெலஸ்கோப் எங்கே அமைக்கப்பட்டுள்ளது?
7. வைரஸ் காரணமாக வரும் நோய் எது?
8. பூமியில் காற்றின் அளவை முதலில் அளந்து கூறியவர் யார்?

**விடைகள்**

1. 1.1 கிலோ முதல் 1.5 கிலோ கிராம் வரை
2. 14
3. இந்தியா
4. டக்வீட் என்ற தாவரத்தின் பூ
5. ராஜஸ்தான் பாலைவனம்
6. இந்தியாவில் புனே அருகில் உள்ள கோடர்ட் என்ற ஊரில்
7. பெரியம்மை
8. எரடோஸ்தனிஸ்

தொகுப்பு-கா.அப்துல் ஜப்பார்.

சவூதி அரேபியா நாடு 21 இலட்சத்து 49 ஆயிரத்து 690 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் உள்ளது. ஆனால், இங்கு ஒரு சிறு ஆறுகூட ஓடவில்லை.




## சரித்திரத்தில் அதிசயம்

உலக சரித்திரத்தில் இடம் பெற்றவர்களில் நாலுபேரின் வாழ்க்கை ஏட்டைப் புரட்டிப் பார்ப்போம். நால்வரும் எண் கூட்டுத் தொகையில் ஒன்று சேருகிறார்கள்.

ஹிட்லர் - ஜெர்மனிய சர்வாதிகாரி
முசோலினி - இத்தாலிய சர்வாதிகாரி
ரூஸ்வெல்ட் - அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி
சேர்ச்சில் - பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர்

இனி இந்த நால்வரதும் எண் அதிசயங்களைப் பார்ப்போம்.

| | முசோலினி | ருஸ்வெல்ட் | சேர்ச்சில் | ஹிட்லர் |
|---|---|---|---|---|
| 1. பிறந்த வருடம் | 1883 | 1882 | 1874 | 1889 |
| 2. வயது | 61 | 62 | 70 | 55 |
| 3. பதவி ஏற்ற வருடம் | 1922 | 1933 | 1940 | 1933 |
| 4. பதவிக்காலம் | 22 | 11 | 4 | 11 |
| மொத்த அதிசய எண்ணிக்கை | 3888 | 3888 | 3888 | 3888 |


ப. மகாலட்சுமி

## கணித விநோதம்

| | |
|---|---|
| 11×1=11 | 11×2=22 |
| 37×3=111 | 37×6=222 |
| 101×11=1111 | 101×22=2222 |
| 271×41=11111 | 271×82=22222 |
| 37037×3=111111 | 37037×6=222222 |
| 4649×239=1111111 | 4649×478=2222222 |
| 13837×803=11111111 | 13837×1606=22222222 |

எம்.ஜே.எம்.அஷ்ரப்
பேருவளை.

# ‘முதுகில் குத்திவிட்டார் வாசிம் அக்ரம்’ பாகிஸ்தான் வீரர் மியண்டாட் வேதனை!



**பா**கிஸ்தானின் முன்னணி கிரிக்கெட் வீரர்களில் முக்கியமானவர் ஜாவெட் மியண்டாட். 1976ம் ஆண்டில் பாகிஸ்தான் அணிக்காகத் தனது முதல் டெஸ்ட்டை விளையாடத் தொடங்கியது முதல் ஒரு வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தைக்கூட விடாமல் தொடர்ந்து இடம்பெற்று வந்த ஜாவெட் மியாண்டாட் 124 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார்.


ஆனால் பாகிஸ்தான் அணியின் பங்களாதேஷ் மற்றும் நியூஸிலாந்து சுற்றுப் பயணத்தில் பாகிஸ்தான் அணியில் ஜாவெட் மியாண்டாட் இடம் பெறவில்லை. இம்ரான்கான் கப்டனாக இருந்தபோதுகூட மியாண்டாட்டுடன் கருத்து வேறுபாடு இருந்தும் அவரை அணியிலிருந்து நீக்குமளவிற்குத் துணிந்ததில்லை. ஆனால் இம்ரானின் சீடரான வாசிம் அக்ரம், ஜாவெட் மியாண்டாட்டைத் துணிந்து பாகிஸ்தான் அணியிலிருந்து நீக்கி புரட்சி செய்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் தேர்வுக் குழுவில் அங்கம் வகித்த கப்டன் வாசிம் அக்ரம், மியாண்டாட்டின் நீக்கம் பற்றிக் குறிப்பிட்ட போது “மியாண்டாட்டை நீக்கும் முடிவை எளிதாக எடுக்க முடியவில்லை. ஆனால் அந்த முடிவு ஒரு மனதாக எடுக்கப்பட்டது. சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஒரு வீரரை நீக்குவது கஷ்டமான காரியம்தான். ஒவ்வொருவரும் ஒரு கால கட்டத்தில் வெளியேறத்தான் வேண்டும். மியாண்டாட் சமீபத்தில் விளையாடிய போட்டிகளைப் பார்த்தால் அவர் பாகிஸ்தான் அணியில் நீடிக்கும் அளவுக்குத் தகுதி பெற்றிருக்க வில்லை, என்பதை உங்களாலேயே உணரமுடியும்” என்று கூறியுள்ளார்.

மியாண்டாட் நீக்கம் பற்றிய விஷப் பரீட்சையில் ஈடுபட்டதற்கு மிகப்பெரிய விலையாக தனது கப்டன் பதவியையே வாசிம் அக்ரம் கொடுக்க வேண்டி வந்தது. மியாண்டாட்டை நீக்கியதற்கு வக்கார் யூனுஸ் தலைமையில் பாகிஸ்தானின் ஒன்பது முக்கிய வீரர்கள் அக்ரமுக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டதால், வேறு வழியின்றி வாசிம் அக்ரமை கப்டன் பதவியில் இருந்து இறக்கியது பாகிஸ்தான் கிரிக்கெட் நிர்வாகம்.

இது இப்படி இருக்க பாகிஸ்தான் அணியியிலிருந்து தான் நீக்கப்பட்டதற்குக் காரணம் வாசிம் அக்கிரமின் சதிதான் என்று ஜாவெட் மியாண்டாட் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது;


“என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையைக் குழிதோண்டிப் புதைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட சிலர் பங்களாதேஷ், நியூஸிலாந்து சுற்றுப் பயணத்திலிருந்து என்னை நீக்கியுள்ளனர். இதனால் பத்தாயிரம் டெஸ்ட் ரன்களை அடித்து நான் சாதனை படைப்பதைத் தடுத்துவிட வேண்டும் என்ற இவர்களது சதி நிறைவேறிவிடும்.



1984-85 பாகிஸ்தான் அணியின் நியூஸிலாந்து சுற்றுப்பயணத்திற்கு அப்போது 19 வயது இளைஞனாக இருந்த வாசிம் அக்ரமை நான்தான் தெரிவு செய்தேன். அப்போது மட்டும் வாசிம் அக்ரமை நான் தெரிவு செய்திருக்காவிட்டால் இதுபோன்ற பரிதாப நிலையை நான் சந்தித்திருக்க மாட்டேன். வாசிம் அக்ரம் எனக்கு முதுகில் குத்தி விட்டார்,” என்று வேதனையுடன் குறிப்பிட்டார் ஜாவெட் மியாண்டாட்.

## ஸ்போர்ட்ஸ்

# ஒய்வுக்கு முன்னர் சாதனை



**பா**ரிஸ் பெண்கள் ஓப்பன் டென்னிஸ் போட்டியில் 37 வயதான டென்னிஸ் வீராங்கனை மாட்டினா நவரத்திலோவா பிரான்ஸின் ஜூலி ஹவார்டை 7-5,6-3 என்ற செட் கணக்கில் வென்று சம்பியன் பட்டத்தைத் தக்க வைத்துக்கொண்டார். இதன் மூலம் ஒற்றையர் பெண்கள் சாம்பியன் போட்டியில் 167 சம்பியன் பட்டங்களை வென்று சாதனை புரிந்துள்ளார் இவர்.

டென்னிஸ் விளையாட்டிலிருந்து இந்த ஆண்டு இறுதியில் ஓய்வு பெறப்போவதாகச் கூறிவரும் மார்ட்டினா நவரத்திலோவா, கடந்த 20 ஆண்டுகளாக உலக டென்னிஸ் அரங்கில் வலம் வரும் ஒரு முன்னணி வீராங்கனை என்பதும் குறிப்பிடத்தக்கது.



# கிர்மானி ஓய்வு!

**இ**ந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் விக்கெட் கீப்பர் கிர்மானி முதல்தர போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுள்ளதாக அறிவித்துள்ளார்.

1975-76ம் ஆண்டு டெஸ்ட் பந்தயத்தில் அறிமுகமானார். 88 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் ஆயிரம் ஓட்டங்களும், நூறு வீரர்களை அவுட் ஆக்கியும் சாதனை படைத்த ஒரே இந்திய வீரர் கிர்மானி.

இவரது சிறந்த சாதனை நியூஸிலாந்து அணிக்கு எதிராக ஒரு டெஸ்ட் இன்னிங்சில் 5 விக்கெட் காட்ச் மற்றும் ஒரு ஸ்டம்பிங் செய்தது.

விக்கெட் கீப்பராக 198 வீரர்களை ஆட்டமிழக்கச் செய்துள்ளார்.

## தங்க மங்கை தயாராகிறார்

இந்தியாவின் தங்க மங்கை பி.டி. உஷா மீண்டும் தடகளப் போட்டியில் ஈடுபடுவார் என்று பலமுறை அறிவிக்கப்பட்டது.

ஆனாலும் அவரது மறுபிரவேசம் சந்தேகமானதாகவே இருந்தது.

இப்போது சந்தேகம் தீர்ந்துவிட்டது. இவ்வாண்டு இறுதியில் ஜப்பான் ஹிரோசிமாவில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டியில் பி.டி. உஷா ஒடப் போகிறார். அதற்கான பயிற்சி முகாமில் கலந்துகொண்டு வருகிறார்.

# தேன்கிண்ணம்

### தேசத்தீயில் சின்ன தூறல்கள்

இனமும் மதமும் இணைந்து
கட்டிய மதிலைக் குதித்து
நேசப் பூக்களைப்
பறித்துக் கொண்டதான நட்புகள்.

என் பர்தாவையும்
நண்பியின் நெற்றிப் பொட்டையும்
மற்றவளின்
சிலுவையுடன் கூடிய ‘செயினை’யும்
நேசிக்கும் மனசுக்குள் அன்பு-
அன்பு மட்டுமே.
தேசம் தீப்பற்றியிருப்பதான நிகழ்வு
இதில்
இனம் தாண்டிய நேசங்கள்
சின்னச் சின்ன
தூறல்களாய்....நிம்மதிதான்.

மனிதத்தை வதைத்தும்-இன்னமும்
புதைத்தும் கொண்டிருப்பவர்கள்
நடுவில் நடந்து
நேசம் சுமப்பவர்களாய் நாம்!
நன்றி சகோதரிகளே,
நட்பினை என்னோடு நிஜமாய்ப்
பகிர்ந்து கொண்டமைக்கு நன்றிகள்.

* ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி.



### இறுதியாய்..

என்னவளே!
உதயத்தில் உதிர்ந்த
வார்த்தைகளுக்கு
உரியவளே!

இன்னும் இன்னும்
மௌனச் சாட்டையால்
என் மனதை
வதைக்காதே

உனக்குத் தெரியாது
உன் குறுநகையில்-ஒரு
குழந்தையாய்-நான்
தவழ்ந்தது.

இரவுகளில்-உன்
நினைவுகளை
உடுத்திக்கொண்டு
உறங்கியது
உனக்குத் தெரியாது.

கனவுகளுக்கு-உன்னை
பரிசளித்தேன்
அதனாலா-என்
இதயத்தை-நீ
பறித்தெடுத்தாய்?
நிரு
ஏக்க நினைவுகளை
ஏந்தி ஏந்தி

அலுத்துப் போச்சு.

ஒரு வேளை
நாளை வேட்டுக்கள்
என்னை வீழ்த்தலாம்
இன்றில் சம்மதம் தெரிவி
ஆத்ம திருப்தியோடு
நாளை
அஸ்தியாவதற்கு.

அமரன்
பாண்டியூர்.

### மரணத்திற்கு முன்...

என்-
கனாத்தெருவில்
நீதான்
கடைசி ரதம்;
காலம் இருக்குமோ
இல்லயோ
தேகம்-
இறக்கும் வரை
உன் ஞாபகங்கள்
என்னைத் தின்னும்!

•

தீக்குள் விழுந்த
இந்த தேசமாய்
உன் இலட்சியங்கள்
கருகிப் போகலாம்.

•

என்-
விடுதலையின்
வீரத்தனல்
உன் கனவுகளை
பொசுக்கிவிடின்
நாளை நீயுமொரு
‘சோனியா’தான்..!

•

எனக்குத் தெரியும்
என்னைத் தவிர
உன்னிடம்
ஒன்றுமே இல்லையென்று..!

•

இந்த
மனிதத்தின்
ஏக்கமும்,
தேசத்தின்
அழுகையும்
உன் கண்ணீரைவிடவுமா
கனத்து விட்டது...!

•

என்னை எரித்தாலும்,
உனக்காக
அழுகைவரும்-
ஏனெனில்
உன்னிதயம்
என்னிடமல்லவா
துடிக்கிறது.



சத்தியத்தின்
குகைக்குள்,
நான்-
சவமாய் கிடந்தால்
என் கவிதைகளை
சேகரித்து
ஒருகாதல் விழா
நடத்து.
அது போதும் எனக்கு...!

ஒட்டமாவடி அறபாத்.

### வெறுமூச்சுக்கள்

சூரியன்
எங்களை
குறிபார்த்து
சுட்டெரித்துக்
கொண்டிருக்கிறான்
ஒரு
துப்பாக்கியின்
ஈனச் செயலைப்போல.

••

எங்கள் தேசத்தில்
சந்தோஷங்கள்
சவக் குழிகளுள் புதைக்கப்
பட்டுவிட்டது.
சோகங்கள் மட்டும்
மயானப் பேய்கள் போல
எங்கள் முன்
மண்டியிட்டுக்கிடக்கிறது.

••

பயங்கரம்
பலப்படுத்தப்படுகிறது
பாவம்..
நாங்கள்..

••

ஒவ்வொரு
பொழுதுகளிலும்
தினம்தினம்
வெறுமை எழுத்துக்களால்
எங்கள்
வாழ்க்கை வீதியில்
பொறுமைப் போஸ்டர்கள்
பெருமையுடன்
ஒட்டப்பட்டுக்கொண்டிருக்கும்.

••

உணர்வுகள் யாவும்
உதிரிகளாய்
உக்கி உக்கி
உரிந்து விழும்

••

நம்பிக்கை சாசனம்
மட்டும்
பிரபஞ்சத்தை
தொட்டும் தொடாமலும்
தொட்டில்
தாலாட்டைப் பாடும்.

••

ம்...
மூச்சுக்கள் தான்
வேதனை நூலின்
முடிச்சுப்போடும்.

••

சூரியன்
சுடுகிறது
சுள்ளென்றவலியுடன்
விழித்தால்
மீண்டும்
துப்பாக்கியின்
ஈனச் செயல்...?

••

கிண்ணியா சபறுள்ளா.

### மழை

கருமேகம்
காற்றுக் கண்வனைக்
கண்டதும் விடும்
ஆனந்தக் கண்ணீர்!...

### திருமணம்

சுதந்திரப்படகு
போன்ற
சுமைகள்
நிறைந்த இயந்திரப்படகு!...

-சிறாஜநகர் ரகுமான்-

# இந்த வாரம் உங்கள் பலன்

(20.03.94 முதல் 26.03.94 வரை)

சோதிட மாமணி
‘தில்லை’

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மீனம் | - சூரியன் |
| இடபம் | - கேது |
| துலாம் | - வியாழன் |
| விருட்சிகம் | - இராகு |
| கும்பம் | - சனி, செவ்வாய், வெள்ளி, புதன் |

சந்திரன் மிதுனம், கடகம், சிம்மம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் நட்டம், பணச் செலவு. | பி.ப 3 மணி |
| திங்கள்- | மனக் கலக்கம், பணவரவு தடை. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, கௌரவம். | காலை 10 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, காரிய சித்தி. | பி.ப 1 மணி |
| வியாழன்- | துன்பம் நீங்கும், மன மகிழ்ச்சி. | காலை 9 மணி |
| வெள்ளி- | வீண் மனஸ்தாபம், பெரியோர் பகை. | பகல் 12 மணி |
| சனி- | அந்நியர் சகவாசம், துயர் நீங்கும். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மன மகிழ்ச்சி, சுபகாரியச் சேர்க்கை. | பி.ப 2 மணி |
| திங்கள்- | பணக் கஷ்டம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | உறவினர் எதிர்ப்பு, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| புதன்- | தூர இடப் பயணம், அந்நியர் உதவி. | காலை 9 மணி |
| வியாழன்- | தெய்வானுகூலம், காரிய சித்தி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | கௌரவம், பெரியோர் நட்பு. | காலை 6 மணி |
| சனி- | மனப் போராட்டம், திடீர் பயணம். | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, சுபகாரிய நன்மை. | பகல் 12 மணி |
| திங்கள்- | தேகசுகம் பாதிப்பு, செலவு மிகுதி. | காலை 9 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, தொழில் மேன்மை. | பி.ப 1 மணி |
| புதன்- | கடன் தொல்லை நீங்கும், பணவரவு. | காலை 8 மணி |
| வியாழன்- | தெய்வ நம்பிக்கை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வெள்ளி- | துன்பம் நீங்கும், செல்வப் பெருக்கு. | பி.ப 2 மணி |
| சனி- | வெளியிடப் பயணம், வீண் செலவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், செய்தொழில் நன்மை. | பி.ப 2 மணி |
| திங்கள்- | பெரியோர் சகாயம், உயர்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், முன்னேற்றம். | பகல் 12 மணி |
| புதன்- | கடன் தொல்லை, மனப் பயம். | பி.ப 3 மணி |
| வியாழன்- | பெரியோர் உதவி, பணவரவு. | காலை 7 மணி |
| வெள்ளி- | உத்தியோக மேன்மை, கௌரவம். | பி.ப 1 மணி |
| சனி- | செலவு மிகுதி, பணக் கஷ்டம். | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள்திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பயணங்கள் வெற்றி, பணவரவு. | காலை 8 மணி |
| திங்கள்- | அந்நியர் சகவாசம், மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | செல்வாக்கு மிகுதி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| புதன்- | தொல்லைகள் நீங்கும், தொழில் மேன்மை. | காலை 10 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், குடும்பக் கவலை. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், சுபகாரிய மகிழ்ச்சி. | காலை 9 மணி |
| சனி- | பணவரவு, காரிய சித்தி. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள- | அந்நியர் உதவி, பணவரவு. | காலை 10 மணி |
| செவ்வாய்- | மனமாற்றம், பணத்தட்டுப்பாடு. | பி.ப 2 மணி |
| புதன்- | உயர்ந்த நிலை, முன்னேற்றம். | காலை 9 மணி |
| வியாழன்- | தெய்வானுகூலம், காரிய சித்தி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | காலை 8 மணி |
| சனி- | செய்தொழில் விருத்தி, தூர இடப் பயணம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| திங்கள்- | வீண் சந்தேகம், கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தெய்வ நம்பிக்கை, செல்வாக்கு மிகுதி. | பகல் 11 மணி |
| புதன்- | திடீர் பயணம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| வியாழன்- | எண்ணங்கள் சித்தி, குடும்ப சுகம். | காலை 10 மணி |
| வெள்ளி- | வீண் குறை கேட்டல், தொழில் சித்தி. | பி.ப 2 மணி |
| சனி- | செலவு மிகுதி, பெரியோர் உதவி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -3

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, காரிய சித்தி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | வீண் மனஸ்தாபம், உயர்ந்த நிலை. | காலை 9 மணி |
| செவ்வாய்- | துன்பம் நீங்கும், குடும்ப மகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| புதன்- | பணத் தடை நீங்கும், தேகசுகம் பாதிப்பு. | காலை 8 மணி |
| வியாழன்- | பெரியோர் பகை, அரச விரோதம். | காலை 7 மணி |
| வெள்ளி- | பயனற்ற செயல், உயர்ந்த நிலை. | பி.ப 2 மணி |
| சனி- | செய்தொழில் விருத்தி, பணவரவு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மறைமுக எதிர்ப்பு, தொழில் கஷ்டம். | காலை 7 மணி |
| திங்கள்- | பணவரவு, காரிய சித்தி. | காலை 10 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| புதன்- | தெய்வ நம்பிக்கை, கௌரவம். | பி.ப 3 மணி |
| வியாழன்- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 8 மணி |
| வெள்ளி- | திடீர் சுகயீனம், மனப் பயம். | பகல் 11 மணி |
| சனி- | காரிய சித்தி, பொருள் இலாபம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -9

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தன லாபம், செல்வாக்கு மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- | செய்தொழில் விருத்தி, கௌரவம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | வீண் செலவு, பொருள் வரவு தடை. | காலை 7 மணி |
| புதன்- | புதிய முயற்சி, முதலீட்டு மேன்மை. | பி.ப 2 மணி |
| வியாழன்- | செய்தொழில் நட்டம், மனக் கவலை. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | பெரியோர் சகவாசம், பணவரவு. | பி.ப 3 மணி |
| சனி- | செலவு மிகுதி, தன்னம்பிக்கை. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மேன்மை, கீர்த்தி | பகல் 12 மணி |
| திங்கள்- | அந்நியர் நட்பு, உயர்ந்த எண்ணம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | மனப் பயம் நீங்கும், செல்வாக்கு அதிகம். | பி.ப 1 மணி |
| புதன்- | துன்பம் நீங்கும், பெரியோர் உதவி. | பகல் 11 மணி |
| வியாழன்- | கடன் தொல்லை நீங்கும், மன மகிழ்ச்சி. | காலை 10 மணி |
| வெள்ளி- | உறவினர் உதவி, குடும்ப சுகம். | பகல் 12 மணி |
| சனி- | பயனற்ற செயல், கவலை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 1

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனக் குழப்பம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் பகை, அரச விரோதம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | துன்பம் நீங்கும், புகழ் அதிகம். | பகல் 12 மணி |
| புதன்- | தெய்வ நம்பிக்கை, பெரியோர் உதவி. | காலை 8 மணி |
| வியாழன்- | தன இலாபம், குடும்ப சுகம். | பகல் 11 மணி |
| வெள்ளி- | வெளியிட வாசம், சுகம் மிகுதி. | பி.ப 2 மணி |
| சனி- | செலவினால் கவலை, பணத்தட்டுப்பாடு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

# மருத்துவ ╬ விந்தைகள்

## மூளைக்குள் இருக்கும் துப்பாக்கி ரவை!

### சாவின் விளிம்புவரை சென்று வாழ்வுக்கு திரும்பிய பெண்!!



நிக்கோலாவின் மூளையில் துப்பாக்கி ரவை

நிக்கோலா ஹும்ஸ்டென் என்ற 19 வயதான இளம் பெண்ணை மருத்துவ உலகம் 'அதிசயப் பெண்' 'அதிஷ்டக்காரி' என்றெல்லாம் வர்ணிக்க ஆரம்பித்துள்ளது. தனது மூளையின் மிக முக்கியமான பகுதியில் ஒரு துப்பாக்கி ரவையை வைத்துக் கொண்டு உயிருடன் வாழ்கிறார் அவர்.

துப்பாக்கி ரவை தலையில் எப்பகுதியைத் தாக்கினாலும் உயிராபத்து என்றே மருத்துவ நிபுணர்கள் கூறுவார்கள். ஆனால் நிக்கோலாவுக்கோ ரவை மூளையைத் தாக்கியதுடன் மூளையின் சில பகுதிகளைச் சேதப்படுத்திவிட்டு அங்கேயே உட்கார்ந்து கொண்டது. இதனை சத்திர சிகிச்சை மூலம் எடுத்து விடவும் முடியாத நிலை. ஆனால் இங்கிலாந்திலுள்ள கொண்கோட் என்ற இடத்திலுள்ள தனது இல்லத்தில் துரிதமாக முன்னேறி வருகிறார் நிக்கோலா.

நான்கு மாதங்களுக்கு முன்னர் தனது 19வது பிறந்த நாளன்று இரவு சினேகிதிகளுடன் ஓர் உணவு விடுதியில் உணவு உட்கொண்டு வெளியேறிய போது எங்கிருந்தோ துப்பாக்கி வேட்டுகள் கேட்டன. தெருவில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டாருக்குள் ஏற முயற்சிக்கும் போது துப்பாக்கி ரவை ஒன்று நிக்கோலாவின் இடது கன்னப் பொறியில் பாய்ந்தது. உடனே சரிந்து விழுந்தார். இரத்தம் ஆறாகப் பெருகியது. உடனடியாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

அவசர சிகிச்சைப் பிரிவில் எக்ஸ்றே படம் எடுத்துப் பார்த்த மருத்துவ நிபுணர்களின் முகங்கள் கவலைக்குறி காட்டின. சத்திரசிகிச்சை நடத்தினால் உடனே உயிர் பிரிந்துவிடும். எப்படியும் சிலமணி நேரம் மட்டுமே அவள் உயிருடன் இருப்பாள் என்று தெரிவித்த மருத்துவர்களின் கூற்றினை ஏற்ற நிக்கோலாவின் 41 வயதான தாய் டோறின்- உறவினர்களுக்கெல்லாம் அறிவித்து இறுதிக் கிரியைகளுக்கும் பிரேத அடக்கத்துக்கான ஆயத்தங்களுக்கும் ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கிவிட்டார்.

மருத்துவர்கள் குறிப்பிட்டகாலக் கெடுவைத் தாண்டியும் நிக்கோலாவின் சுவாசம் சாதாரணமாகவும் நாடித்துடிப்பு அளவாகவும் காணப்பட்டது. மருத்துவ நிபுணர்கள் வியப்படைந்தனர். சுறுசுறுப்பாக இயங்கி சிகிச்சைகளைச் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டனர்.

அடுத்த நாட்காலையிலேயே நிக்கோலா கண்களைத் திறந்து அங்கும் இங்கும் பார்க்கத் தொடங்கினாள். அடிக்கடி வலிப்புப் போன்ற தாக்கமும் அவளைப் பாதித்தது. அவசர சிகிச்சைப் பிரிவிலேயே அவள் கிடத்தப்பட்டிருந்தாள். இங்கிலாந்திலுள்ள பல பிரபல மருத்துவர்கள் நிக்கோலாவை வந்து பார்த்து வியந்தனர்.


சாவிலிருந்து மீண்ட சகோதரியை சந்தோஷத்துடன் அணைக்கும் சகோதரன்

இத்தகைய விபத்துக்குள்ளான எவரும் சில மணி நேரம் தானும் உயிர்வாழ முடியாது என்று அபிப்பிராயப்பட்டனர்.


ஆரம்பத்தில் நிக்கோலாவின் நினைவு தடுமாறியது. சில சந்தர்ப்பங்களில் வலிப்பு தோன்றி அவஸ்தைப்பட்டாள். ஆனால் இரண்டு வாரங்களில் படிப்படியான குணம் காணப்பட்டது.

"நான் மிக்க நலமாக இருக்கிறேன். எனது மூளையில் துப்பாக்கி ரவை ஒன்று இருப்பதை நான் அறிவேன். ஆனால் அது என்னை ஒன்றும் செய்யவில்லை. நான் அதிஷ்டக்காரி என்று மருத்துவர்கள் கூறுவது எனக்குப் பெருமையாக இருக்கிறது." என்று கூறுகிறாள். இவள் பூரண குணமடைய 2 வருடங்களாகும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

## தன்னம்பிக்கை அட்வைஸ்

## தனிமையிலே தீர்வு காண முடியுமா?

### முடியும்! இதைப் படியுங்கள் தெரியும்!



உங்களுக்குள்ள பிரச்சனைகளை நீங்கள் மட்டுமே பூரணமாக அறிவீர்கள். ஆகவே அவற்றைத் தீர்ப்பதற்கும் நீங்களே மார்க்கங்களைக் கண்டுகொள்ள முடியும். "பிரச்சனைகளைப் பற்றிக் கவலை கொண்டு வெறுமனே யோசித்துக் கொண்டிருப்பதில் எதுவித பலனும் காணமுடியாது. பிரச்சனைகளுக்கான காரணங்களை அலசி ஆராய்ந்து அவற்றை எவ்வாறு அணுகினால் தீர்வு கிடைக்கும் என்பதனை நாமே தீர்க்கமாக அறிந்து கொண்டால் எல்லாம் சுலபமாகிவிடும்."

இவ்வாறு கூறுகிறார் பிரபல உளவியல் நிபுணரான டாக்டர் மைக்கேல் பட்குஸ்.

"ஒரு பிரச்சினையையிட்டு சதா யோசித்துக்கொண்டிருப்பது சில சந்தர்ப்பங்களில் கேடாகவும் முடியும். பிரச்சனைகளைக் கவலையுடன் யோசிக்கலாகாது. மாறாக காரணகாரியங்களை அலசி ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கேற்ற வழிமுறை களையும் ஒன்றன் பின் ஒன்றாக ஆராய முற்பட வேண்டும். நினைத்து நினைத்து ஏங்குவதை விடுத்து உருப்படியான ஆலோசனைகளில் ஈடுபடவேண்டும்." என்று டாக்டர் மைக்கோல் தெரிவிக்கிறார்.

உள்ளத்தை அழுத்தும் பிரச்சனைகளை வெளிப்படையாக வாய்விட்டுக் கூற வேண்டும். மக்கள் நடமாட்டமில்லாத ஓர் இடத்துக்குச் சென்று, உங்கள் சிக்கலை உங்கள் நண்பர் ஒருவரிடம் கூறுவது போல-உங்கள் முன்னால் அந்த நண்பர் உட்கார்ந்து உங்கள் பிரச்சனை யைக் கேட்டுக் கொண்டிருக்கிறார் எனக் கற்பனை பண்ணிக்கொண்டு- வாய்விட்டு கூற வேண்டும். அதேபோல் அந்தப் பிரச்சினைக்கு எத்தகைய தீர்வுகளை அனுசரிக்கலாம் என்று தோன்றுகிறதோ, அவற்றையெல்லாம் உங்கள் நண்பர் உங்களிடம் கூறுவதாகப் பாவனை செய்து கொண்டு பேச வேண்டும்.

இந்த முறையினை அனுசரித்தால் பெரும்பாலான பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டுவிட முடியும். இவ்வாறு கூறுகிறார் டாக்டர் மைக்கேல் பட்குஸ். வெயின் ஸ்டேட் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் உளவளத் துறையின் உதவிப் பேராசியரியராக இவர் விளங்குகிறார்.

### தீராத மனக்கவலை தீர வழிகள்!

- உங்களுக்கு பல பிரச்சனைகள் இருக்கலாம். ஒரே சமயத்தில் எல்லாச் சிக்கல்களையும் தீர்க்க மார்க்கங்களைத் தேடாதீர்கள். ஒவ்வொரு பிரச்சனையாக எடுத்துக் கூறுங்கள்.
- ஒரு பிரச்சனையைத் தெளிவாகக் கூறியதும் அதற்கான தீர்வுகளை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் நினைப்பது பொருந்தாது எனப் பட்டாலும்கூட, மனதில் படுவதை அப்பட்டமாகக் கூறிப்பாருங்கள். ஏனெனில் உங்கள் பேச்சுக்களை வேறு எவரும் கேட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை அல்லவா?
  ஒற்றை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் பொருத்த மற்றதாகத் தோன்றும் காரணமே உண்மையில் பிரச்சனையைத் தீர்க்கவல்ல அம்சமாகிவிடவும் வாய்ப்பிருக்கிறது.
- பொருத்தமான தீர்வுதான் என்ற தீர்மானத்துக்கு வந்து விட்டீர்களானால், அதனை உங்கள் மனதில் நன்றாகப் பதியவைப்பதற்காக அதனைத் திரும்பத் திரும்பச் சொல்லுங்கள்.
- இதன் பின்னர் உங்கள் தீர்க்கமான முடிவினை காலதாமதமின்றி நடைமுறைப் படுத்துங்கள்.

"முடிவுக்கு வந்த பின்னரும் சந்தேகமும் தடுமாற்றமும் எழுமானால் சோர்ந்து விடாமல் மீண்டும் ஒருமுறை அலசி ஆராயத் தொடங்குங்கள். உங்கள் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டவுடன் உங்களை நீங்களே பாராட்டிக்கொள்ளுங்கள். ●

## மருத்துவ மூட நம்பிக்கைகள்....

மக்களிடையே பரவலாக உடல் நலக் கருத்துக்களைப் பற்றி தலைமுறை தலைமுறையாக சில நம்பிக்கைகள் இருந்து வருகின்றன. ஆனால் அவற்றில் சில அறிவியல் உண்மைகளுக்கு பொருத்தமில்லாதவை. சிலவற்றை இங்கு பார்ப்போம்.

**காய்ச்சலிருந்தால் சாப்பிடு. ஜலதோஷமிருந்தால் பட்டினியாயிரு என்கிறார்களே. இது சரியா?**

சரியே. ஜலதோஷம் அல்லது மற்ற எந்த நோய்களையும் எதிர்க்க குழந்தைகளுக்கு உணவும், நீரும் தேவைப்படுகின்றது. உணவு உடலுக்கு வேண்டிய சத்துக்களைக் கொடுக்கின்றது. முக்கியமாக காய்ச்சல் ஏற்பட்டால் உடலில் நீரின் தேவை அதிகப்படும். எனவே சாப்பிடுவதையோ, குடிப்பதையோ நிறுத்தும் பொழுது, நோயின் விளைவு அதிகமாகும்.

**ஆல்கஹோலை (சாராயத்தை) உடலில் தடவினால் காய்ச்சல் குறையும்- இது சரியா?**

தவறு. காய்ச்சல் உள்ள குழந்தையின் உடலில் ஆல்கஹோலைத் தடவினால் காய்ச்சல் அதிகமாகுமே தவிர குறையாது. ஆல்கஹோலை முகர்கின்ற பொழுது மேலும் தோலின் மீது தடவிய ஆல்கஹோல் விரைவில் ஆவியாகி விடுவதால் உடலில் நடுக்கம் ஏற்படும். இது காய்ச்சல் அதிகரிப்பதற்கான அறிகுறியாகும்.

**பிறந்த குழந்தையின் தலைமயிரைக் கழுவினால் தலையின் மென்மையான பகுதி பாதிக்கப்படும். இது உண்மையா?**

தவறு. மென்மையான பகுதியானது அடுக்குத் தசைகளாலும் (Tissues) மண்டை ஓட்டாலும் பாதுகாக்கப்படுகின்றது. இவைகளைத் தாண்டி எளிதில் எதுவும் மென்மையான பகுதியை அடைத்துவிட முடியாது.

**நனைந்த தலையுடனிருந்தால் ஜலதோஷம் பிடிக்கும். இது உண்மையா?**

உண்மைதான். ஈரத்தலையுடனிருந் தால், உங்களுக்கு குளிராக இருக்கலாம். ஆனால் அதனால் நோயோ, அல்லது ஜலதோஷமோ ஏற்படாது. பாக்டீரியா, வைரஸ்ஸால் நோய் உண்டாகுமே தவிர, ஈரத்தலையால் யாதொரு பிரச்சனையும் உண்டாகாது.

**ஆரோக்கியமான இரண்டு குழந்தைகளுக்குத் தாயான ஒரு பெண் முப்பத்தைந்து வயதைக் கடந்த பின்பும் ஆரோக்கியமுள்ள மூன்றாவது குழந்தையைப் பெற்றெடுக்க முடியும். இது உண்மையா?**

உண்மைதான். இரண்டு ஆரோக்கியமான குழந்தைகளுக்குத் தாயான ஒரு பெண், முப்பத்தைந்து வயதைக் கடந்து கர்ப்பமடைந்தால் குறைபாடுடைய குழந்தைகள் பிறக்க வாய்ப்புண்டு. நானூறு தாய்களில் ஒருவருக்கு இப்படிப்பட்ட நிலை ஏற்படுகின்றது. தாயின் கருப்பையில் உள்ள நீரை எடுத்து இக்குறைபாடுகளைக் கண்டறியலாம்.

**காதுவலி உள்ள குழந்தைகள் நீச்சலடிக்கச் செல்லக் கூடாது. இது சரியா?**



உண்மைதான். உங்கள் குழந்தையின் காதில் வலி இருந்தால், நோய் எதிர்ப்பு மருந்துகளை சாப்பிட்டு, குணப்படுத்திக் கொண்டு நீச்சலடிக்கச் செல்ல வேண்டும். நீச்சலடிக்கும் பொழுது டைவ் அடிப்பதையோ, ஆழமாக மூழ்குவதையோ, தவிர்க்க வேண்டும். ஆயினும் உடல் நிலை சரியில்லாத அல்லது காய்ச்சல் உள்ள குழந்தைகள் எந்த விளையாட்டிலும் (நீச்சல் உள்பட) கலந்து கொள்ளுதல் கூடாது.

**அம்மை நோய் கண்ட குழந்தைகள் குளிக்கக்கூடாது. இது உண்மையா?**

குளிக்கலாம். ஆனால் அளவான சூடுடைய தண்ணீரில் கால் கப் சோடா மாவை (உணவுக்குப் போடுவது) கலந்து குளித்தால், அம்மையால் ஏற்படும் அரிப்பு நிற்கும். குளிப்பாட்டிய பின் குழந்தையின் உடலை நன்கு காய்கின்ற அளவுக்குத் துடைத்து விடவும். குழந்தைக்குப் பயன்படுத்திய டவலை துவைத்த பின்பே வீட்டில் உள்ள மற்றவர்கள் பயன்படுத்த வேண்டும்.

-ஷா-

## தேர்தல் கடிகள் — சூர்யா


அந்த வேட்பாளர் தேர்தலில் 2 விருப்பு வாக்குகள் மட்டுமே "அமோகமாக" கிடைத்த கவலையோடு இருந்தார். அப்போது அவரைத் தேடி வந்த நண்பர் அவரை ஆறுதல் படுத்துவதாக நினைத்துக்கொண்டு "என்றாலும் உங்களுக்கு பெரிய மனது." வேட்பாளருக்கு ஒன்றும் புரியவில்லை.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"ஒருவருக்கு மூன்று விருப்பு வாக்குகள் போடும் உரிமை உண்டு. ஆனால் உங்களுக்கு கிடைத்ததோ இரண்டு விருப்புவாக்குகள். அதனால் நீங்கள்கூட உங்கள் ஒரு வாக்கை வேறு வேட்பாளருக்கு போட்டிருக்கிறீர்களே. அதைத்தான் சொன்னேன்." என்றார். அசட்டுத்தனமாக சிரித்தபடி அதை ஆமோதிப்பது போல் மௌனமாக இருந்த வேட்பாளர், தன் நண்பர் சென்றதும் மனைவியிடம் சொன்னார்,

"நான் எனக்குப் போட்ட வாக்குகளில் ஒன்று பழுதானது பற்றிக் கவலைப்பட்டேன். அதுவும் ஒரு பெருமைதான் என்று இப்போதுதான் புரிந்துகொண்டேன்." ■

தேர்தலில் வெற்றிபெற்ற வேட்பாளர் ஒருவருக்கு தலைகால் புரியவில்லை. அவருக்கு கிடைத்ததில் பாதி வாக்குகள் எப்படிக் கிடைத்தன என்று அவருக்கு தெரியும். மீதி எப்படிக் கிடைத்தது என்பதுதான் புரியாத புதிர். வெற்றிப் போதையில் தரமான கள்ளின் உபயத்தில் தடுமாறிக்கொண்டிருந்தபோது உரத்த குரலில் "இந்த மக்கள் மடையர்கள். சுத்த மடையர்கள்." என்று கூவிக்கொண்டிருந்தார். அருகில் குறைபோதையில் நின்ற நண்பர் கேட்டார், "மக்களை ஏன் வசைபாடுகிறீர்கள்? உங்களுக்குத்தானே வாக்களித்திருக்கிறார்கள்." உடனே வெற்றி பெற்ற அந்த வேட்பாளர் சொன்னது இது- "அதனால்தான் உறுதியாகச் சொல்லுகிறேன்." ■



அரசியல் கட்சிப் பிரமுகர் ஒருவரிடம் அவரது அனுதாபி பேசிக்கொண்டிருந்தார். "நீங்கள் ஏன் தேர்தல் சமயத்தில் ஒரு அறிக்கைகூட விடவில்லை?" என்று கேட்டார். பிரமுகர் அமைதியாகப் பதில் சொன்னார். "நல்ல வேளை தப்பித்தோம். இல்லாவிட்டால் தோல்வியடைந்த வேட்பாளர்கள் நம்மவர்கள் தான் என்று ஆகியிருக்கும்." ■

அந்த வேட்பாளர் தன் குடும்பத்தினரைப் பற்றித் தாறுமாறாகப் பேசிக் கொண்டிருந்தார். கேட்டுக்கொண்டிருந்த நண்பர் "என்னதான் இருந்தாலும் உங்கள் உறவினர்கள்தானே. இப்படிப் பேசலாமா?" என்று கேட்டார். வேட்பாளருக்கு மேலும் கோபம் வந்துவிட்டது. "நான் அவர்களுக்காக எத்தனை செய்திருப்பேன்! எவ்வளவு கொடுத்திருப்பேன். அந்த நன்றிக்காவது வாக்களித்திருக்க வேண்டாமோ?" நண்பருக்கு வேட்பாளரின் வேதனை புரிந்துவிட்டது. "புரிகிறது உங்களுக்கு என்று ஒரு கொள்கை இல்லாவிட்டாலும் உங்கள் கொள்ளைக்காக என்றாலும் அவர்கள் வாக்களித்திருக்க வேண்டும். இது உங்கள் கொள்ளைத் திறனுக்கே கிடைத்த தோல்விதான்."

**இதுவரை**

பூபால் அன்ட்பிரதர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர்கள் இருவர். ஒருவர் ஹரிபிரசாத், மற்றவர் பிரசாத். சகோதரர்கள். ஹரிபிரசாத் ஒரு நாள் காலையில் தன் அலுவலக பிரத்யோக அறையில் கொல்லப்பட்டுக் கிடந்தார். பொலிசுக்கு அந்தச் செய்தியை முதலில் சொன்னது ஒரு பெண்குரல். பிரசாத்தின் மகள் நிரோசா. அவளைக் கொல்லப்போவதாகவும், ஹரி பிரசாத்தை கொன்றவனும் நானே என்று பிரசாத்துக்கு தொலைபேசியில் சொன்னான் கொலையாளி. சொன்னது போலவே நிரோசாவை கொல்ல முயல, அவள் தப்பி அவனை அறையில் பூட்டி வைத்துவிட்டு வெளியில் வந்து போன் செய்ய பின்புறமாய் வந்து கழுத்தை நெரிக்கிறது ஒரு வலிய கரம். பிரசாத் வீட்டில் வந்து பார்க்க இனம் தெரியாத ஒருவன் செத்துக்கிடக்கிறான். நிரோசா கொலை முயற்சி பற்றியும் பொலிசுக்கு சொல்கிறது அதே பெண்குரல். பிரசாத் வீட்டுக்கு பொலிஸ் வருகிறது. விசாரணை செய்யத் தொடங்கியபோது நிரோசா சித்தப் பிரமை பிடித்தவள் போல் சிரிக்கத் தொடங்குகிறாள். செத்துக் கிடப்பவன் யார் என்று தெரியாமல் குழம்புகிறது பொலிஸ். நிரோசா கொல்லப்படுவாள் என்று போனில் சொல்கிறான் கொலையாளி.

பிரசாத் வீட்டுப் பணிப்பெண் லீலாவை விசாரிக்க அவள் வீடு சென்ற டி.ஐ.ஜி. டென்சிலுக்கு சில சந்தேகங்கள் வருகின்றன. லீலா வீடு கண்காணிக்கப்படுகிறது.

அதே நேரத்தில் போனில் தகவல் தரும் பெண்குரல் தன்னை ஒரு பத்திரிகையாளர் என்று சொல்கிறது. பெண் பத்திரிகையாளர்கள் இருவர் விசாரணைக்காக அழைக்கப்படுகின்றனர்.

புதுமைத் தொடர்

# கொலை விழும் நேரம்



"கண்கள் இரண்டில் கணை தொடுத்தாள்
கருநாகம் எனப் பின்னலிட்டாள்.
குறு நகை என்னும் விஷம் கொடுத்தாள்.
உயிர் கொண்டு விட்டாள்!
என்னை வென்று விட்டாள்!"

-கவியரசு-

லீலா வீட்டின் முன் பொலிஸ் ஜீப் ஓய்ந்து நிற்க, ஐயோ மீண்டும் வந்துவிட்டது என்று புரிந்து உள்ளே உசாரான லீலாவின் அண்ணன் ஜெயக்கொடி பதட்டமாகி தன் முன்னால் இருந்த சின்னத் தாடியை பார்க்க அவனும் பதட்டமாகி நாற்காலிவிட்டு துள்ளி எழுந்து,

"மீண்டும் பொலிஸ் வந்துவிட்டது கொடி.." என்றான் அதிர்ந்துபோன குரலில்.

டி.ஐ.ஜி.டென்சில் ஜீப்பில் இருந்து இறங்கி நிதானமாக நடந்துவந்து வீட்டுக் கதவில் இரு முறை தட்ட, ஜெயக்கொடி சின்னத் தாடியின் கரத்தை பிடித்து இழுத்துக்கொண்டு வீட்டின் பின்புறமாய் ஓடினான்.

எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டு வாயடைத்துப்போய் இருந்த லீலாவின் தந்தை சில நிமிடங்கள் தாமதித்து, வியர்த்துப் போன முகத்தை ஒரு துண்டால் துடைத்தபடி தயக்கமாய் நடந்து கதவு திறக்க, வெளியே நின்ற டி.ஐ.ஜி. டென்சில் நட்பாய் சிரித்தபடி,

"சிரமத்திற்கு மன்னிக்கவேண்டும் ஐயா."

சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தார். எதுவும் பேசாமல் லீலாவின் தந்தை திகைத்துப் போய் நிற்க, உள்ளே நிறைந்த பயத்தை உடல் வியர்த்து நடுங்கி வெளியே காட்டிக்கொண்டிருக்க, டி.ஐ.ஜி. அனைத்தும் தன் மனதில் பதிவு செய்தபடி,

"நீங்கள் எனக்கொரு உதவி செய்ய வேண்டும் ஐயா. சின்ன உதவிதான்."

பயத்தில் வெளிறிப்போய் வறண்டு போன உதட்டை நாவால் ஈரப்படுத்தி, வலுக்கட்டாயமாக வார்த்தைகளை வெளியே வரச் செய்து,

"என்ன உதவி இன்ஸ்பெக்டர்?"

டி.ஐ.ஜி.டென்சில் அவர் முகத்தைப் பார்த்து மெல்லச் சிரித்து,

"நீங்கள் தவறு செய்கிறீர்கள்."

மேலும் அதிர்ந்துபோன லீலாவின் தந்தை, சமையல்கட்டில் இருந்து வந்து பயத்தில் ஒடுங்கிப்போய் நின்றிருந்த மனைவியின் முகத்தைப் பார்த்து பரிதாபமாய் முழித்து,

"த...தவ...றா? நீங்கள் என்ன... சொல்கிறீர்கள் இன்ஸ்..."

வார்த்தைகளை முடிக்க முடியாமல் தடுமாற,

"நான் டி.ஐ.ஜி. இன்ஸ்பெக்டர் அல்ல. எவளவு கஷ்டப்பட்டு டி.ஐ.ஜி. ஆகியிருக்கிறேன். நீங்கள் ஒரேயடியாக பதவி இறக்கம் செய்தால் அது தவறுதானே?"

சொல்லிவிட்டு சத்தமாகச் சிரித்தார். சற்று நிம்மதியாகி, சூழ்நிலையின் இறுக்கம் கொஞ்சம் தளர்ந்ததாய் உணர்ந்து, லீலாவின் தந்தை மிகவும் கஷ்டப்பட்டு சிரிக்க முயன்றபடி,

"என்ன உதவி டி.ஐ.ஜி?"

"இந்த வீட்டின் அமைப்பை ஒரு முறை அலசிவிட ஆசை."

அதிர்ச்சி மீண்டும் முகத்தில் தெரிய,

"ஏன் டி.ஐ.ஜி?"

"கொலை வழக்கில் சாட்சிகளுக்கும் ஆபத்து வரலாம். பிரசாத் வீட்டில் கொலையானவனை லீலாவுக்கு தெரிந்திருந்தால்...பயப்படவேண்டாம். எதற்கும் ஒரு முன் ஜாக்கிரதை நல்லதல்லவா?"

சொல்லிக்கொண்டே உள்ளே போக, பதிலேதும் பேசாமல் பின்தொடர்ந்தார் லீலாவின் தந்தை. வீட்டின் பின்புறமாய் இருந்த கதவு திறந்திருக்க, வீட்டின் பின்புறத்தில் இருந்த குச்சு ஒழுங்கை தெரிந்தது.

"அட பின்புறமாய் ஒரு வழி இருக்கிறதே. இது எங்கே வரையும் போகிறது?"

தலை நீட்டி எட்டிப்பார்க்க

"பிரதான தெருவரையும் போகலாம்."

"ஓகோ...கதவை திறந்து வைக்காதீர்கள். காலம் கெட்டுக் கிடக்கிறது பாருங்கள்."

திரும்பி நடந்து வந்து முன்ஹோலில் நின்று,

"உங்கள் மகன் ஜெயக்கொடி எங்கே?"

எதிர்பாராத கேள்வியில் திகைத்து உடனே பதில் சொல்ல முடியாமல் திணற,

"வேலை தேடி அலைகிறார்போல் இருக்கிறது. வீட்டில் இருப்பது கஷ்டம் தானே?"

டி.ஐ.ஜி.சொல்ல, அதை ஆமோதிப்பதாய் அவர் தலையசைக்க, விடைபெற்று வந்து ஜீப்பில் ஏறிய டென்சில், லீலாவின் வீட்டுக்கு எதிரே மின்கம்பத்தில் சாய்ந்தபடி கீழே இருந்தவனை தற்செயலாய் பார்த்தார். அவன் பிச்சைக்காரனைப் போல இருந்தான்.

ஜீப் புறப்பட்டுச் செல்ல, பிச்சைக்காரனைப் போல் இருந்தவன் முகத்தில் ஒரு புன்னகை தெரிந்தது. மெல்ல எழுந்தான். சுற்றிலும் ஒரு முறை பார்த்துக் கொண்டான். தன்னை எவரும் கவனிக்கவில்லை என்பதை உறுதி செய்துகொண்டு நடக்கத் தொடங்கினான். முதுகிலே தொங்கிக்கொண்டிருந்தது கனமான பை ஒன்று. அழுக்காகவும், கிழிசலாகவும் தெரிந்த தன் சட்டைப் பையில் கைவைத்து உள்ளே இருந்த கைக்கடிகாரத்தை எடுத்து நேரம் பார்த்தான். பின் நிமிர்ந்து எதிரே பார்க்க,

தெருமுனையில் கோடீஸ்வரர் தனுஷ்கோடியின் கார் வந்து நின்றது.

காருக்குள் ஸ்ரைவிங் சீற்றில் இருந்த தனுஷ்கோடி தன் அருகில் இருந்த லீலாவை இழுத்து மார்பின் உச்சிகள் இரண்டிலும் மாறி மாறி உதடு பதித்துக் கொண்டிருக்க,

"யாராவது பார்க்கப் போகிறார்கள். ஒரு வாரம் பொறுத்திருங்கள்."

என்றபடி கதவு திறந்து லீலா இறங்க, அவள் இறங்கி கதவு சாத்தும்வரை பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, கியர் மாற்றி ஆக்சிலேட்டரில் அழுத்தி விரைய,

எதிரே நடந்துவரும் லீலாவையே விழிகளால் குறிவைத்தபடி, முகத்தில் வந்துவிட்ட குரோதத்தோடு நெருங்கிக் கொண்டிருந்தான் அவன்.

■

ஹரிகரனின் அலுவலகத்தில் எல்லோரும் டி.ஐ.ஜி. டென்சிலுக்காக காத்திருந்தார்கள். கைக்கடிகாரத்தில் அடிக்கடி மணி பார்த்துக்கொண்டார்கள்.

சித்ராவும் மனேஜர் மனோகரும் தனியே இருந்தார்கள்.

மனேஜர் அறைக்கு அருகில் இருந்தது ஏ.சி. செய்யப்பட்ட டிஸ்கஷன் ரூம். குஷன் சோபாவில் சித்ரா அமர்ந்திருக்க அருகே இருந்த மனோகர்,

"அவளவு சோகமா சித்ரா?"

என்றான் குரலில் சிறிது கேலி தெரிய.

"இருக்கும்தானே?"

என்றாள் தன் கைப்பைக்குள் இருந்த சிறிய முகம் பார்க்கும் கண்ணாடியை கையில் எடுத்து முகம் பார்த்து, நெற்றியில் ஒட்டியிருந்த ஸ்ரிக்கர் பொட்டை சரிசெய்தபடி சித்ரா.

சோபாவில் நகர்ந்து சித்ராவின் அருகில் வந்து,

"சோகத்திலும் அட்டகாசமான அழகாய்த்தான் இருக்கிறாய் சித்ரா."

என்று சொல்லிக்கொண்டு அவள் தொடையில் கைவைத்து கிள்ளினான் மனோகர்.

"நீங்களே சந்தேகத்தை ஏற்படுத்தி விடுவீர்கள் போல் இருக்கிறது. நல்ல பிள்ளையாக தள்ளி இருங்கள்."

என்று தோளில் கைவைத்து தள்ளினாள் சித்ரா.

"இன்று முழுக்க ஒரே டென்சனாக இருக்கிறது சித்ரா. டென்சனைக் குறைக்க இது வேண்டும்."

என்று சித்ராவின் இதழ்களில் தன் விரல்வைத்து மெல்ல வருடிக்காட்டிவிட்டு உதடுகளை வேகமாய் பொருத்தி எடுத்தான். சோபாவில் சாய்ந்திருந்தவள் நிமிர்ந்து நின்ற மார்புகள் மனோகரை வந்துவிடு என்று அழைப்பு விடுக்க, கரங்கள் அழைப்பை ஏற்று விரைய, தட்டப்படாமல் படீரென்று திறக்கப்பட்டது அறைக்கதவு.

திகைத்து விலகி மனோகர் நிமிர்ந்து பார்க்க, கதவைத் திறந்து வந்து, வெட்கமாய் முகத்தை திருப்பியபடி,

"வெரி சொரி மிஸ்டர் மனோகர். வெரி சொரி சித்ரா."

என்று போலியாய் மன்னிப்பு கேட்டு குறும்பாகப் பார்த்தார் உதவி மனேஜர் சாரங்கன்.

அந்த நொடியே சித்ரா ஒரு முடிவுக்கு வந்து சாரங்கனை நோக்கி சோபா விட்டு எழுந்தாள்.

■

டி.ஐ.ஜி. அலுவலகத்தின் வரவேற்பறையில் இன்ஸ்பெக்டர் மோகனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

டி.ஐ.ஜி. வந்துகொண்டிருப்பதாக வயர்லெஸ்ஸில் தகவல்வர, வரவேற்பறைக்கு வந்து பார்த்தவருக்கு,

பிரியா இருந்த நாற்காலி வெறுமையாய் இருந்து வரவேற்பளித்தது.

இன்ஸ்பெக்டர் மோகனைக் கண்டதும் நாற்காலி விட்டெழுந்து, மரியாதை காட்டிய காயத்திரியை பார்த்து,

"இங்கே உங்களோடு இன்னொரு பத்திரிகையாளர்...மிஸ்....பிரியா..."

"பிரியா அப்போதே போய்விட்டாள் இன்ஸ்பெக்டர்."

"எவ்வளவு நேரம் இருக்கும்?"

கையில் கடிகாரம் பார்த்து,

"இரண்டு மணிநேரம் இருக்கலாம் இன்ஸ்பெக்டர். பட், பிரியா செய்ததிலும் நியாயம் இருக்கிறது."

"என்ன நியாயம்?"

வெறுப்போடு கேட்டார்.

"நாங்கள் வந்து இரண்டரை மணிநேரமாய் காத்திருக்கிறோம். உங்கள் டி.ஐ.ஜி. என்னடாவென்றால் பத்திரிகையாளர் என்றால் வேலையில்லாதவர்கள் என்பது மாதிரி காக்க வைத்திருக்கிறார்."

அலுத்துக்கொண்டாள். டி.ஐ.ஜி. வந்து விட்டதாக கொன்ஸ்டபிள் வந்து செய்தி சொல்ல,

"நீங்களும் சொல்லிக்கொள்ளாமல் போய் விடாதீர்கள் ப்ளீஸ்."

என்றபடி, டி.ஐ.ஜியை எப்படி சமாதானப்படுத்துவது என்று யோசித்தபடி, டி.ஐ.ஜி. எப்படியெல்லாம் கிழிக்கப் போகிறாரோ என்று பயந்தபடி, டி.ஐ.ஜி அறை நோக்கி இன்ஸ்பெக்டர் மோகன் விரைந்து கொண்டிருக்க,

உள்ளே டி.ஐ.ஜியின் அறையில் போன் ரிங் பண்ண,

"ஹலோ"

என்று டி.ஐ.ஜி.டென்சில் குரல் கொடுக்க,

மறுமுனையில் சிரித்தது அதே பெண் குரல். பின்னர் பேசியது,

"உங்களுக்கெல்லாம் ஒரு யூனிபோர்ம். ஒரு ஜீப்பு. டி.ஐ.ஜி. என்று ஒரு போஸ்ட்டு. கொலை விழும் நேரத்தில் கொட்டாவி விட வேண்டியது. பிறகு விழித்து பதறி எல்லோர் மீதும் சந்தேகப்பட்டு...துருவி துழாவி...சே.. வெட்கம் என்று ஒரு வார்த்தை இருக்கிறதே... அட்லீஸ்ட் கேள்விப் பட்டாவது இருக்கிறீர்களா டி.ஐ.ஜி?"

ஜிவ் என்று ஏறியது கோபம்.

"ஸ்டுப்பிட்! உன்னை.."

"என்ன?"

"யார் நீ அதைச் சொல் முதலில்."

"அதை முதலில் அல்ல. முடிவில் சொல்லவே உத்தேசம். இப்போது நான் சொல்லப் போவதை குறித்துக் கொள்ளுங்கள். பிரசாத் வீட்டு பணிப் பெண் நல்ல அழகி. அந்த அமோக அழகியை யாரோ கொலை செய்து விட்டார்கள் டி.ஐ.ஜி. யெஸ்! என்ன அநியாயம் பாருங்கள்."

டி.ஐ.ஜி. அதிர்ச்சி வாங்கினார்.

"நீ சொல்வது?"

"யாவுமே உண்மை."

சிரித்துவிட்டு தொடர்பு துண்டித்தாள்.

ரிசீவர் வைத்து நிமிர இன்ஸ்பெக்டர் மோகன் வந்து சல்யூட் வழங்கி,

"சேர்...பிரியா..."

என்று தடுமாற,

"பிரியா?"

என்று குரல் உயர்த்தி கேட்க, நடந்ததைச் சொன்னார் மோகன்.

சினமாகி, முகம் சிவந்து

"உங்களையெல்லாம் இந்த வேலைக்கு யாரய்யா வரச்சொன்னது? என்ன செய்வீரோ தெரியாது. உடனே பிரியா இங்கே வரவேண்டும்."


"யெஸ் சேர், வெளியே இன்னொரு நிருபர் காயத்திரி..."

"போய்விட்டு நாளை காலையில் வந்து பார்க்கச் சொல்லுங்கள்."

இன்ஸ்பெக்டர் மோகன் தயங்கியபடி காயத்திரியிடம் சொல்ல, கோபம் அவள் முகத்தில் தெரிந்தது. விருட்டென்று வெளியே போனாள்.

டி.ஐ.ஜி. அலுவலகத்தில் இருந்து வெளியேறி தெருவில் இறங்கினாள். அவளை இடித்துவிடுவது போல் அருகில் வந்து நின்றது மெல்லிய நீற நிசான் ஸனி மொடல் கார். கதவு திறந்துகொள்ள உள்ளே இருந்தவள் பிரியா. அவளே ஓட்டி வந்திருந்தாள்.

வழங்குவது - ரசிகன்



ஒரு புன்னகையோடு,

"வா காயத்திரி."

என்றாள். தயங்கிவிட்டு உள்ளே ஏறி கதவு சாத்த, கார் கிளம்பியது.


டி.ஐ.ஜி. அலுவலகத்திற்குள் திரும்ப முயன்று, பின் நேராகி பிரியாவின் காரை பின் தொடர்ந்தது மற்றொரு கார்.

அந்தக் காரைச் செலுத்திக் கொண்டிருந்தவர்,


குலாம்ஷா.

(இன்னும் வரும்)


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: வி. மோகன்
முகவரி: இல.5, நீர்கொழும்பு வீதி நாரம்மலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம் வாசித்தல், கிரிக்கட் விளையாடுதல்.



பெயர்: பொ.ரதிதேவி
வயது: 25
முகவரி: ஆர்.கே.எம்.வீதி அக்கரைப்பற்று-07.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல்.



பெயர்: எம்.வை.எம்.அபூபக்கர்
வயது: 28
முகவரி: TAMMI HOUSE
P.O.BOX-230
AL-KHOBAR-31952
K.S.A
பொழுதுபோக்கு: ரீ.வி பார்த்தல், பேனாநண்பர் தொடர்பு



பெயர்: எஸ்.எம்.பாறுக்
வயது: 23
முகவரி: 'மதினாஸ்' தல்கவெல வீதி, ரம்பாவ, அனுராதபுரம்

பெயர்: ரி.முரளிதரன்
வயது: 26
முகவரி: மே.பா, திவ்வியால் பூங்கா வீதி, கந்தப்பொல.
பொழுதுபோக்கு: ரீவி.பார்த்தல், பத்திரிகை, நாவல்கள் படித்தல்.

பெயர்: பௌசுல் கரீமா
வயது: 22
முகவரி: 26/1, மாளிகாவத்தை பிளேஸ்-கொழும்பு-10.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், கவிதை எழுதுதல்.

பெயர்: பிராணி
வயது: 21
முகவரி: 360/13, சமகி மாவத்தை வெலிசறை.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், புத்தகம் படித்தல்.

பெயர்: ஏ.அஸ்வர்மன்
வயது: சொல்லமாட்டேன்
முகவரி: எம்.சி.ரோட் கதுறுவெல, பொலநறுவை.
பொழுதுபோக்கு: ரீ.வி பார்த்தல், நண்பர்களுடன் அரட்டை, முரசு வாசித்தல், முரசுடன் தொடர்பு.

# குண்டு வெடிப்பு

**-அக்குறணை ஹரீரா அனஸ்-**

நமது இலங்கைத் திருநாட்டில் இனப் புரிந்துணர்வென்பது எவ்வளவு விகற்பமானதாக மாறிவிட்டது. தேசிய இனங்களுக்கிடையே (தமிழ்-முஸ்லிம்) (தமிழ்-சிங்களம்) (சிங்களம்-முஸ்லிம்) எத்தனை விகாரமான மனக்கிலேசம். இப்படியே இவ்விரிவு நீடிக்கும் போது, இந்த முன்னூற்றுச் சொச்சம் மைல்கள் உள்ளதான எங்கள் சின்னஞ் சிறிய தீவு சின்னா பின்னப் பட்டுப் போய்.. எண்ணும் போதே கண்கள் கசிய மனது பாரித்துப் போகிறது.

ஜன்னல் கண்ணாடிகளை மூடி, கதவு சாத்தப்பட்டபோது அந்த நிறைந்திருந்த புதிய மினி பஸ்ஸின் சாரதி "ஏ.சி"யை போட்டான். சில நிமிடங்களில் அந்த பஸ் முழுக்க 'குளு குளு' என்றிருந்தது. பயணிகள் எல்லோரும் ஆசுவாசமாய் சீற்றில் உட்கார்ந்திருந்தனர். பஸ் புறப்படத் தயாரான போது வாசலுக்கு எதிராய் இருந்த சீற்றிலிருந்த ஒரு தமிழ்ப் பெண்மணி, வயது ஒரு நாற்பத்தெட்டு மட்டில் இருக்கும். பணப்பையைப் பார்த்தாள்- பணமில்லை. அதிர்ச்சியுடன் தனது கணவனைத் தேடினாள். அவளை வழியனுப்ப வந்தவர் மறந்து போய் பணம் கொடுக்காமல் வீட்டுக்குப் போய்விட்டதை உணர்ந்தவள் அவளது பார்சலை வைத்துவிட்டு கைப்பையையும் எடுத்துக்கொண்டு நடத்துனரிடம் சொல்லிவிட்டு "உடனே வாறன்" என்றவள் இறங்கி பஸ் நிலையத்திற்குப் பக்கத்தில் இருந்த வீடு நோக்கி ஓடிப்போனாள்.

•••

அன்று வெள்ளிக்கிழமை காலை... எனது கைப் பையில் ஏற்கனவே வாங்கி வைத்திருந்த 'தினமுர'சைப் புரட்டி பிரியத்திற்குரிய "கண்டி ஷர்மி"யின் சிறுகதை "சிரிப்பூ"வில் மூழ்கிப் போனேன். எத்தனை லாவண்யமான எழுத்துக்கள். தினமுரசின் எழுத்தாள வட்டத்தை எண்ணும் போது மனது நிறைந்து போனது.

இதற்கிடையில் பஸ்ஸினுள் சிறு சிறு சல சலப்புகள். பின் சீற்றில் இருந்த கொஞ்சம் பருமனான சிங்களப் பெண் உச்சஸ்தாயியில் கூறிக் கொண்டிருந்தாள். "எங்கே அந்தத் தமிழ் பொம்பிளை...?"

மற்றவர்களும் விழிகளை உயர்த்தினார்கள்.

பக்கத்தில் இருந்தவர்களை ஒவ்வொருவரும் கேட்டார்கள். "எங்கே அந்தத் தமிழ் மனுசி...?" அந்த பஸ்ஸில் தொண்ணூற்றெட்டு வீதமானவர்கள் சிங்களவர்களே! அவர்களின் ஒவ்வொருவர் முகத்திலும் கலவர ரேகைகள்.



'அந்த பொட்டு வைத்த தமிழ்ப் பெண் திட்டமிட்டு பஸ்ஸில் ஏறி தங்கள் மத்தியில் குண்டை வைத்து, பணத்தை மறந்து போன காரணத்தைச் சொல்லி, அந்த பையை சீற்றில் வைத்துவிட்டுப் போய்விட்டாள்.

'அவள் வைத்த பையில் இருந்த குண்டு வெடித்து அனைவருமே கொல்லப்பட்டு விடுவோம்' என்று எல்லோருமே முடிவெடுத்து விட்டாற் போல் எனக்குத் தெரிந்தது.

இது என்ன அக்கிரமம். நெற்றியிலும் உச்சியிலும் சுமங்கலிப் பொட்டு வைத்து- தாலிக் கொடி கட்டி கொண்டையில் பூ முடித்து, மூக்குத்தி போட்டுவிட்டால் போதும். மாற்றின மக்கள் மத்தியில் அவள் வெறுக்கப்பட்டவள்- ஒட்டு மொத்தமாகச் சொல்வதனால் அவள் வயது வித்தியாசமின்றி 'ஒரு புலி.'

இந்த நிலமை மாறி எமது முன்னோர்கள் கண்ட புனிதமான ஒற்றுமை என்று வரும்? அதைக் கண்டு எப்போது நாம் நிம்மதி கொள்வோம்? பரஸ்பர அன்போடு வாழ்ந்தவர்களை இனங்களாகப் பிரித்தவர்கள் மீது மண்ணை வாரித் தூவ வேண்டும். இதற்குக் கணிசமான பங்களிப்பு நாட்டைக் கைப்பற்ற வந்த ஆங்கிலேயனிடத்திலும் இருந்தது. ஆனால் இன்று இன ஒடுக்குதல், இன ஒழிப்பு, அத்துமீறுதல் என்று எத்தனையோ வகைகள் மக்கள் மத்தியில் ஊடுருவி இருந்த உறவையும் சின்னாபின்னப் படுத்தி, இனக்குரோதம் என்பது மட்டும் எங்கள் நாட்டினிலே தூவப்பட்டதான காலமிது.

•••

பஸ் முழுக்கவே கலங்கி களேபரப் பட்டது. ஒரு பெண் சொன்னாள்- "அந்தப் பெண் இருந்த சீற்றுக்குக் கீழே நன்றாகப் பாருங்கள் ஏதாவது இருக்கிறதா என்று."

இன்னொரு படித்தவர் சொன்னார்- "தயவு செய்து உடனடியாகவே அந்த 'பேக்'கை தூக்கி வெளியில் வீசுங்கள்."

இந்த பேச்சுச் சத்தத்தில் மினி பஸ்ஸைச் சுற்றி மக்கள் கூடிவிட்டார்கள். சிலர் அந்தப் பெண் போன திசையையே பார்த்துக் கொண்டிருந்தனர். எனக்கோ இந்த மக்களைப் பற்றிய சிந்தனையே விரிந்து போனது.

கூட்டத்தில் இருந்த மனிதரில் ஒருவர் வந்து அந்த 'பேக்'கை திறந்து பார்த்தார். அதில் அன்றாடத் தேவைக்கான உடுப்புகள் மட்டுமே இருந்தன. இப்போது மினி பஸ்ஸிலிருந்து எல்லோருமே இறங்கி விட்டிருந்தனர். பஸ் அக்கு வேறு ஆணி வேறாக.. சோதனை செய்யப்பட்டது. இப்போதுகூட பிரயாணிகள் மத்தியில் திருப்தி ஏற்பட்டுவிடவில்லை. இருந்தும் எல்லோரும் ஏறி உட்கார்ந்தனர். பஸ் மெதுவாக தனது பயணத்தை ஆரம்பித்தது. அங்கே இருந்த தமிழ்ப் பெரியவர் என்னிடத்தில் சொன்னார்,

"உந்த மனிசி என்ன வேலை பாத்திருக்கு?"

நான் தலையாட்டினேன். பின்னரும் அவர்,

"உப்பிடி எண்டாலும், எங்கட சனம் எவ்வளவு கேவலமாய்ப் போட்டுது? இரண்டு

**சிறுகதை**

இனங்கள் எண்டு எந்தப் பெரிய பிளவு. உப்பிடியே போனா இரண்டு நாட்டிலை இரண்டு மக்கள் மாதிரி ஆயிடும் போல கிடக்கு. அதுதான் பயமாய்க் கிடக்கு." அவர் தனது ஆற்றாமையை வெளிப்படுத்தினார்.

"அதுமட்டுமில்லை இப்ப மற்றாக்களுக்கு எங்கடை ஆக்களைப் பாக்கிற நேரத்திலை வெட்ட வேணும் தின்ன வேணும் போல எல்லே கிடக்கு."

இடையில் ஒருத்தன் சொன்னான்... "ஆ....அந்தா அந்தத் தமிழ் மனுசி வருது" எல்லோரும் அவளையே ஒரு முகமாகப் பார்த்தனர். மனுசி வேர்க்க விறுவிறுக்க பயண அவசரத்தில் ஓடிவர, அவள் இருந்த சீற்றில் இன்னொரு பெண் ஏறி உட்கார அந்தத் தமிழ்ப் பெண்ணின் 'பேக்'கை ஸ்ராண்டில் விட்டுவிட்டு மினி பஸ் கொழும்பை நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தது.

கிளீனர் சொன்னார். "உங்கடை 'பேக்' அங்கே போட்டிருக்கு போய் எடுங்க." நடந்த விடயம் எதுவுமே தெரியாத அந்தப் பெண் அவசரமான தனது பயணம் கிடைக்காத அதிர்ச்சியில் ஓடிவந்து பஸ்ஸினில் ஏறிப் பார்க்க தான் இருந்த சீற்றில் இன்னொரு பெண் இருக்கக் கண்டு கிளீனரின் பேச்சைக் கேட்டு பஸ் ஸ்ராண்ட்டுக்கு ஓடினாள் அவள்.

அங்கே அவளை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பார்த்தனர்.

அவளின் முகத்தில் ஒரு வெறுமை மட்டுமே படர்ந்து போயிருந்தது.

நான் எண்ணிக் கொண்டேன், இனப் புரிந்துணர்வு வேண்டுமே. இப்படியே போனால் நிலமை என்னாவது? எப்போது நாங்கள் ஒன்றாய் வாழ்வது? எப்போது நாமெல்லாம் கலவரமில்லாத வாழ்க்கையை எங்கள் நாட்டில் காண்பது? அதனால் சந்தோஷிப்பது........?

(இது ஒரு பயணானுபவம்)

# இதயத்தில் ஓர் இடம்!

**கல்குடா-க. பரமானந்தராஜா**



காலையில் எழுந்ததும் அகிலனுக்கு அதே சிந்தனையாகவே இருந்தது. மனதை அவனால் ஒரு நிலைப்படுத்த முடியவில்லை. மனதைப் போட்டு அலட்டிக்கொண்டிருந்தான்.

சத்தியாவைச் சந்தித்துதான் எத்தனை நாட்கள் ஆகிவிட்டன. ஒரு வினாடிகூட அவளை மறக்க முடியாமல் அவள் நினைவாகவே வாழ்ந்து கொண்டிருக்கும் அவனால் அவளது முகத்தைக்கூட பார்க்கும் வாய்ப்பில்லாவிட்டால் அந்த வேதனையின் ஆழம் நிச்சயம் அவனுக்குத்தானே தெரியும்!

சத்தியா மீது அவன் எந்தளவிற்கு அன்பு வைத்திருந்தான். அந்த அன்பைக்கூட மதிக்காமல் சத்தியா அவனையே எடுத்தெறிந்து பேசி விட்டாள் என்பதை அவனால் இன்னும் தான் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

சத்தியாவை அவன் விரும்பினான். நேசித்தான்...காதலித்தான் என்பதைவிட, அவன் அவளை அத்தனையும்விட மேன்மையாகவே கருதினான்.

அவள்மீது அவனுக்கு அளவுக்கதிகமான கரிசனை இருந்தது. அவனது அத்தகைய அக்கறை அவளுக்கு ஏனோ பிடிக்கவில்லை போலும்! இல்லாவிட்டால் அவனுக்கு விருப்பமில்லாத விவகாரங்கள் தெரிந்திருந்தும் அந்த விவகாரங்களையே தனது கொள்கையாக அவள் கொண்டிருக்க மாட்டாள். அவனது மென்மையான மனதை வீணாக வேதனைப் படுத்தியிருக்க மாட்டாள்.

அவள் அவனுக்குப் பிடிப்பில்லாத காரியங்களில் எல்லாம் விருப்பத்தோடு நடந்து கொண்ட வேளைகளில் எல்லாம், தனக்குள்ளேயே உள்ளூர வேதனைப்பட்டுக் கொண்டானே தவிர, அவள் மீது அவன் ஆத்திரப்படவில்லை.

ஆனால், சத்தியா அன்று அவனுக்கு கூறிய வார்த்தைகள் தான் இன்னும் அவனது மனதிலே அலைமோதிக் கொண்டிருந்தன.

அந்த நினைவுகளையோ... வேதனையையோ அவனால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை. மனதில் ஏதோ நிதானித்தவனாக வெளியில் கிளம்பினான் அகிலன்.

ஒஃபீஸில் அவனால் அன்றும் எதனையுமே செய்ய முடியவில்லை. அந்த ஒரு மாத காலமாக அவன் இப்படியே அமர்ந்து கொண்டு மனதில் சிந்தனைகளுடன் தனது கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருப்பது அந்த அலுவலகத்தில் யாருக்குத்தான் தெரியப் போகின்றது!

'சத்தியா..உண்மையாகவே நீ என்னை வெறுத்துவிட்டாயா...? உங்களப் பிரிஞ்சி என்னால வாழ முடியாதென்று அடிக்கடி சொல்வாயே? நீயா இப்படி மௌனமாக இருக்கிறாய்...?

'அந்தளவிற்கு உன்ர மனத கல்லாக மாற்றி விட்டாளா அந்த கொடூர இராட்சசி....? சத்தியா என்னை முழுமையாகப் புரிஞ்சி கொண்ட நீயுமா நான் சொன்ன வார்த்தைகள நம்பல்ல...?'

அகிலனால் வேதனைகளைச் சுமக்க முடிந்த போதிலும், அவனால் ஒரு முடிவுக்கு வரவே முடியவில்லை. அவன் தவறு செய்திருந்தால் அந்தத் தவறை ஒப்புக் கொண்டிருப்பான். ஆனால், இல்லாத உறவை அவனால் எப்படி ஏற்க முடியும்?

சரண்யாவுடன் அவன் பேசிப் பழகியது ஏதோ உண்மைதான். சந்தர்ப்பவசமாக அவளருகில் இருந்து பஸ்ஸில் இரண்டு தடவைகள் பிரயாணம் பண்ணியிருக்கிறான். இதைத் தவிர அவளுடன் அவனுக்கு எந்தவிதத் தொடர்புமே இருந்ததில்லை.

சரண்யா சத்தியாவிடம் சொல்லும் அளவிற்கு அவன் அவளை மனதால் கூட நினைத்துப் பார்க்கவில்லை. சரண்யா சத்தியாவிடம் சொல்லிய அந்த வார்த்தைகளை நினைக்கும் போதெல்லாம் அந்த துன்பத்தை அகிலனால் பகிர முடியவில்லை.

'சரண்யாவ நான் காதலித்தேனா? அவளோட சினிமா...பார்க்...பீச்.... என்றெல்லாம் சுற்றினேனா? இதென்ன கொடுமை!...சரண்யாவ நான் விரும்பவில்லை என்பதற்காக...என்ர வாழ்க்கைய கெடுத்தழிக்க அவள் நினைப்பது நியாயம்தானா?' அவனால் எதையுமே நிதானிக்க முடியவில்லை.

அகிலன் ஒரு முடிவுடன் சரண்யாவைச் சந்திக்கச் சென்றான். அகிலனைக் கண்ட சரண்யா புன்முறுவலுடன் அவனை வரவேற்றாள்.

"மிஸ் சரண்யா! நான் உங்களோட கொஞ்சம் கதைக்கவேணும்."

"யெஸ்....நீங்க எது வேண்டுமானாலும் தாராளமாகக் கதைக்கலாம்... நீங்க வந்த சந்தர்ப்பம் தானோ என்னவோ... இண்டைக்கு வீட்டில யாருமே இல்ல..." என்றாள் சரண்யா.

அவளது சர்வ சாதாரண வார்த்தைகளைக் கேட்கும் போது அகிலனுக்கு ஆத்திரமாக இருந்தது.

"சரண்யா எப்பவாவது நான் உங்கள "லவ்" பண்றன் என்று சொல்லியிருப்பேனா? ஏன் நீங்க என்ர வாழ்க்கையில விளையாடுறீங்க...? சத்தியா என்னையே வெறுக்கிற அளவுக்கு ஏன் இல்லாத ஒன்ற இருக்கிறதாக பொய் சொன்னீங்க...?"

"மிஸ்டர் அகிலன்! நீங்க என்னை விரும்பினாலும்...விரும்பாவிட்டாலும் அதப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனா...நான் உங்கள விரும்புறன்...அதனால, என்னைத் தவிர வேற எந்தப் பெண்ணோடையும் உங்கள வாழவிட மாட்டன்.." அவள் அப்படிச் சொன்னதும் அகிலனுக்கு தலையே சுற்றுவது போல் இருந்தது.

"சரண்யா பிளீஸ்...நீங்க என்னை நேசிக்கலாம். ஆனா....என்ர இதயத்தில சத்தியாவைத் தவிர வேற எவருக்குமே இடம் கிடையாது... என்ர இதயத்தில மூன்று வருஷமாக அவளைத் தான் வைச்சி பூசிக்கிறன். ஐஆம் வெரி சொறி.. உங்கட எண்ணத்த மாற்றிக் கொள்ளுங்க.....எனக்கொரு வாழ்க்கையெண்டால் அது சத்தியாவோடதான் இருக்கும்..."

உறுதியாகக் கூறிக் கொண்ட அகிலன், சத்தியாவின் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

(யாவும் கற்பனை)

# தவிப்புக்கள் பலவிதம்

**-அக்கரைப்பற்று ஏ.ஜீ.சேகர்-**

'ச்சீ... இவர் ரொம்பவும்தான் மோசம். இப்படித்தான் என்னைக்காத்திருக்க வைத்து வருவதுதான் அவருக்கு வழக்கம். இன்றுகூட எவ்வளவு நேரமாக கால்கடுக்க காத்து நிற்கிறேன். கொஞ்சமாவது அவருக்கு என் நினைப்பு கிடையாதே... வரமாட்டேங்கிறாரே மனுஷன்.'

என் மனசு பரபரத்து.... இருக்கின்றது அவரது வரவுக்காக. எனக்குத்தான் மனசு முழுவதும் அவர் எண்ணம். அவருக்கு இதெல்லாம் எங்கே புரியப்போகிறது! எங்காவது எவர் வீட்டு வாசலில் நின்று எவளாவது பல்லிளித்தால் போதும் அவளுடன் ஒரு அரைமணி நேரம்.. அப்படியே அடுத்தவளுடன் கால்மணி நேரம் பேசிப்பொழுதைப் போக்கிவிட்டு.. பகல் சாப்பாட்டு நேரமாகப் பார்த்துத் தான் இந்தப்பக்கம் வருவார். அவர் அழகான வாலிபன் என்பதாலா இவளுகளெல்லாம் இப்படி அலைகிறார்கள்? நான் இதைப்பற்றி இவரிடம் கேட்டதேயில்லை. என்னைப் பொறுத்தவரை இந்தவிஷயம் அவரவர் சொந்த விஷயம்.

கைக்கடிகாரத்தையும் ஒருமுறை முறைத்தேன். மணி பன்னிரண்டைத் தாண்டிவிட்டிருந்தது. என் மனதில் மீண்டும் பரபரப்பு. அதாவது அவரைக் கண்டுவிடும் பரிதவிப்பு. இனி அவர்வரும் நேரம்தானென அடிமனசு அடித்துக் கூறியது. இதோ வருகிறார் என்பதுபோல அவர் சைக்கிள் மணியொலிகள் என் காதுகளில் தேன்வார்த்துச் சென்றது. சில நிமிடங்களில் சகல பற்களையும் என் முன்னே சமர்ப்பித்து வந்து நின்றார். நானும் பாசாங்கு செய்தேன் சிரிப்பதுபோல. காத்திருந்த கோபம் என்னிடம் இன்னுமிருந்தது.



வந்தவர் எதுவுமே பேசவில்லை. என்னிடம் ஒரு கடிதத்தைத் தந்துவிட்டு தாமதிக்காமலே போய்விட்டார். நான் கேள்விக்குறியுடன் காகித உறையை உரித்தேன்.

"என்னடா சுஜீவன்... பியோன் வந்துட்டாரா?... உன்ட றிசல்ட் சீற்தானே வந்திருக்கு...? இஞ்ச கொண்டா பாப்பம்" என்றபடி வீட்டிற்குள்ளிருந்து என் அக்கா வதனா என்னை நோக்கி ஆவலுடன் ஓடிவந்து கொண்டிருந்தாள்.

# காத்திருக்க நேரமில்லை

**ஸ்ரீவரணி-வாழையூர்**

**நிமிடக் கதை சுவாரஸ்யமானால் செக்கன் கதை?**

அறையினுள், நீளமாய் அரை நிர்வாணமாய் இருந்த 'டயர்' விளம்பர படத்தை மாட்டிய குமார், பெருமையாய் சூழ நின்றிருந்த நண்பர்களைப் பார்த்தான்.

"எப்படியிருக்கு மச்சான் படம். சூப்பர் இல்ல? காலையில கண்முழிக்கிற எண்டா இதுல தான் முழிக்க வேணும். ச்சா, என்ன டயர் மச்சான்." (வேண்டாத கற்பனையெல்லாம் வேண்டாம்.)

"டேய் குமார், பார்க்கிற எல்லாத்தையும் அளவோட பார் மச்சான். நீ இந்தப் படத்தோட மட்டும் நிற்கிற ஆள் இல்ல. கவனம்." நண்பனொருவன் எச்சரிக்கை.

"சும்மா போ மச்சான். எனக்கிருக்கிற அழகுக்கும், என்ர பொடி ஷேப்புக்குமே பொண்டுகள் கியூவில நிற்கும்கள், நான்தான் யாரையுமே பார்க்கிறதில்ல தெரியும்தானே."

"என்னத்த தெரியுறது. உன்னையும் விழுத்துறதுக்கு ஒருத்தி பிறந்திருக்கத்தானே போறா!"

"ஓமோம் கட்டாயம் பிறந்திருப்பா. ஆனா, அவள் எவ்வளவு அழகாயிருக்க வேணும். தெரியுமே, எவ்வளவு சீதனம் தரவேணும் தெரியுமே?"

"அட, நீ சீதனமும் வாங்குவியே?" இன்னொரு நண்பன் சீண்டினான்.

"ஏனடா? எல்லாரும் வாங்குறாங்க, நான் மட்டும் வாங்கக் கூடாதே?" ஏகத்தாளமாய் கேட்டான்.

"வாங்கலாம் தான். ஆனா உனக்கு 'டயபெற்றிக்' வியாதியிருக்கிற மாதிரி தெரியுது மச்சான்." ஏனெண்டா, நீ அடிக்கடி 'பாத்ரூம்' பக்கம் போறாய். எதுக்கும் ஒரு தடவை நல்லா மெடிக்கல் செக்கப் பண்ணிடு. பிறகு வாறவள் சீதனத்த குறைச்சுப் போடுவாள்." ஒருவன் சொல்ல எல்லோரும் சிரித்தார்கள். குமாரும் சேர்ந்து சிரித்தான்.

நண்பர்கள் சொன்னது போலவே குமார் காதல் வலையில் வீழ்ந்துதான் போனான். அவன் எண்ணியது போன்றே அழகானவளாய், பண்பானவளாய், அடக்கமானவளாய் இருந்தாள். குமாருக்கு இப்படியொரு காதலி கிடைத்தது பற்றி ஏக பெருமை. அவர்கள் சந்திப்பில் அன்புப் பரிமாற்றம் அளவிட முடியாதிருந்தாலும், குமாரிற்கு அடிக்கடி அறையில் மாட்டியிருந்த 'டயர்' விளம்பரம் மனசுள் எட்டிப் பார்த்து தொந்தரவு படுத்திற்று.



நாட்கள் நகர, திடீரென குமாரிடமிருந்து நண்பர்களுக்கெல்லாம் அழைப்பு வர ஆச்சரியமாய் கூடினார்கள். அவனறையுள் கூடியவர்கள், மேலும் வியந்து போனார்கள். காரணம் குமாரின் திருமணக் கோலம்.

"என்ன செய்யுறது மச்சான், இந்த நாசமாப்போன 'டயரால' ஒழுங்கா பழகிக் கொண்டிருந்த எனக்கு, திடீரென கல்யாணம் முடிக்க வேண்டிய சூழ்நிலை. அதால, உங்களையெல்லாம் அழைக்க முடியாம போச்சுது. மன்னிச்சிடுங்கடா. அதோட இண்டைக்கு எல்லாருக்கும் கல்யாண விருந்து." குமார் சொல்ல,

"பரவாயில்ல மச்சான், சீதனம் அது இதெண்டு பேசிக்கொண்டிருந்த நீ, சீதனமேயில்லாம மனச்சாட்சிக்குப் பயந்து, நம்பினவள கைவிடாம, கைப்பிடிச்சிருக்கியே! இது தாண்டா உனக்கு பெருஞ் சீதனம். உன்ன நினைச்சு நாங்க பெருமைப் படுறம்டா! "நண்பர்கள் அவன் வாழ்க்கைக்கு வாழ்த்துக்கள் கூற,

விளம்பரத்திலிருந்த அரை நிர்வாணப் பெண் இன்னும் சிரித்துக் கொண்டிருந்தாள்.

(யாவும் கற்பனை)

**சிறுகதை**

# சுகமான சோகம்

**-ரமேஷ் கண்ணன்-**

"**கா**யத்திரி ஒனக்கிப்ப என்னாச்சு? கொஞ்ச நாளாகவே சரியா என்னோட பேசுறதுமில்ல.... ஏன்! நான் ஏதாவது தப்பு பண்ணிட்டனா..?

"இங்கப் பாரு காயத்திரி... எதுவா இருந்தாலும் எங்கிட்டச் சொல்லு. அதவிட்டுட்டு நீ மட்டும் இப்படி தனியா யோசிச்சுகிட்டு, என்னோடையும் பேசாமயிருக்கிறதில எந்தப் பிரயோசனமும் இல்ல....

"சரி.. சரி.... ஆபீசுக்கு லேட்டாகுது. சீக்கிரமா டிபன் ரெடி பண்ணு."

வேண்டாவெறுப்பாக சமயலறையை நோக்கிச் செல்லும் காயத்திரியைப் பார்க்கும் போது அவன் மனம் இன்னும் வேதனைப்பட்டது.

திருமணமாகி இரண்டு வருட காலத்தையும் அன்பாகவும், மகிழ்ச்சியாகவும் கொண்டு சென்ற அதே காயத்திரிதான், இன்று இவ்வாறு அடம் பிடித்துக் கொண்டிருந்தாள். முன்பெல்லாம் அவன் கண் விழிப்பதற்கு முன்பே எல்லா வேலைகளையும் முடித்து, அன்பாக தன் கணவனுக்கு காலையுணவை பறிமாறுவதில் என்னவோ ஒரு பெரிய மகிழ்ச்சியைக் கண்ட அதே காயத்திரிதான்; இன்று அவன் எழுந்தபின் எழுந்து, காலையுணவைக்கூட சரியாகப் பரிமாறாமல் அவனை வேதனைப்படுத்துவதில் தான் மகிழ்ச்சி யடைகிறாளா தெரியவில்லை.

பாவம் மனோச். திருமணமாகி இன்றுவரை காயத்திரியை அதட்டிக்கூட இருக்கமாட்டான். எல்லோரும் வியந்து பேசுமளவிற்கு பண்பாக நடந்துகொண்ட காயத்திரியா இவ்வாறு செய்கின்றாள்..! நினைக்கும் போது அவனுக்கு கவலையாக விருந்தது.

ஆனால் இந்நிலையில்கூட அவனால் காயத்திரியை அதட்டிப் பேச முடியவில்லை. காரணம் மென்மையான அவளை எந்த விதத்திலும் புண்படுத்தக்கூடாது என்பதுதான் அவனின் ஒரே எண்ணம். நீண்டவொரு பெருமூச்சுடன் கடிகாரத்தைப் பார்க்கும் மனோச், திடுக்கிட்டு மேசைமீதிருந்த பைலை கையிலெடுத்தபடி,

"காயத்திரி எனக்கு ஆபிசுக்கு லேட்டாச்சு. நான் போயிட்டு வாறன்."

கூறியபடி விரைந்தவன், ஏதோ நினைவுக்கு வந்தவனாய் மீண்டும் தன் பார்வையை வீட்டை நோக்கி திருப்பு கின்றான்... அவனது முகம் இன்னும் சற்று வாடிப்போகின்றது. காரணம் முன்பெல்லாம் அவன் சென்று மறையும்வரை, அவனையே பார்த்துக்கொண்டிருக்கும் காயத்திரி இப்போது வாசல் பக்கம் வருவதே கிடையாது. மாறாக அவன் வெளியேறிய மறு கணமே கதவைத் தாழிட்டுக் கொள்வது அவனை இன்னும் வேதனைப் படுத்தியது. எவ்வாறோ அவற்றை சமாளித்துக்கொள்ளும் மனோச், குழப்பத்தோடு விரைகின்றான்.

என்னவோ அன்று அவனால் ஆபிஸ் வேலைகளைக்கூடச் செய்ய முடியவில்லை. அந்த எட்டு மணி நேரமும் அவனுக்கு எட்டு வருடங்களாகத் தோன்றியது. எவ்வாறோ அன்றைய பொழுதை சிரமப்பட்டு போக்கிக் கொள்ளும் மனோச், இன்று எவ்வாறாயினும் காயத்திரியின் இந்த மாற்றத்திற்கான காரணத்தை தெரிந்துகொள்ள வேண்டும் என்ற திடமான முடிவுடன் வீட்டை நோக்கி விரைகின்றான். மிகுந்த களைப்புடன் வீட்டையடையும் அவன், கதிரையில் சாய்ந்தபடி,

"காயத்திரி! ரொம்ப களைப்பா இருக்கு... குடிக்கக் கொஞ்சம் தண்ணி கொண்டுவா.."

அவன் வந்ததைக்கூட கவனிக்காதவள் போன்று, தான் படித்துக்கொண்டிருந்த புத்தகத்தில் மூழ்கிப் போயிருந்த காயத்திரி, வெறுப்போடு தண்ணீரைக் கொடுத்துவிட்டு மீண்டும் புத்தகத்தில் தன் கவனத்தைச் செலுத்துகின்றாள்.

"ஏன் காயத்திரி என்ன இப்படிக் கொடுமப்படுத்துற...? நான் ஒனக்கு எதுல குறை வைத்தேன். ஏன் இப்படி நடக்கின்றாய்..?

"ஆமா. நான்தான் ஒங்கள கொடுமப்படுத்துறன். யாரு யாரக் கொடுமப்படுத்து றாங்கண்ணு, நீங்க இப்ப சொன்ன பிறகுதான் எனக்கே தெரியுது...

"ஒவ்வொரு புருசனும் தன் மனைவி கேக்காமலே டிவி,டெக், பிரிஜ் ஏன் கார்கூட வாங்கிக் கொடுக்கிறாங்க. அவங்களெல்லாம் எவ்வளவு வசதியா சந்தோசமா வாழுறாங்க. ஆனா நான் இங்க எதுவுமே இல்லாம மாடு மாதிரி கஷ்டப்படுறன். அப்படி கஷ்டப் பட்டாக்கூட நான்தான் கொடுமக்காரி... எல்லாமே எண்ட தலவிதி. இப்படி ஒங்ககிட்ட வந்து கஷ்டப்படுறன்."

காயத்திரி இவ்வளவு நாட்களும் ஏன் அவ்வாறு நடந்துகொண்டாள் என்பதற்கான




காரணத்தை, அவள் பேசிய வார்த்தைகளில் இருந்தே மனோச் தெளிவாகப் புரிந்து கொண்டான்.

ஆனாலும் ஒரு நாள்கூட தன்னை எதிர்த்துப் பேசாத காயத்திரி இன்று இப்படி கடுமையான சொற்களைப் பயன்படுத்தியது அவனுக்குள் கோபத்தை ஏற்படுத்தியது.

"காயத்திரி... பணம் இருந்தா மட்டும் சந்தோசமா வாழலாம் என்று நினைக்கிறியா..? இல்ல காயத்திரி இல்ல... ஒவ்வொரு பணக்காரங்க கிட்டையும் தாராளமா பணம் இருக்கே தவிர சந்தோசமான வாழ்க்கை இல்ல.

"மனசுல சந்தோசமில்லாம, வாழ்க்கையில பிடிப்பில்லாம வெளிப்பார்வைக்கு மாத்திரம் ஆடம்பரமா வாழ்றதவிட, நம்ம வாழ்க்க எவ்வளவோ மேல் காயத்திரி. நாம சாகும்போது இந்தப் பணத்த எடுத்துக் கொண்டா போகப் போறம்? சந்தோசமா வாழ்ந்தோம் என்ற திருப்திதான் கடைசியா மிஞ்சும்.

"இதெல்லாத்தையும் புரிஞ்சுக்கிற நிலை யில நீயில்ல. ஆனா எப்பவாச்சும் நீயாவே இதப் புரிஞ்சுக்குவ. அதுவரைக்கும் ஒன்னத் திருத்தவே முடியாது. காயத்திரி எப்ப உன் தவறு உனக்குப் புரியுதோ அண்ணைக்கு என்னோட பழைய காயத்திரியா வா.... அதுவரைக்கும் நா காத்துக்கிட்டிருப்பன்..."

நிதானமாக கூறிமுடிக்கும் மனோச் தன் கண்களிலிருந்து வடியும் கண்ணீர் துளிகளை துடைத்துக்கொள்கின்றான். உண்மையிலேயே அவன் கூறியவற்றைப் புரிந்துகொள்ளும் நிலையில் காயத்திரியில்லை.

இவ்வாறு காலத்துடன் காலமாக அவர்களது வாழ்க்கையும் குழப்பமாகவே நகர்ந்துகொண்டிருந்தது.

அன்றொரு நாள் காயத்திரியின் நெருங்கிய சிநேகிதியான திவ்யா அவளது வீட்டிற்கு வந்திருந்தாள். நீண்ட நாட்களின் பின்னர் தன்னைக் காண திவ்யா வந்ததில் காயத்திரிக்கு ஏகப்பட்ட சந்தோசம். ஆனாலும் தன் வீட்டு நிலவரங்களை திவ்யா அறிந்துகொள்ளக் கூடாது என்பதற்காக தான் மிகுந்த மகிழ்ச்சியாக வாழ்வது போன்று பாவனை செய்துகொண்டாள் காயத்திரி.

"அப்புறம் எப்படி திவ்யா ஒன்னோட குடும்ப வாழ்க்கையெல்லாம்? ஒனக்கென்ன காரு, பங்களா... ஆ... ரொம்ப வசதியான வாழ்க்கை.."

காயத்திரி! அவ்வாறு கூறியதும், வெறுப்புடன் குறுக்கிடும் திவ்யா,

"காயத்திரி கார், பங்களா எல்லாமே இருந்திட்டா எவ்வளவு சந்தோசமா வாழ்க்கைய அனுபவிக்கலாம் என்று அண்ணைக்கு நானும் நினைச்சன். ஆனா அது எவ்வளவு முட்டாள்தனம் என்று இப்பதான் என்னோட வாழ்க்கையிலேயே அணுஅணுவா அனுப விக்கிறன். பெயருக்கு மட்டும்தான் நாங்க வசதியானவங்க. ஆனா வாழ்க்கையில சந்தோசமென்னும் வார்த்தைய கேட்டதுகூட கிடையாது.

"வெக்கத்தவிட்டுச் சொல்லப்போனா, ஓ மனோச்சப் போல எனக்கொரு புருசன் கிடைச்சிருந்தா நான் எவ்வளவு சந்தோசப் பட்டிருப்பன் தெரியுமா? அன்பான கணவனோட சந்தோசமா வாழறதுக்குக்கூட நான் கொடுத்து வைக்கல்ல..

"இருந்தாலும் நீயாவது கஷ்டப்படாம, சந்தோசமா ஒரு நல்ல கணவனோட வாழறத நினைக்கிறப்போ எவ்வளவு சந்தோசமா இருக்குத் தெரியுமா? நீ கொடுத்து வைச்சவ காயத்திரி..."

கண்களில் கண்ணீர் நிறைய சோகமாக கூறும் திவ்யாவைப் பார்க்கும் போது, காயத்திரிக்கு தன் தலை சிதறுவது போலிருந்தது. திவ்யாவின் ஒவ்வொரு வார்த்தையும் காயத்திரியின் கன்னங்களில் ஓங்கி அறைவது போன்று பிரமை. தன்னுள் ஒரு குற்ற உணர்வு.

காயத்திரியின் கண்கள் சிவந்து கொள்கின்றன. இதயம் மட்டும் மனோச்சிடம் மண்டியிட்டு மன்னிப்பைத்தேடுகின்றது. ஆமாம் தன் தவறை இப்போதுதான் உணர்ந்து கொள்கின்றாள் காயத்திரி.

இதுவரை அவளைப் பீடித்திருந்த பணப் பிசாசு அவள் உடலில் இருந்து பிரிந்து செல்ல, பழைய காயத்திரியாக, ஒரு நல்ல மனைவியாக காட்சியளிக்கின்றாள் காயத்திரி....

(யாவும் கற்பனையே)

---

# இணைந்த ♥ உள்ளங்கள்

**தாராபுரம் நப்ஹான்**

**ப**டகில் செல்வதென்றவுடன் சற்று பயமாகவே இருந்தது. என்றாலும் சுமார் மூன்று அண்டுகளுக்கு முன்பு இதே கடல் வழியாகத்தான் படகில் நான் வந்தேன்.

என்னுடன், எனது உடன் பிறப்புக்கள் உட்பட சுமார் 25,000 பேர் கடலில் தான் பயணம் செய்து கற்பிட்டிக்கு அகதிகளாக வந்தோம்.

அப்போதெல்லாம் எங்களுக்கு முன்னால் பல படகுகளும், பின்னால் பல படகுகளும் ஊர்வலமாக வந்தன. கடல்-வீதி போன்று காட்சி அளித்தது.

அன்று ஊர்வலமாக படகில் வந்தபின் நாளை- அதாவது சுமார் மூன்று ஆண்டுகளின் பின் எனது சொந்த ஊர் செல்ல ஆயத்தமாகின்றேன்.

எனது வீடு, எனது ஊர், எனது நகரம் எல்லாம் எப்படி இருக்கும் என்று என்னால் கற்பனை கூடப் பண்ணிப் பார்க்க முடிய வில்லை. பயணம்தான் சற்று பயம். பயணத்துக்கான ஆயத்தங்களை செய்து விட்டு தூங்க ஆரம்பித்துவிட்டேன்.

•••

**ம**றுநாள் பொழுது புலர்ந்தது. எனது உடுப்புப் பார்சலையும் படகில் செல்வதற்காக வாங்கி வைத்திருந்த 'பாஸ்' சினையும் எடுத்துக்கொண்டு கற்பிட்டி துறை முகம் செல்கிறேன்.

இன்று 14 படகுகள் செல்லவுள்ளன. அத்துடன் மன்னார் சுவாமியாரின் படகும் செல்லுமாம். சுவாமியாரின் படகில் ஆட்கள் மட்டும்தான் செல்வார்கள் என்று ஒருவர் மூலம் அறிந்துகொண்டேன்.

ஏனைய 14 படகுகளிலும், சாமான்கள் ஏற்றப்படுகின்றன. ஒரு சிலர் மட்டுமே அதில் செல்ல முடியும். சுவாமியின் படகில் இடமில்லை. இதனால் சாமான் ஏற்றும் படகில் நானும் ஏறுவதற்கு நிற்கின்றேன். நான் தனியே தான். என்றாலும் எனக்கு அறிமுகமான பலபேர் பயணத்திற்காக காத்து நிற்கின்றனர். "உவைஸ், சாப்பாடு கொண்டு வரலியா.." என எனக்கு அறிமுகமான சிவசம்பு அண்ணன் கேட்க, ஓ..மறந்தே போயிட்டன்.." நீங்க கடைக்குத்தானே போறீங்க? எனக்கும் ஒரு பார்சல் வாங்கிட்டு வாங்க" என்று ஐம்பது ரூபாயை கொடுத்தேன்.

ஒருவாறாக பாஸ் 'செக்' பண்ணி முடிந்ததும் படகில் ஏறிவிட்டேன். சாப்பாட்டு பார்சலுடன் சிவசம்பு அண்ணன் வந்தார். அவரும் என்னுடன் படகில் ஏறினார்.

படகு செல்ல ஆயத்தமாகிறது. இப்போது நேரம் காலை 7.45. இறைவனின் நாட்ட மிருப்பின் பிற்பகல் 4 மணிக்குத்தான் மன்னார் கடற்கரையைப் படகு போய்ச் சேரும்.

•••

**ப**டகு புறப்பட்டு 2 மணி நேரமாகிவிட்டது. இப்போதுதான் பசி எடுக்கிறது. கொண்டு வந்திருந்த சாப்பாட்டுப் பார்சலினைப் பிரித்து சாப்பிடுகிறேன்.

என்னைப் போல் பலரும் அவரவர்கள் கொண்டு வந்த சாப்பாடுகளை சாப்பிடு கின்றனர். தண்ணீரும் படகில் இருந்தது. அதில் கொஞ்சம் வாங்கி குடித்துவிட்டு சாப்பாட்டை முடித்துவிட்டேன்.

இன்னும் 6 மணித்தியாலயங்கள் பயணம் செய்ய வேண்டும். எங்கு பார்த்தாலும் ஒரே கடல், மிகவும் தூரத்திலே தெரியும் கரை, சற்று தூரத்துக்கப்பால் செல்லும் ஒரு படகு, இவைதான் அப்போதைக்கு எங்களுக்குத் தெரிந்த காட்சிகளாகும்.

எனக்கு தூக்கம் வந்தது. ஒருவாறு அருகில் இருந்த மாமூடைகளில் ஒரு சாரத்தை விரித்து தூங்குகின்றேன். வீட்டில் தூங்குவதைப் போல் நிம்மதியாக தூங்க முடியுமா என்ன?

•••

"**அ**தோ தெரிகிறது மன்னார். அதுதான் மன்னார் புகையிரத பாலம்.... அதுதான் சவுத்பார்" இப்படியான கதைகளை சிலர் கதைத்துக் கொண்டிருந்த வேளையில் நான் விழித்துக் கொண்டேன்.

அவர்கள் கூறியதுபோல் மன்னார் அண்மித்துத்தான் இருந்தது. சுமார் 5 1/2 மயித்தியாலம் எப்படித்தான் தூங்கினேனோ தெரியவில்லை. கண்களை சற்று கசக்கிவிட்டு முகத்தைத் துடைத்துக்கொண்டேன்.

மன்னார் நகரம் வருகிறது. ஆனால் படகு தாழ்வுபாடு கடற்கரைக்குத்தான் செல்லும். எனவே இன்னும் அரை மணித்தியாலமாவது படகு ஓட வேண்டும்.

எனது பேக்கினுள் இருந்த தினமுரசு வாரமலரை எடுத்துப் பார்க்கலாம் என எடுக்க நினைத்தபோது ஒரு அலை வந்து படகில் அடித்தது. அதனால் எனது உடைகள் சற்று நனைந்துவிட்டன.

பத்திரிகை பார்க்க முடியாது. எனவே,



கடலையும், கரையையும் பார்த்த வண்ணம் இருக்கின்றேன். கரை தெரிகிறது. அருகில் தெரிகிறது.படகு விரைவாகவே தாழ்வுபாடு கடற்கரையை அண்மிக்கிறது.

ஆம். கடற்கரை வந்து விட்டது. தாழ்புபாடு கடற்கரையில் இறங்கவே உடம்பெல்லாம் நடுங்கியது. என்றாலும் அனைத்தையும் சுதாகரித்துக்கொண்டு உடுப்புப் பார்சலைத் தயார் செய்கிறேன்.

ஆட்கள் தெரிகின்றனர். படகுகள் நிறுத்தியி ருக்கின்றன. பலர் படகுகளை இழுத்து கரை சேர்க்கின்றனர். நான் இப்போதுதான் இறங்குகிறேன். கால்கள் நனையும் அளவில் படகு நிறுத்தப்பட்டது. நீண்ட நாட்களுக்குப் பின் எனது சொந்த ஊரில் காலடி எடுத்து வைக்கின்றேன். பல புதிய முகங்கள் என்னை வரவேற்றன. பொலிஸ் சோதனைக்கு செல்கிறேன். சோதனை முடிந்து விட்டது.

இப்போது எனது வரவிற்காக காத்து நின்ற ஹஸன் மச்சானைத் தேடுகிறேன். ஆனால் வித்தியாசமான மனிதர்கள் இருவர் என்னைக் குறுக்கிடுகின்றனர். சற்று தூரத்தில் அவர்கள் வந்து கொண்டிருந்தனர்.

இவர்களை முன்பு எங்கோ பார்த்த ஞாபகம். என்றாலும் அவர்கள் இருவரும் யார் என்பதை வெகு சீக்கிரமாகவே புரிந்துகொண்டேன்.

ஆம்! அவர்களில் ஒருவர் றோச் பீரிஸ், முன்பு என் அருகில், ஒரே வகுப்பில் கல்வி கற்ற நண்பன், மற்றவர் பாலகுமார்.இருவரும் எனது வகுப்பில் எனக்கு சற்று அருகில் அமர்ந்திருந்து படித்த நண்பர்கள்.

இவர்களை அறிந்து கொண்ட நான் அவர்களுக்கு அண்மையில் செல்ல நினைத்த போது அவர்களில் ஒருவர் என்னை நோக்கி நடந்து வருகிறார்.

இவர் றோச் பீரிஸ். சந்தேகமே இல்லை "உவைஸ்..இப்பதான் வாரீங்களா..?" எனக் கேட்கும் போதே அவரது கண்களில் இருந்து கண்ணீர் என் கைகளை நனைக்கின்றது.

எனது பழைய நண்பன் எனது இடுப்பில் கையை வைத்துக்கொண்டு அழுது நின்றதை அங்கு காவலுக்கு நின்று கொண்டிருந்த பாதுகாப்பு படையினர் விநோதமாக பார்த்துக்கொண்டிருந்தனர்.

எனக்கும் என்ன பேசுவதென்றே புரியவில்லை. எனது கண்களில் இருந்தும் கண்ணீர்கள் உதிர்ந்தன. சற்று நேரம் அப்படியே நின்றுகொண்டு கண்ணீரை இருவரும் துடைத்துக்கொண்டு பேச ஆரம்பித்த போது, பாலக்குமாரும் வந்துவிட்டார்.

"உவைஸ் எப்படி சுகமா?" என அவரும் பேச்சை ஆரம்பித்தார். மூவினங்களையும் சேர்ந்தவர்கள் இங்கு நாங்கள் கூடி நிற்பது மதத்தால் வேறுபட்டாலும், மொழியால்- உள்ளத்தால் ஒன்றுபட்ட நண்பர்கள்.

"எங்க இருந்தீங்க இவ்வளவு நாளும்?" என மாறி மாறிக் கேட்டுக் கொண்டோம். ஏனெனில் 3 அண்டுகளின் பின்னர் சந்திப்பது இதுவே முதற் தடவை.

"வலங்டன் எங்கே? ரட்ணசிங்கம் எங்கே? புலேந்திரன் எங்கே? என எனது வகுப்புத் தோழர்களை நான் விசாரித்தேன்.


பதிலுக்கு அவர்களும், "முசின் எங்கே? ஹிஸாம் எங்கே?" இவ்வாறு அவர்களுடைய தோழர்களை விசாரித்தனர்.

இப்படியே கதைத்துக்கொண்டு சற்று தூரம் சென்ற போது என் வரவுக்காக ஹஸன் மச்சான் அவர்கள் ஒரு சைக்கிளில் காத்து நிற்பது புரிந்தது.

இவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு சைக்கிளை நோக்கி நடக்கின்றேன்....! தாராபுரம் கிராமத்தை சென்றடைவதற்காக!

(யாவும் உண்மை)

---



# கத்தரித்த கடி ஜோக்ஸ்

**நோயாளி:** சரியா மூச்சுவிட முடியாமல் கஷ்டப்படுறேன் டாக்டர், காப்பாத் துங்க டாக்டர்.
**டாக்டர்:** கவலையே படாதீங்க. மூச்சை நிறுத்திடலாம். நோ.பிராப்ளம்!

•


**ஒருத்தி:** ராத்திரி முழுக்க தூங்கவே முடியல்லே.
**தோழி:** ம்..நீ...கொடுத்து வெச்சவ!
**ஒருத்தி:** கோபத்தை கிளறாதடி.. இரவு முழுக்க மூட்டைப்பூச்சி தொல்லை!

**நர்ஸ்:** ஆறாம் நம்பர் ரூமில் இருந்த சர்க்கரை வியாதிக்காரரைக் காணோம் டாக்டர்.
**டாக்டர்:** சரியாத் தேடிப்பாருங்க! எறும்புங்க எங்கேயாவது இழுத்துக் கொண்டு போயிருக்கும்.

•

**தந்தை:** நம்ம பையன் பசு மாதிரி.
**தரகர்:** நல்லதாய் போச்சு. பொண்ணோட அப்பாவுக்கு இரண்டு மாட்டுத் தீவனக்கடை இருக்கிறது.

•




இவர்கள் படம் எடுத்தால் என்ன பெயர் வைப்பார்கள்?

பால்காரன்- 'மாட்'ல விசேஷங்க.
டெண்டுல்கர்- 'பேட்'ல விசேஷங்க
கான்ராக்டர்- 'ரோட்'ல விசேஷங்க
தீவிரவாதி- 'வேட்'ல விசேஷங்க
ஜெயலலிதா- 'கோட்'ல விசேஷங்க
வாட்ச்மேன்- 'கேட்'ல விசேஷங்க
சந்தன வீரப்பன்- 'காட்'ல விசேஷங்க
வைரமுத்து- 'பாட்'ல விசேஷங்க
மனைவி- 'பட்டுல' விசேஷங்க
கணவன்- 'பெட்'ல விசேஷங்க.

# விழியும் கதை சொல்லும்



அல்லிப்பூக் குளம். அதன் அருகே ஒரு அழகிய குடில். அந்தக் குடிலுக்குள் ஒரு பஞ்சணை. அந்தப் பஞ்சணையில் சாய்ந்திருந்தாள் நீலா.

பெயர்தான் நீலா. அந்தப் பேரழகுச் சித்திரத்தின் முகமோ நிறைவான நிலா.

அவள் அருகே பஞ்சணையின் மீதினிலே அமர்ந்திருந்தான் காளை. அவன் முகத்திலே உதட்டுக்கு மேலே இருந்து எச்சரிக்கை செய்வதுபோல் மிரட்டிக்கொண்டிருந்தது வெட்டரிவாள் வடிவ மீசை.

பஞ்சணையில் சாய்ந்திருந்த காரணத்தால் பருவ எழில் இரண்டும் விண்முட்டும் கோபுரத்தின் கம்பீர கலசங்களாய் காளையவன் விழிகளுக்கு காட்சி கொடுத்தன.

வைத்த விழி வாங்காமல் கொவ்வைப் பழங்களைப் பார்க்கின்ற கொத்தும் கிளிபோல, தன் கழுத்தின் கீழே செழித்திருக்கும் கனிகள் மீது காளையவன் குவித்துவிட்ட பார்வை கண்டு பாவையவள் வெட்கத்தில் வீழ்ந்து போனாள். பஞ்சணையில் பூங்கொடியாய் கிடந்த உடலை மெல்ல அசைத்தாள்.

பாற்கடலில் உள்ள அமுதெல்லாம் அமுதல்ல. பாவையிவள் இதழ்களிலே கிடைக்கின்ற அமுதன்றோ அளவற்ற சுவையாகும் என்று காணும் விழிகள் களி கொள்ளும் ஈர இதழ்கள் காளையவன் பெயரை உச்சரித்தன.

"வில்லவரே."

வில்லவன். அதுதான் அவன் பெயர். வில்லவரே என்று அந்த மீன் விழியாள் தன் தேன் சொரியும் செவ்விதழால் உச்சரித்தபோது, வில்லவன் உள்ளத்திலே உவகை கொப்பளித்தது.

அழகு இராச்சியம் முன்னால் விரிந்திருக்க, அந்த இராச்சியத்தின் மீது விழிகள் இரண்டும் உலா நடத்திக்கொண்டிருக்க, காரிருள் நேரத்திலே கைப் பொருளை தொலைத்தவன் கதிபோல, காரிகையின் பேரெழில் இராச்சியத்தில் தன் சித்தத்தை இழந்துவிட்டு தடுமாறிக்கொண்டிருந்தான் வில்லவன்.

அவள் இதழ்கள் உச்சரித்தது செவியில் பட்டபோதும், விழிகளின் ஆராய்ச்சிக்கே இப்போது வேலையிங்கே, உதடுகளின் பேச்சுக்கு உத்தரவில்லை என்பது போல மௌனமாய் இருந்தபடி மலர் உடல் மீது விழி உலா நடத்திக் கொண்டிருந்தான்.

கரங்கள் படாதபோதும் அவன் விழிகள் படும் இடங்களில் எல்லாம் உணர்ச்சிகள் துடிக்கிறதே. இவன் விழிகளே இந்தப் பாடுபடுத்தினால், வைரம் பாய்ந்தது போல் இருக்கும் கரங்கள் பட்டால் அப்பப்பா... என்றெல்லாம் உள்ளத்தில் எழுந்த எண்ணங்களால் நீலாவின் மனம் ஆனந்த உலகில் சஞ்சரித்தது.

மீண்டும் அழைத்தாள்,

"வில்லவரே."

இம்முறை சற்று உரத்து உச்சரித்தமையால், வில்லவன் உதடு திறந்து,

"என்ன நீலா?"

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?"

"பார்க்கவில்லையே."

"இந்தப் பொய்தானே வேண்டாம் என்கிறேன்."

போலியான கோபம் தன் குரலில் காட்டினாள்.

வில்லவன் உதட்டிலே ஒரு குறும்பான புன்னகை எட்டிப்பார்த்தது.

அவன் விழிகளோ சிற்றாறு காட்டும் சுழிபோல, சிறுத்த இடையின் கீழே அளவாக செதுக்கியது போல் பெருத்திருந்த வயிற்றிலே தெரிந்த சுழி மீது பதிந்தன.

ஆற்றின் சுழியைவிட ஆபத்தானது இது. சுழியில் சிக்கினால் உயிர்தானே போகும். இங்கே உள்ளமும் அன்றோ போகிறது என்று நினைத்து வியந்தபடியே பாவையின் கேள்விக்கு பதில் சொன்னான் காளை.

"பொய் சொல்லவில்லை நீலா. உன்னிடம் நான் பொய் சொல்லவும் விரும்புவதில்லை."

"இருக்கும். இருக்கும்."

கேலியாய் உதடு சுழித்துப் பழிப்புக் காட்டினாள்.

"என்னைக் கேலி செய்யும் உதடுகள் அதற்குரிய கூலியையும் தரவேண்டியிருக்கும்."

"என்ன கூலி?"

தெரிந்தும் தெரியாதது போல் கேட்டாள் கொத்துமல்லிச் சரம் போல் பஞ்சணையில் கிடந்தபடி,

புதிர் கலந்து பதில் சொன்னான் காளை,

"அளவிட முடியாதது. ஆனால் அள்ள அள்ளக் குறையாதது."

கேள்விகளில் குறும்பு தெரிய கோல மயில் மீண்டும் கொஞ்சும் இதழ்களில் கேள்வி அமர்த்தினாள்,

"அது என்ன?"

இனியும் பேசிக்கொண்டிருந்தால் கண்ணிருந்தும் கலாப மயிலை இரசிக்க முடியாத இரசனையற்றவன் போல, கையிருந்தும் கனி பறிக்க வழி தெரியாதவன், போல் உதடு இருந்தும் உவகை தரும் பானத்தை உறிஞ்ச முடியாதவன் போல் ஆகிவிடுவேனோ என்று நினைத்தான் காளை. எனவே சொன்னான்,

"உன் வினாவுக்கு நிச்சயமாய் விடை வேண்டுமா நீலா?"

"வேண்டும். வேண்டும்."

"வெல்லம் போல் இனிக்கிறது உன் விடை. உன் உத்தரவே எனக்கு வேதம். சில வினாக்களுக்கான பதிலை சொற்களால் விளக்க முடியாது."

அவன் குறிப்பால் உணர்த்தியதை நீலா புரிந்துகொண்டாள்.

விழிகள் உயர்த்தி அவன் விழிகளைச் சந்தித்தாள். நான்கு விழிகளும் ஒன்றையொன்று விழுங்கத் துடித்தன. விழுங்கத் துடித்த விழிகளுக்கு உள்ளங்களில் விளைந்த இன்ப வேட்கையும் புரிந்தது.

நீலாவின் விழிகள் சொன்ன கதை வில்லவன் விழிகளால் விளங்கப்பட்டது. நீலா மீண்டும் தொடுத்த வினா அந்த விளங்கிய கதையை புரட்டிப் படிக்க வைத்தது.

"பின்னர் எப்படியாம் விளக்கம் சொல்வது?"

நீலா கேட்க, வில்லவன் ஒரே வரியில் விடை சொன்னான்,

"இப்படித்தான்!"

எப்படித்தான் என்று கேட்க நீலாவின் இதழ்களுக்கு வழி இல்லை. அவள் இதழ்கள் இப்போது அவள் வசம் இல்லை. காளையின் உதடுகள் கரு வண்டாக, அந்தக் கோதையின் இதழ்கள் மகரந்த மலர்களாயின.

வில்லவன், தன் உதடுகளுக்கு சிறிது ஓய்வு கொடுத்தபடி சொன்னான்,

"நீலா என் விழிகள் அப்போது பார்க்கவில்லை. பருவ எழில்கள் பருகி பசியாறிக் கொண்டிருந்தன. இப்போது விழிகளுக்கு வேலை இல்லாத் திண்டாட்டம்."

மயக்கமாய், பஞ்சணையில் மேனி இருந்த போதும் பரவச உலகில் உணர்வுகள் மிதக்க, நீலா பலவீனமான குரலில் கேட்டாள்,

"ஏனாம்?"

பதில் சொன்னான் காளை,

"உதடுகளுக்குத்தான் இனி வேலை. உள்ளத்திலே மலர்ந்து கொண்டிருக்கிறது பசும் சோலை."

# இலக்கிய நயம்

உதடுகளை மெல்ல நெற்றியில் பொருத்த,

"போதும் விடுங்கள்."

என்றாள் பாவை. பலவீனமான தடை. அவள் விழிகளைப் பார்த்தான் காளை. அவள் உதடுகள் சொன்னதை ஒத்துக் கொள்ளாதவை போல் பஞ்சணை விழாவுக்கு உத்தரவு சொல்லின விழிகள். உற்சாகமானான் காளை.

இனி நமக்கு அங்கென்ன வேலை? திருவள்ளுவரிடம் நீட்டுவோம் கேள்வி ஓலை. விழிகளில் அப்படி என்ன வித்தை இருக்கிறது?

சொல்லாமல் மறைத்தாலும் விழிகள் சொல்லிவிடும் செய்தி இருக்கிறது. அது காதலர் விழிகளின் பரிபாசை.

அடடா...வீசும் விழிகள் பேசுமோ இன்ப மொழி? ஆம் என்கிறது குறள்.

***"கரப்பினுங் கையிகந் தொல்லாநின் உண் கண் உரைக்க லுறுவதொன்று உண்டு."***

அதிகாரம் 128–குறள்–1271

## குறுக்கெழுத்துப் போட்டி இல–42

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | 2 | ■ |
| | 3 | | | 4 | | 5 |
| 6 | | | ■ | | | |
| | | ■ | 7 | ■ | | |
| ■ | | ■ | | ■ | | ■ |
| 8 | ■ | 9 | | | | 10 |
| 11 | | | | | ■ | |

### இடமிருந்து வலம்

1. தற்போதைய காலநிலையில் இது கொஞ்சம் அதிகம் தான்.
3. ராகம் ஒன்று.
6. சமையலில் உபயோகமாகும்.
9. தியாகிகளை இதற்கு ஒப்பிடுவதுண்டு.
11. கப்பலின் தரிப்பிடம்.

### மேலிருந்து கீழ்

1. இது வந்தால் சிலருக்கு முகம் சிவக்கும்.
2. இதுவும் ஒரு பறவை.
3. இலங்கைக் காடுகளில் அதிகம் இருக்கிறது.
4. இத்தாலியில் இருக்கும் கோபுரம்.
5. விளையாட்டுப் போட்டிகளின் போது இதன் ஓசையும் கேட்பதுண்டு.
7. இதற்கும் சுழுக்கு வரும். (தலைகீழாக உள்ளது)
8. இது மனதில் இருக்கக்கூடாது.
10. தவம் இருப்பவர்.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 26.03.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-42**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்,**
**கிருலப்பனை**
**கொழும்பு -05.**

*சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.*

## குறுக்கெழுத்துப் போட்டி இல-40க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 வ | ரு | மா | ன | வ | ரி | ■ |
| ண் | ■ | 2 நா | 3 க | ம் | ■ | 4 க |
| டு | 5 கா | வ | ல் | ■ | 6 நூ | ல் |
| ■ | த | ல் | கி | 7 அ | ■ | ல |
| 8 ப | ணி | ■ | ■ | 9 பா | ச | றை |
| த | ■ | 10 ஆ | ல | ய | ம் | ■ |
| 11 வி | ர | ல் | ■ | 12 ம் | ன | கா |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.40இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. இன்பமலர் மகாலிங்கம் வாழைச்சேனை.
2. கே. ரவிக்குமார் கொழும்பு-05.
3. எம்.ஏ. கமால் புத்தளம்.
4. இ. சுப்ரமணியம் கண்டி.
5. என். முகம்மது நிஜாம் வாழைச்சேனை.
6. இ. பன்னீர் செல்வம் குருநாகல்.
7. ஆர். வேதநாயகம் மட்டக்களப்பு.
8. ஏ. நௌசாத் கல்முனை.
9. ஆர். தமிழரசி சிலாபம்.
10. எம். தவமணி பண்டாரவளை.

**இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.**

# சிந்தியா பதில்கள்

மனச்சாட்சி இல்லாத மனிதர்களை எதனோடு ஒப்பிடலாம்?

க.புஸ்பா-வெலிமடை.

*உயிரற்ற உடலோடு.*

இலங்கை கிரிக்கெட் குழுவுக்கு அர்ஜுன ரணதுங்கா தொடர்ந்தும் தலைமை வகிக்க வேண்டுமா?

தி.சந்திரகுமார்-ராகலை.

*தற்போதைக்கு அவரே ஏற்றவர்.*

முதல் இரவு - முதல் முத்தம் - முதல் சம்பளம் எது இன்பமானது?

எச்.எம்.மஸ்னவி-புத்தளம்.

*முதல் முத்தம்.*



பெனாசிர் பூட்டோ

டியர் சிந்தியா! நடந்து முடிந்த கிழக்கு மாகாண உள்ளூராட்சி தேர்தல் பற்றிய தங்கள் அபிப்பிராயம் என்ன?

சந்-ராமஜெயம்-எட்/அல்கொள்ள எஸ்டேட்

*தரமான கீரைக்கடை இல்லாத நிலையில் மோசமான கீரைக்கடைகளிலும் வியாபாரம் நடந்திருக்கிறது. அழுகிய கீரைகளும் விற்பனையாகியுள்ளன.*

நீங்கள் விரும்பும் மனிதன்?

எஸ்.தேவிகா-அபுகஸ்தென்ன.

*வால் இல்லை, நாலுகால் இல்லை என்பதற்காக எல்லோரையும் மனிதர் என்று சொல்லிவிட முடியாத காலம் இது. உண்மையான மனிதராய் வாழும் எவரும் நேசத்துக்குரியவர்களே.*

விலை கொடுத்து வாங்க முடியாதவை மூன்று?

கே.சந்திரகலா-கொழும்பு-6.

*தாய்மை-நட்பு-காதல்.*

தேனாகப் பேசி நஞ்சாக மாறும் நண்பர்களைப் பற்றி?

எம்.எம்.சார்புநிஸ்-முள்ளிப்பொத்தானை.

*உதடுகள் உச்சரிப்பதை மட்டும் வைத்து உள்ளத்தை எடைபோட்டுவிடக் கூடாது என்பதற்கு உதாரணமானவர்கள்.*

அலை பாயும் மனதிற்கு அணையொன்று உண்டா?

எம்.எச்.எம்.றிஸ்வான்-திருகோணமலை.

*உண்டே- நிதானம்.*

முத்தம் கொடுப்பது ஆசைக்கு அடையாளம். முத்தம் பெற்றுக்கொள்வது?

பி.எம்.நியாஸ்-கல்பிட்டி.

## விடியும்வரைதான் பெண் அழகா?

*ஆசைகளை பரிமாறிக்கொள்வதற்கு அடையாளம்.*

"விடியும் வரை பெண் அழகு" என்று கவிஞர் வைரமுத்து எழுதியது சரியா-தப்பா?

ஜெ.காவியா-நீர்கொழும்பு.

*வைரமுத்து கூட வழுக்கி விழுந்து விட்டதை காட்டும் வரி அது. யானைக்கும் அடி சறுக்கும் என்பார்கள். கவிஞர் வைரமுத்துவுக்கும்...? விடியும் வரை மட்டுமல்ல வாழும் வரை பெண் அழகு.*

"அமைதிப்படை" படம் எப்படியிருக்கிறது?

வீ.ராம்குமார்-கொழும்பு-11.

*சாக்கடை அரசியலுக்கு சரியான அடி. மூடப் பழக்கங்களுக்கும் நயமான கிண்டல். மொத்தத்தில் அச்சா.*

புலிகள் வடக்கில் கொண்டுவரப்போகும் சீதனத் தடைச் சட்டம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

எ.மகிந்தகுமார்-மட்டக்களப்பு.

*பெண் விடுதலை பற்றிய நோக்கில் வரவேற்கப்படவேண்டிய வலிமையான சில நடைமுறைகளை புலிகள் அறிமுகம் செய்வது சந்தோசமான விசயமே.*

ஹலோ சிந்தியா! உலகில் பேராசைப் படுபவர் யார்?

ஏ.எம்.முஹ்ஸின்-தோப்பூர்.

*மனிதர்கள்தான். எனினும் ஆசை வேறு. பேராசை வேறு. ஆசையே துன்பங்களுக்கு காரணம் என்பது தவறு. பிடிப்பில்லாத வாழ்க்கையில் சந்தோசம் வராது.*

கற்பனை செய்வதில் மிகச் சிறந்தவர் எழுத்தாளரா? கவிஞரா?

ஏ.எம்.இப்திகார்-புத்தளம்.

*இருவரும் எழுத்தாளர்கள்தானே இப்திகார்! கலை இலக்கியவாதிகளின் சிறப்பை அவர்கள் வெளிப்படுத்தும் படைப்பை வைத்தே தீர்மானிக்க வேண்டும்- படைப்பவர் யார் என்று பார்த்தல்ல.*

தொடர்ந்து சோதனைகள் ஏற்படும் ஒருவருக்கு மனம் தேற ஆறுதல் சொல்வது எப்படி?

செல்வி.கருப்பசாமி பத்மாவதி-இறக்குவானை.

*தடைகளும், சோதனைகளும் வருவதே உன் மனப் பலத்தை எடை போடத்தான் என்று நினைத்து அடுத்த அடியை முன்னே எடுத்து வைக்க வேண்டும்.*

மதம் விட்டு மதம் மாறும் மனிதர்களைப் பற்றி கூறுங்களேன்?

கே.வின்சன்-சத்துருக்கொண்டான்.

*மத நம்பிக்கைகள் அவரவர் தனிப்பட்ட சொந்த விவகாரம். அடுத்தவர் அதற்குள் எட்டிப்பார்த்துக் கருத்துக் கூறுவது சரியல்ல.*

பாகிஸ்தான் பிரதமர் பெனாசீர் பூட்டோ பற்றி உங்கள் கருத்து?

வே.துளசிநாதன்-வவுனியா.

*தோல்வி கண்டு துவளாமல் தொடர்ந்து போராடி ஜெயித்துக் காட்டியிருப்பவர்.*

(19ம் பக்க மகாபாரதம் தொடர்ச்சி)

ஒன்றாக இணைத்து அந்தப் பந்தை வெளியே எடுத்துத் தந்துவிட்டார்.

பீஷ்ம: ஆகா! அந்த மகா புருடர் இப்போது எங்கே?

அர்ச்: அங்கேதான் இருப்பார். நான் இங்கு இதனைத் தங்களிடம் கூற ஓடிவந்து விட்டேன். யார் தாத்தா அவர்?

பீஷ்ம: அவர்தான் குருதேவர் துரோணாச்சாரியார். வா அவரிடம் போகலாம்.

•••

பீஷ்ம: அஸ்தினாபுரம் தங்கள் வரவால் பெருமை பெறுகிறது மகா குருதேவரே! மகாராஜா சார்பில் தங்களை வரவேற்கிறேன்.

துரோ: வாரும் கங்கையின் மைந்தனே! கிருபாச்சாரியார் எப்படி உள்ளார்?

பீஷ்ம: தங்களை அழைத்து வரும் நோக்குடன் தானே அவர் சென்றார். குலகுருவாக ஆக்கப்பட்டபின்னர் அவருடைய கடமைகள் அதிகரித்துவிட்டன. அரச குலப் பிள்ளைகளுக்கு கல்வியும் வித்தைகளையும் புகட்டும் பொறுப்பினை தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

துரியோதனனுடன் சகுனி வருகிறான். தங்க நாணயங்களை துரோணரிடம் கொடுக்கிறான்.

துரோ: (கோபத்துடன்) கல்வி புகட்டுதல் முடிவடையாமல் நான் வெகுமதிகளை ஏற்க மாட்டேன்.

பீஷ்ம: கல்வியை தங்க நாணயங்களைக் கொட்டி வாங்கிவிட முடியாது காந்தார இளவரசர் சகுனியே! குருவுக்கும் மாணவர்களுக்குமிடையிலுள்ள உறவு இறைவனுக்கும் பக்தனுக்கும் உள்ள உறவினைப் போன்றது.

பின்னணிப் பாடல்:

*குரு குல முதல்வன் அவனே!*
*அருளுறை அறிவின் சுடரதும் அவனே*
*உண்மையின் உள்ளொளியதனை*
*உண்மை ஒன்றே உணரலாமன்றோ!*

தொடர்ந்து வரும்

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

# மகாபாரதம்

அங்கம் 21

**இவ்வாரம் (20.03.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்: பீமனுக்கு துரியோதனன் நஞ்சூட்டி ஆற்றில் வீசிய தகவலை யாரிடமும் கூறலாகாது என்று குந்தி பீமனுக்கு ஆணையிட்டார். நாகலோகம் வரை பரவிய கதையை எவ்வளவு காலம் முடிமறைக்க முடியும்? அறிவாளியான விதுரருக்குப் புரிந்துவிட்டது. வரலாறு அவரை அஸ்தினாபுரியின் அரியணையுடன் பிணைத்து வைத்துவிட்டது. விதுரருக்கு நம்பிக்கைக்குரிய ஒருவர் பீஷ்மர். அவரிடம் துரியோதனனுக்கும் பீமனுக்குமிடையில் நடைபெறும் சம்பவங்களை விதுரர் கூறுகிறார். பீஷ்மரோ தான் கொடுத்த வாக்குறுதியினை மீறமுடியாது தவிக்கிறார்.

-காட்சி தொடக்கம்-

பீஷ்ம: பீமன் யுதிஷ்டிரனிடம் உண்மையைக் கூறும்போது இடையில் தடுக்கப்பட்டது உண்மையா?

விதுர: ஆம் சித்தப்பா.

பீஷ்ம: அன்னை சத்தியவதி பாண்டுவின் மைந்தர்களை என்னிடம் அடைக்கலமாக ஒப்படைத்தார். எனது கடமைகளை நான் செம்மையாக நிறைவேற்றுகிறேனா மகனே?

விதுர: நீங்கள் துரியோதனனை அழைத்து அவனிடம் பேசிப்பாருங்களேன்.

பீஷ்ம: துரியோதனன் திருதராட்டினனின் மகன். துரியோதனன் மூலம் தனது ஆசைகளைப் பூர்த்தி செய்ய திருதராட்டினன் கனவு காண்கிறான். இவர்கள் என்னை இறக்கவும் விட மாட்டார்கள். அஸ்தினாபுரத்தின் அரியணைக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிகளைக் கண்டும் காணாமல் ஒதுங்கியிருக்கவும் முடியாத நிலையில் இருக்கிறேன். எதிர்காலத்தில் ஏற்படப் போகும் பிரச்சனைகளைப் பற்றி சிந்திக்காமல் அளித்த வாக்குறுதிக்குக் கட்டுண்டு, சுமக்க முடியாத சுமையால் நான் படும் வேதனை! இறைவா... இறைவா.. நான் என்ன செய்வேன்!

விதுர: சித்தப்பா! குருவம்சத்தின் பூரண சந்திரனாகிய தாங்களே கிரகணத்தால் மறைக்கப்பட்டால் அஸ்தினாபுர அரச வம்சத்தின் மீதும் இருள்படிந்து விடுமல்லவா? யதார்த்தத்தை எதிர் கொள்ள முடியாவிட்டால் இவ்வுலகில் வாழ முடியாது.

பீஷ்ம: நான் என்ன செய்ய? சொல்வதற்கு என்ன இருக்கிறது? இன்றைய சம்பவங்களால் எதிர்காலத்தில் இருள் கவியத்தான் போகிறது. திருதராட்டினனின் அபிலாசைகள் எனக்கு அச்சம் தருகின்றன. இன்று வளர்க்கப்பட்டுவரும் சிறிய நச்சுமரம் விரைவில் பெரு விருட்சமாகிவிடப் போகிறதே!

விதுர: அரசியல் தர்மப்படி இதனை முளையிலேயே கிள்ளிவிடவேண்டும்.

பீஷ்ம: இல்லை விதுரா. மரத்தை வெட்டினால் அஸ்தினாபுரி அரியாசனம் அழியும். இதனைக் காப்பாற்ற கடமைப்பட்டவன் நான். துரியோதனன் சிறியவன். அவனை வழிநடத்த திருதராட்டினனால் முடியாதிருக்கிறது. தனக்குள்ளேயே புழுங்குகிறான் அவன். அவர்கள் இருவருக்கும் சகுனி நஞ்சூட்டுகிறான். தனது தங்கை காந்தாரியை கண்ணிழந்த திருதராட்டினருக்கு மணம் முடித்து வைத்ததை துரோகம் எனக் கருதுகிறான் சகுனி. அஸ்தினாபுரத்தின் நன்மையைக் கருதி நான் தக்க சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறேன். நீரும் அவ்வாறே நடந்து கொள்வது நல்லது.

-காட்சி மாற்றம்-

அரண்மனை- சகுனியின் இருப்பிடத்துக்கு துரியோதனனும் துச்சாதனனும் வருகின்றனர். சகுனி அவர்களை வாஞ்சையுடன் அணைக்கிறான்.

சகுனி: காந்தாரியின் மைந்தர்களே! வருக! வருக!

துரியோ: மாமா! நீங்கள் தந்த விஷத்தை பீமனுக்குக் கொடுத்து அவனை ஆற்றில் வீசினோம். அவன் அதிக பலத்துடன் திரும்பிவந்து விட்டான்.

சகுனி: எனது அறிவுரைகளை கவனமாக நீங்கள் கேட்கவில்லை. அனுபவமற்ற உங்கள் அறிவுடன் எனது கருத்தைக் கலந்தீர்கள்... தோல்வி கண்டீர்கள். பீமனுக்கு நஞ்சூட்டியதை காந்தாரி அறிவாளா? பீஷ்மரை நான் நம்பினாலும் காந்தாரியை நம்ப முடியாது. அவள் அதிகம் நேர்மையாக நடக்கப் பார்க்கிறாள்.

துரியோ: இதுவரை அவன் எவரிடமும் கூறவில்லை.

சகுனி: நீங்கள் இருவரும் இனிமேல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஒரு சிறிய அசைப்பிலும் அவன் அருண்டு விடுவான். சிலகாலம் எட்டவே இருங்கள். உன் அப்பாவிடம் அவன் இச்சம்பவம் பற்றி முறையிட்டால் நீங்கள் நூற்றுக் கணக்கான குற்றச் சாட்டுகளை அவன் மீது சுமத்துங்கள்.

துரியோ: குருகுலப் பள்ளிக்குச் சில காலம் போகாதிருக்கலாமோ என்று எண்ணுகிறேன்.

சகுனி: அது தவறு. எதுவுமே நடவாததுபோல் அவன் பாசாங்கு செய்வான். அதே போல் நீங்களும் நடந்துகொள்ளுங்கள்.

சகுனி பகடையை உருட்டுகிறான். ஏழு விழுகிறது.

-காட்சி மாற்றம்-

மாந்தோப்பு-துரியோதனனும் துச்சாதனனும் மாங்காய் திருடுகின்றனர்.

துரியோ: பழங்கள் சுவையாக இருக்கின்றன.

துச்சா: மாங்காய் பறிப்பதானால் மரத்தில் ஏற வேண்டுமே... அதோ பீமன் வருகிறான்.

பீமன்: துரியோதனா நீ எனக்குப் பாயாசம் தந்து நீண்ட நாட்களாகி விட்டனவே!

துரியோ: உன்னிடம் பேச நேரமில்லை. நாங்கள் மாம்பழம் சாப்பிடப் போகிறோம்.

பீமன்: மரம் ஏறமுன் என் முதுகைக் கொஞ்சம் சொறிந்து விடேன்.

துரியோ: நாங்கள் உன் வேலைக்காரர்கள் அல்லவே! *(மரத்தில் ஏறுகிறான்)* துச்சாதனா மேலே ஏறு!

பீமன்: துச்சாதனா நீயாவது என் முதுகைச் சொறிந்துவிடப்பா.

இருவரும் மரத்திலேற பீமன் தன் முதுகை மரத்தில் தேய்க்கிறான். மரம் ஆட இருவரும் கீழே விழுகின்றனர். கீழே விழுந்த மாம்பழத்தை எடுத்து பீமன் சுவைக்கிறான்.

துரியோ: இரு இரு அப்பாவிடம் போய்ச் சொல்கிறேன்.

-காட்சி மாற்றம்-

அரண்மனை-திருதராட்டிரன், காந்தாரியிடம் துரியோதனன் முறையிடுகிறான்.

திருத: பீமா! நீ ஏன் அவர்களை வீழ்த்தினாய்?

பீமன்: மரத்தில் நான் முதுகைச் சொறிந்தேன்.

துரியோ: இல்லை இவன் பொய் சொல்கிறான்.

காந்தா: மகனே பீமா! நீ பொய் சொல்கிறாயா?

பீமன்: பொய்தான் சொன்னேன். உண்மையைச் சொன்னால் உங்களுக்கு வேதனை தரும்.

காந்தா: மகனே துரியோதனா! பீமன் சிறுபிள்ளைத்தனமாக நடந்தாலும் அண்ணன் யுதிஷ்டிரனிடம் முறையிடலாம் அல்லவா?

துரியோ: அவர் தன் தம்பி பக்கம் தானே சார்வார்?

காந்தா: அவனும் உன் அண்ணனல்லவா?

துரியோ: இல்லை. இந்த அரச குடும்பத்தின் தலைமகன் நானே. அவர்கள் குடும்பத்துக்கு அவர் மூத்தவராக இருக்கலாம்.

காந்தா: இங்கு வா மகனே பீமா! சகோதரர்களிடத்தில் ஒற்றுமையே குடும்பத்துக்கு ஆதாரம் அல்லவா!

பீமன்: அவன் அத்தகைய உறவை விரும்பவில்லையே. அவன் எப்போதும் என்னை குண்டன்-தடியன் என்று திட்டி எனக்கு கோபமூட்டுகிறான். ஒருநாள் மாம்பழம் பிடுங்கப் போனோம்...

-காட்சி பின்நோக்கு-

மாந்தோட்டம்- பீமன், துரியோதனன் மற்றும் துச்சாதனன் மாம்பழம் பிடுங்குகின்றனர்.

பீமன்: போதும்...இறங்கி வாருங்கள்.

துரியோ: ஆமாம்! நான் இறங்குகிறேன். *(கீழே இறங்கியதும்)* பார் எல்லாப் பழங்களிலும் சேறு ஒட்டிக்கிடக்கிறது. நீ இங்கேயே இரு. நாங்கள் கழுவிக் கொண்டு வருகிறோம்.

பீமன் அவ்விடத்திலேயே தூங்கிவிடுகிறான். பழங்களை கௌரவ சகோதரர்கள் உண்டபின் வெறும் விதைகளை மட்டும் பீமனிடம் கொண்டு வருகின்றனர்.

துரியோ: பீமா...! பீமா! எழுந்திரு...

பீமன்: எங்கே எனக்கு மாம்பழம்...? இதெல்லாம் வெறும் விதைகள் மட்டும்தானே!

துரியோ: பழங்களைத் தண்ணீரில் கழுவினோம். சதைகள் அத்தனையும் கரைந்து இது மட்டும்தானே மிஞ்சியது. நாங்கள் என்ன செய்ய முடியும்?

துரியோதனனும் துச்சாதனனும் சிரிக்கின்றனர்.

-பின்நோக்கு முடிவு-

பீமன்: இதுதான் சகோதர உறவின் லட்சணமா அம்மா?

காந்தா: பார்த்தீர்களா பிரபு!

திருத: துரியோதனனை குறை கூறவேண்டாம் காந்தாரி! எனது உள்ளத்தில் மூண்ட தீ துரியோதனனுடைய இதயத்தையும் தீண்டிவிட்டது. எனது வேதனையை சகிக்கப் பழகிக் கொண்டேன் அவன் சிறுவன் தானே! எனது அபிலாசைகளை விழுங்கி ஏப்பமிட்ட அரச பாரம்பரிய சட்டங்கள் அவனுக்கு பூதாகாரமாகத் தோன்றுகின்றன.

எனக்கு இழைக்கப்பட்ட அதே அநீதி என் மகனையும் தீண்டவே விதி சதி செய்யும் காலம் வரும் போலத் தோன்றுகிறது. இரவிலும் பகலிலும் இந்த எண்ணமே என்னை ஆட்டிப் படைக்கிறது. அஸ்தினாபுரியின் அரச வாரிசு யார் என்பதை நிர்ணயிக்கும் பிரச்சினை எழத்தான் போகிறது.

காந்தா: வயதின்படியும் தகுதியின் அடிப்படையிலும் யுதிஷ்டிரன்தானே வாரிசாக முடியும்!

திருத: கபடமின்றிக் கூறிவிட்டாய். நான் அந்தகனாகவே பிறந்தமையினால் மகுடமிழந்தேன். என் மகன் குருடனல்லவே! அவனுக்கு மகுடம் கிடைக்காமலாக்குவதற்கு எத்தகைய கொடுமையான சட்டம் குறுக்கிடப் போகிறது என்பதனைப் பார்க்கத்தான் போகிறேன்.

காலத்தின் குரல்: பல நூற்றாண்டு காலம் தேங்கிய தண்ணீரைக் கொண்ட குளம் நாற்றமெடுப்பதுபோல் அஸ்தினாபுரம் சீரழிவுகளின் இருப்பிடமாகி விட்டது. அதனை அலங்கரித்த பொன்னாடைகள் கிழிந்து தொங்குகின்றன. இங்கே வீசும் துர்வாடையை விட்டொதுங்கி சில காலம் உஜ்ஜெயினிக்குச் செல்கிறேன். அங்குதான் மனிதனாக அவதரித்த மகா விஷ்ணு மனிதர்களுக்கே உரிய அம்சங்களையே தனது வாழ்க்கையாகக் கடைப்பிடிக்கிறான். எல்லாம் அறிந்த அந்தப் பரம் பொருள் ஒரு குருவிடம் பாடம் கேட்டுப் படிக்கிறது. குரு சாந்திபனியிடம் கிருஷ்ணன் பாடம் படிக்கும் காட்சிகளைக் காண்போம்.

-காட்சி மாற்றம்-

சாந்திபனி முனிவரின் ஆசிரம குருகுலப் பள்ளி. கிருஷ்ணனும் மாணவர்களும் இருக்க குரு சுலோகம் கற்றுத் தருகிறார்.

கிருஷ்: குரு கூறிய சுலோகத்துக்கு எனக்குப் பொருள் விளங்கவில்லை. சுதாமா! நீ பிராமணன் அல்லவா? பொருள் கூறுவாயா?

சுதாமன்: உலகிலுள்ள அனைத்தும் பஞ்ச பூதங்களாலானவை. அத்தனையும் இறைவனில் அடக்கம். அவனே சகலமுமாவான். அறிவும் அவனே! ஆக்கமும் அவனே! உயிர்களனைத்திலும் அவன் உறைகிறான். இருந்தும் எவற்றுக்கும் அப்பாற்பட்டவனுமாவான் அவன்.

கிருஷ்: ஒன்றை மறந்துவிட்டாய்! நன்மை, நற்பணி, நல்வார்த்தைகள் அனைத்தையுமே அவன் கண்காணிக்கிறான். எல்லாவற்றையும் பார்க்கிறான்- கேட்கிறான்.

சுதா: உன்னைப் புரிந்துகொள்ள முடிவதில்லையே! எதையும் புரியாதவனாகவும் தோன்றுகிறாய். ஆனால் எல்லா அறிவும் பெற்றவனாகவும் விளங்குகிறாயே!

•••

சாந்திபனி முனிவரின் இல்லம்.

சுதா: அம்மா..!

குருமாதா: கிருஷ்ணனும் பலராமனும் பசியுடன் இருப்பார்கள். குருவின் போதனை முடிந்தபாடாயில்லை.

சுதா: எனக்குப் பசிக்கிறதே!

குருமா: நீ பிராமணன், பசி தாங்குவாய். அவர்களால் முடியாதே! கிருஷ்ணன் வராமல் உணவு பரிமாறமாட்டேன்.

சுதா: நந்தகோன் கிராமத்தில் இருவரும் வெண்ணை திருடித்தின்பார்கள். என்னால் பசி பொறுக்க முடியாது தாயே! நான் அடுப்படியில் உணவின் வாசனையை உறிஞ்சிக்கொண்டாவது கிடக்கட்டுமா?

குருமா: சாப்பாட்டைப் பற்றி மட்டும் எண்ணிக்கொண்டிராதே!

•••

குருவுடன் கிருஷ்ணனும் பலராமனும் வருகின்றனர்.

குருமா: இவர்களுடைய உணவைப் பற்றிய சிந்தனை இல்லையா உங்களுக்கு?

குரு: நான் ஆத்மாவைப் பற்றியே சிந்திப்பவன்.

குருமா: அதற்கும் உடல் சீராக இருக்க வேண்டும் அல்லவா? உடலுக்கும் உணவு தேவை. கிருஷ்ணா! உனக்கு வெண்ணை வைத்திருக்கிறேன்.

கிருஷ்: நந்தகோன் கிராமத்தைவிட்டு வந்தபின் வெண்ணை மீது நாட்டம் இல்லாமற் போய்விட்டது.

குருமா: நான் யசோதை இல்லை என்றாலும் ஒரு தாய்! கை கால்களை அலம்பிக் கொண்டு உணவு உண்ண வா சீக்கிரம்.

சுதா: எனக்கு பசிக்கிறது. இந்த ஏழை பிராமணன் மீது கருணை வைத்து உணவு உண்ண வா...

குருமாதா பரிமாற உணவு உண்ணுகின்றனர்.

கிருஷ்: போதும்... இதற்கு மேல் வேண்டாம்.

குருமா: சரியாகச் சாப்பிடாவிட்டால் படிப்பில் எப்படி கவனம் செலுத்தப் போகிறாய்?

கிருஷ்: எனக்குப் பசியில்லை அம்மா.

சுதா: அப்படியானால் அந்த உணவுத் தட்டை என்னிடம் தா...!

குருமா: சும்மா இரு. கிருஷ்ணனுக்கு நானே உணவு ஊட்டப் போகிறேன்.

பலராமன்: எப்படி? நானே முழு வேலைகளையும் செய்கிறேன். அவனுக்கு மட்டும் ஊட்டுவது பாரபட்சமல்லவா?

கிருஷ்: நீ மூத்தவன். நான் இளையவன். நீ சின்னவனாக இருந்தால் உனக்கும் இந்த உபசரிப்புக் கிட்டியிருக்கும்!

பலரா: வேண்டாம். நான் மூத்தவனாக இருப்பதே மகிழ்ச்சி.

குரு: உணவின் பின் எல்லாரும் உறங்கச் செல்லுங்கள். கிருஷ்ணா! சுதாமா!

கிரு: சுதா: குருவே!

குரு: நாளைக் காலை நீங்கள் இருவரும் காட்டுக்கு விறகு கொண்டு வரச் செல்லவேண்டும்.

கிரு: சுதா: அப்படியே குருவே!

பலரா: நானும் அவர்களுடன் போகலாமா?

குரு: இல்லை. நீ உழவுக்குச் செல்ல வேண்டும்.

•••

குருமா: கிருஷ்ணனுக்கும் பலராமனுக்கும் கல்வியை விரைவாக முடித்து அவர்களை அனுப்பிவிட வேண்டாம். அவர்கள் வந்த பின்னர்தான் நம் மகனின் மறைவுத் துயரை என்னால் மறக்க முடிந்தது.

குரு: கிருஷ்ணனைக் கட்டிப்போட யாரால் முடியும்? யசோதையாலும் நந்தகோபனாலும் முடியாததை உன்னால் சாதிக்க முடியுமா?

குருமா: நீங்கள் அவர்களின் குரு அல்லவா? உங்கள் வார்த்தைகளைத் தட்ட மாட்டார்கள்.

குரு: குரு மீன்பிடிகாரனல்ல- சீடர்களை வலையில் சிக்கவைக்க. கிருஷ்ணன் சகல ஞானமும் பெற்றவன். சூரியனை ஒரே குறிப்பிட்ட இடத்தில் மட்டும் ஒளிவீச வைக்க முடியுமா? தாயின் நிலை உனக்குத் தெரிந்ததே! தேவகியைப் பற்றி சிந்தித்துப்பார்.

குருமா: குருதட்சணையாக-கிருஷ்ணனை இங்கேயே தங்க வைக்கக் கேளுங்கள்.

குரு: நடக்கக்கூடிய காரியமா?

குருமா: மகனை இழந்த துக்கத்தை மறந்து கொண்டிருந்த எனக்கு கிருஷ்ணனின் வருகை மீண்டும் புத்திர சோகத்தை மூட்டிவிட்டது. அவனால் இழந்த மகிழ்ச்சியை மீண்டும் பெற்றேன்.

குரு: உனது மகிழ்ச்சி அடிப்படையற்றது. நீ ஒரு குருமாதா. கொடுப்பதே உன் கடமை. பிரதியுபகாரமாக எதையும் கோரமுடியாது.

-காட்சி மாற்றம்-

மதுராபுரி அரண்மனை-தேவகியும் வாசுதேவனும். தேவகி அழுகிறாள்.

தேவகி: அவனிடம் கோரிக்கை விடுக்க எனக்கு உரிமையுண்டு என்று நான் கூறவில்லையே! ஆனால் அவன் நினைவால் கண்ணீர் சிந்தவும் எனக்கு உரிமை கிடையாதா?

வாசு: அவனுடைய உண்மை உருவினை நீ அறிவாய் அல்லவா?

தேவகி: எனக்கு எல்லாமே தெரியும். அவனை வயிற்றில் சுமந்து பெற்றெடுத்தவள் நான். இருப்பினும் அவன் குழந்தைப் பருவத்தை- மழலையை அனுபவிக்காதவள் நான். அவனுக்கு தாலாட்டுப் பாடி அவனை யசோதைதான் வளர்த்தாள். நான் அவற்றுக்கெல்லாம் கொடுத்து வைக்கா தவள். யசோதாவுக்கு நான் என்றும் கடமைப்பட்டவள். பிறந்ததும் அவனை கோகுலம் கொண்டு சேர்த்தீர்கள். இப்போ உஜ்ஜெயினி போய்விட்டான். ஒரு தாயின் அன்பை அவனோடு பகிர்ந்துகொள்ள முடியாத பாபி நான்.

வாசு: தேவகி! அவன் உன் மகன்தான். ஆனால் அவன் உனக்கு மட்டும் சொந்தமானவனல்ல என்பதை மறக்காதே! அவன் அவனிக்கே பொதுவானவன். அவன் சுவையான தண்ணீர் நிறைந்த சமுத்திரம் போன்றவன். அந்தச் சமுத்திரத்தில் ஒவ்வொருவரும் நீர் அருந்தலாம். ஆனால் அது தனக்கு மட்டுமே உரிமையானது என சொந்தம் கொண்டாட முடியாது.

-காட்சி மாற்றம்-

ஆசிரமம்-குருமாதாவின் குடிசை.

குருமா: சுதாமா! கிருஷ்ணனைக் கவனமாகப் பார்த்துக்கொள்.

கிருஷ்: என்னைப் பற்றிக் கவலை வேண்டாம் அம்மா!

பலரா: யசோதா அம்மா அவனுக்குச் செல்லம் கொடுத்துக் கெடுத்து பழுதாக்கி விட்டாள் அம்மா.

குருமா: அப்படிச் சொல்லாதே! சிறுவர்கள் எப்போதும் குறும்புத்தனமாகத்தான் இருப்பார்கள். நீ அவனுடைய அண்ணன். அவனுக்கு அறிவுரை கூறலாம் அல்லவா?

பலரா: அவனைக் கட்டுப்படுத்த யாராலும் முடியாது. நான் அவனுடைய விஷயத்தில் தலையிடுவதில்லை.

குருமா: சுதாமா! இந்த உணவுப் பொட்டலத்தை எடுத்துக்கொள்..

கிருஷ்: ஒரு பிராமணனை பொதி சுமக்க வைக்கலாமா? நான் எடுத்துக் கொள்ளுகிறேன்.

பலரா: கிருஷ்ணனின் கபடத்தில் வீழ்ந்தாயானால் நீ பசியால் வாடவேண்டியிருக்கும்.

-காட்சி மாற்றம்-

கானகம்-கிருஷ்ணனும் சுதாம (குசேலர்)னும் விறகு பொறுக்குகின்றனர்.

சுதா: கிருஷ்ணா! நந்தகோன் கிராமத்தில் புல்லாங் குழலில் இசை பொழிவாயாமே! எங்கே கொஞ்சம் குழலூதிக் காட்டேன்!

கிருஷ்: எதற்கும் ஒரு கால நேரம் உண்டென்று குரு கூறியிருக்கிறார் அல்லவா? இது விறகு பொறுக்கும் நேரம். புல்லாங்குழலில் இசை பொழிந்த காலம் என் மட்டில் முடிந்து போன கதை. பழமையை நினைத்தால் மனம் துயரடைய ஆரம்பித்துவிடும்.

சுதா: உனது வார்த்தைகள் எதுவும் எனக்குப் புரியவில்லையே!

கிருஷ்: கதிரவன் மறைகிறான். இருள் சூழ்கிறது. விறகுகளை ஒன்று சேர்ப்போம்.

சுதா: ஆமாம் இரவாகி விட்டது. மழையும் வரும் போலிருக்கிறதே!

மழை பொழிகிறது.

சுதா: நாம் அகப்பட்டுக் கொண்டோம். இப்போது போனால் ஆறு பெருக்கெடுத்து அக்கரை செல்ல முடியாமற் போய்விடும். எனக்கோ நீந்தத் தெரியாது.

கிருஷ்: இன்று மழை விடப் போவதில்லை. இன்றிரவு இங்கேதான் தங்க வேண்டும்.

சுதா: புலியோ கரடியோ வந்து தாக்கினால் என்ன செய்வது?

கிருஷ்: மரங்களில் ஏறிக்கொள்ளலாம்.

-காட்சி மாற்றம்-

குருமாதா ஆசிரமத்தில் கவலையுடன் இருக்கிறாள்.

குருமா: அவர்கள் இன்னும் வரவில்லையா?

பலரா: கவலைப்பட வேண்டாம் அம்மா! சுதாமனை கிருஷ்ணன் காப்பாற்றுவான். அவன் எனது தம்பிதான். அவனுக்கு பயமே கிடையாது. எனக்கு உணவு கொடுங்கள்.

குருமா: கிருஷ்ணன் வராமல் எவருக்கும் உணவு கிடையாது.

•••

கிருஷ்ணனும் சுதாமன் என்கின்ற குசேலரும் இரு வேறு மரங்களில் ஏறியுள்ளனர்.

சுதா: கிருஷ்ணா! கிருஷ்ணா!பயப்படாதே! மரக்கிளையைக் கெட்டியாகப் பிடித்துக்கொள். மரக்கிளையை நான் தான் என்று எண்ணிக்கொள். குருமாதா உன்னைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளும் படி கூறியுள்ளார்.

சுதாமனிடமே உணவுப் பொட்டலம் இருந்தது. மரத்திலிருந்து இறங்கி கிருஷ்ணனிடம் உணவைக் கொண்டு செல்லப் பயந்து முழு உணவையும் தானே உட்கொண்டுவிடுகிறான்.

•••

ஆசிரமத்தில் குருமாதா கிருஷ்ணனைக் காணவில்லை என்ற கவலையால் தூங்காதிருக்கிறார்.

•••

பொழுது புலர்ந்ததும் கிருஷ்ணனும் குசேலனும் மரத்திலிருந்து இறங்கி விறகுக் கட்டுகளுடன் ஆசிரமம் புறப்படுகின்றனர்.

•••

ஆசிரமம்- குரு பூஜையிலீடுபட்டிருக்கிறார். சுதாமன் அவரை அணுகுகிறான்.

குரு: சுதாமா! வந்துவிட்டீர்களா? என்ன நடந்தது?

சுதா: குருதேவா! எங்களிருவருக்குமாக குருமாதா கொடுத்தனுப்பிய உணவை கிருஷ்ணனுக்குப் பகிர்ந்தளிக்காமல் நான் மட்டும் உண்டு விட்டேன். மன்னிப்புக் கோருகிறேன் குருதேவா.

குரு: ஆ..!ஆண்டவா! அது பெரும் தவறுதான். குசேலா! நீயாக உனக்கு வறுமையினைத் தேடிக் கொண்டாய். இதிலிருந்து கிருஷ்ணனால் மட்டுமே உன்னைக் காப்பாற்ற முடியும்! என்னிடம் உண்மையைக் கூறியமையினால் உன் பாபத்தைப் போக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

•••

சுதா: அந்தச் சம்பவத்தை குருமாதாவிடம் சொன்னாயா?

கிருஷ்: நண்பர்களுக்கிடையில் நடந்ததை வேறு யாரிடமும் கூறலாமா? உணவுப் பிரச்சினைக்காக உற்ற நண்பனை இழக்க நான் தயாரில்லை. குருமாதா பாயாசம் வைத்திருக்கிறார். வா போய் உண்போம்.

-காட்சி மாற்றம்-

பாண்டவர்களும் கௌரவர்களும் பந்து விளையாடிக் கொண்டிருக்கும் போது கிணற்றுள் பந்து விழுந்துவிட்டது. எடுக்க முடியாமல் தவிக்கும் வேளையில் அப்பகுதியால் துரோணாச்சாரியார் வருகிறார்.

பாண்டவர்கள் அவருக்கு வணக்கம் செலுத்துகின்றனர்.

துரோணர்: என்ன நடந்தது பிள்ளைகளே? கிணற்றில் யாராவது விழுந்து விட்டார்களா?

துரியோ: பந்து விழுந்துவிட்டது.

துரோ: இளவரசர்களாகிய உங்களால் ஒரு சிறிய பந்தைக் காப்பாற்ற முடியவில்லையே! நீங்கள் நாட்டையும் ஆட்சியையும் எப்படிக் காப்பாற்றப் போகிறீர்கள்?

துரி: ஆட்சிக்கும் பந்துக்கும் வித்தியாசம் அதிகம் உண்டே!

துரோ: ஆமாம்! ஆமாம்! உண்மைதான். சரி சில குச்சிகளைக் கொண்டு வாருங்கள்.

- பாண்டவர்கள் குச்சிகளையும் தடிகளையும் கொண்டுவர கௌரவர்கள் பார்த்துக்கொண்டே இருக்கின்றனர்.
- துரோணர் குச்சிகளை ஒன்றோடொன்றாக இணைத்து பந்தினை வெளியே எடுக்கிறார்.

-காட்சி மாற்றம்-

பீஷ்மரின் இருப்பிடம்- அர்ச்சுனன் வருகிறான்.

அர்ச்: தாத்தா!தாத்தா!

பீஷ்ம: என்ன! பீமனின் உணவை மீண்டும் களவாடிவிட்டாயா?

அர்ச்: இல்லைத் தாத்தா! நாங்கள் விளையாடிக் கொண்டிருக்கும் போது பந்து கிணற்றுள் விழுந்து விட்டது. அப்போது...


பீஷ்ம: துரியோதனனும் பீமனும் சண்டை போட்டார்களாக்கும்..!

அர்ச்: இல்லை தாத்தா... அங்கு வந்த ஒரு பெரியவர் குச்சிகளை ஒன்றோடு

(18ம் பக்கம் பார்க்க)












## கடுகு சிறிது-காரம்? யப்பா!

பெரிய இயந்திரங்கள், பல நூறு மனிதர்கள் இணைந்து செய்த வேலைகளையெல்லாம் இப்போது ஒரு சிறு கொம்பியூட்டரே கவனித்துக்கொள்கிறது. படத்தில் இருப்பது கொம்பியூட்டருக்குள் இருக்கும் மைக்ரோ புரொசெசர் என்னும் சிறு சிப். கடுகு சிறிது காரம் பெரிது என்பது இதற்கு மிகவும் பொருந்தும். ஒரு நொடியில் 15 கோடி கட்டளைகளை அட்டவணைப்படுத்தும். இதில் 17 இலட்சம் ட்ரான்சிஸ்டர்கள் இணைக்கப்பட்டுள்ளன என்பது நம்பமுடியாத உண்மை. இதன் பெயர் அல்பா 21064. ஆனால் இதைவிட சக்திவாய்ந்த கருவியும் வந்துவிட்டது. அதில், 31 இலட்சம் ட்ரான்சிஸ்டர்கள் இணைக்கப்பட்டுள்ளன.




## சாதனைச் சிலை

### கழிவுகளை ஏன் வீசவேண்டும்?

உலோகக் கழிவுகளைக் கொண்டு தான் இந்தச் சிலை உருவாக்கப்பட்டது.

வட இந்தியாவிலுள்ள நாஷிக் என்ற இடத்தைச் சேர்ந்த சுதிர் தேசபாந்து என்ற சிற்பியே இதனை உருவாக்கினார்.

1990 பெப்ரவரியில் திறந்து வைக்கப்பட்ட இச்சிற்பம் 17 மீட்டர் (55 3/4 அடி) உயரமானது. 27 தொன் எடை கொண்டது.

கழிவு உலோகத்தைக் கொண்டு உருவாக்கப்பட்ட இச்சிலையே, இந்த ரகத்தில் உலகில் மிகவும் பெரியது எனக் கணிக்கப்படுகிறது.

'மயூர் சிபுரா' (சக்தி வாய்ந்தது) என்று இச்சிற்பத்துக்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் சிலையை மொய்க்கிறார்கள்.

கின்னஸ் புத்தகத்திலும் பட்டியலோடு இடம்பெற்று உலக சாதனை என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.







★

தலைமுறை இடைவெளிகள் விரிசல்களை ஏற்படுத்துவதுமுண்டு. விருப்பங்களை விளைவிப்பதும் உண்டு.

பனை ஓலைகளில் எழுதப்பட்ட பழைய கவிதைகள் இன்று பார்த்தால் நமக்கு ஆச்சரியம். இன்று எழுதப்படுகின்ற மூன்று வரி ஹைக்கூ கவிதைகள் தாத்தாக்களுக்கு ஆச்சரியம்.

குழந்தையும் ஒரு புதிய கவிதைதான். உயிருள்ள, உணர்ச்சியுள்ள புதுக்கவிதை.

கொள்ளுத் தாத்தாவுக்கு ஆச்சரியம். தன்னைப் போலவே மூக்கும் முழியுமாய் கொள்ளுப் பேரனைப் பார்க்க வியப்பு. சிறிதாக்கப்பட்ட போட்டோப் பிரதிபோல தன் நகலாக இருக்கிறானே என்று ஆச்சரியம்.

சிறந்த புகைப்படமாக நான்காவது தலைமுறைகளின் சந்திப்பை பதிவு செய்தவர் குழந்தையின் பாட்டி ஜோவான் சாம்பான்ஸ். படத்திற்கு பரிசு கிடைத்துள்ளது. எல்லாவற்றையும் விட சிறந்த பரிசு கொள்ளுத் தாத்தாவின் கையில் உள்ள சின்ன ரோஜா.

## சரியான துணை!

ஜோன் பிரெண்டின் தனது 11வது வயதில் (1935) போலியோ நோய்க்கு ஆளானார். நடக்க முடியாத நிலையில் முடக்கப்பட்டார். சுவாசிப்பதிலும் இடைக்கிடை சங்கடம் ஏற்பட்டது. அதனால் செயற்கை முறையில் சுவாசிக்கத் துணையாக அழுத்தக் கருவி இணைக்கப்பட்டது. 1971ல் ஜோன் மனைவியை மணம் முடித்தார். அன்றிலிருந்து ஜோனின் செயற்கை சுவாசக் கருவியை இயக்குவதை கவனிப்பதே மனைவியின் தலையாய கடமையாகிவிட்டது.



அன்றிலிருந்து இன்றுவரை 316, 500,000 தடவைகளுக்கு மேல், தான் சுவாசிப்பதற்கு இக்கருவி உதவியிருப்பதாக ஜோன் பெருமைப்படுகிறார். இதனை ஒரு உலக சாதனையாக பதிவு செய்திருக்கிறது கின்னஸ் 94.

## பாதை தவறிய பயணம்




பிரிட்டனில் ஒரு படகுப் போட்டி. ஒன்றையொன்று முந்திச்செல்லும் வேகம். படத்தில் உள்ள படகை செலுத்தி வந்தவர் வேகத்தில் கவனம் செலுத்தினாரே தவிர பாதையில் விழிகளை செலுத்தவில்லை. அதனால் கடலின் நடுவே பாறைமீது ஏறி தடைப்பட்டு நின்றது பயணம். எனினும் படகுக்கு சேதமில்லை. ஆனால் வெற்றிக்கு சேதம். வேகமும் வேண்டும். விவேகமும் வேண்டும். போதும் பாதையில் கவனமும் வேண்டும்.